

கல்கி
KALKI
11.10.1970
40 காசு




விவா
இரு செயல் புரியும் ஆரோக்கிய பானம்
பகலில் உடலுக்கு உரமூட்டும்...
இரவில் நிம்மதியூட்டும்!
காலையில் விவா: பகல் முழுவதும் நீங்கள் களிர்த் துடிப்புடன் விளங்குவீர்கள்! விவாவிலுள்ள ஆடைப்பால் செழுமையாக்கப்பட்டுள்ளது—மால்ட், கோதுமை மற்றும் புரதச் சத்துக்கள் சேர்க்கப்பட்டு. இதைப் பருகினால், நீங்கள் நாள் முழுவதும் சக்திபெற்று உற்சாகமுடன் திகழ்வீர்கள்!
படுக்கும்போது விவா: இரவு முழுவதும் நிம்மதியுடன் உறங்குவீர்கள்! விவாவின் புத்துணர்வூட்டும் சுவையும், ஊட்டப் பொருள்களும் உங்கள் திசுக்களுக்கு உரமூட்டி, நரம்புகளுக்கு இதமூட்டி, தசைகளுக்கு வலுவூட்டுகின்றன. நீங்கள் நிம்மதியுடன் தூங்கி, காலையில் தெம்புடன் எழுவீர்கள்!
விவா, எளிதில் ஜீரணமாகக்கூடிய உணவுப் பானம்...பலவீனமானவருக்கும் உடல் தேறி வருபவருக்கும் சஞ்சீவி!
பருகுங்கள் விவா—ஆரோக்கியமூட்டும்!
நீரோ பாலோ கலந்தால் இன்சுவையூட்டும்!
VIVA
ViVA
இந்தியாவின் தயாரிப்பாளர்:
ஜகத்ஜித் இண்டஸ்ட்ரீஸ் லிட்.
Shilpi JI-2A/70 tam.

கல்கி பொருளடக்கம்

சாதாரண, புரட்டாசி 25 () 1970 அக்டோபர் 11

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை(இலங்கை நாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 40-00	ரூ. 20-00

பாரத கலாசாரத்தின் பேரிழப்பு

சென்னையின் சமூக வாழ்வுக்கு மாபெரும் இழப்பு ஏற்பட்டுவிட்டது; எந்த நல்ல பணியாயினும் அதில் இதயபூர்வமாக ஈடுபட்டுக் கௌரவம் ஊட்டிவந்த ஸ்ரீ கே. பாலசுப்பிரமணிய அய்யரவர்கள் இறைவன் திருவடி ஏகிவிட்டார்கள்.

மேல் சட்டசபையிலும், பல்கலைக் கழகத்திலும் பற்பல ஆண்டுகள் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்து, அரசியல்—கல்வித் துறைகளில் அரும் பணியாற்றியவர் ஸ்ரீ பாலசுப்பிரமணிய அய்யர். அவரது முக்கியமான பணி நமது சநாதன தர்மத்துக்கும், பாரதீய கலாசாரத்துக்கும் அவர் காவலராக விளங்கியதேயாகும். இவற்றுக்காக ஏற்பட்ட பற்பல நிறுவனங்களில் அவர் முக்கியமான பங்கு பெற்றிருந்தார். சம்ஸ்கிருதக் கல்லூரி, குப்புஸ்வாமி சாஸ்திரி ஆராய்ச்சி நிலையம் முதலியவற்றில் அவர் சிறப்புப் பணி செய்திருக்கிறார். ஆங்கிலத்தோடு சம்ஸ்கிருதம், தமிழ் இரண்டிலும் புலமை பெற்றிருந்த அவர், இரண்டையும் இணைத்துப் பேசி மகிழும் இயல்புடையவர். ''தென்மொழி தேன்மொழி; வடமொழி வாடா மொழி'' என்பார். பாரதியார் சங்கத்தின் தோற்றுவாய்க்குக் காரணமாயிருந்தவர்களில் அவர் ஒருவராவார். சென்ற ஆண்டில் சங்கரர் — ஷண்மத மகாநாட்டைச் சிறப்புற நடத்திக் கொடுத்த அறிஞர்களில் ஒருவர் அவர். காஞ்சி ஆசாரியர்களின் பூரண அநுக்கிரகத்துக்குப் பாத்திரராகி 'தர்மரக்ஷாமணி' என்ற விருதையும் பெற்றார்.

1927ல் சென்னையில் காங்கிரஸ் மகாநாடு நடந்தபோது பொருளாளராகத் திறம்படச் செயலாற்றிய அய்யரவர்கள், வசூலித்த நிதியில் கணிசமாகச் சேமிப்பும் செய்து, காங்கிரஸ் காரியாலயம் எழுப்ப வகை செய்தார். இந்தக் காங்கிரஸின் ஓர் அங்கமாக நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகள்தாம் மியூஸிக் அகாடெமிக்கு வித்திட்டன. ஸ்ரீ அய்யர் மியூஸிக் அகாடெமியின் டிரஸ்டிகளில் ஒருவராவார்.

பற்பல துறைகளில் பொற்பணி ஆற்றிய அய்யரவர்கள் பாரத அரசின் பத்மபூஷண் விருதைப் பெற்றவர்.

அனைவரிடமும் நட்புச் செலுத்தி, தமது முதிர்ந்த பிராயத்திலும் இளமைத் துடிப்புடன் விளங்கி, தாம் இருக்கும் சூழல் முழுவதிலும் நகைச்சுவையும், இன்பமும் பரப்பி, சென்னையின் சமூக வாழ்வுக்கே சோபை தந்தவர் ஸ்ரீ பாலசுப்பிரமணிய அய்யரவர்கள். அவரது ஸ்தானம் இனி வெறிச்சிட்டே கிடக்கும்!

ஸ்ரீ அய்யரவர்களின் குடும்பத்தினருக்கு நமது உளமார்ந்த அநுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்



உ. பி. அக்கிரமம்

சென்ற வாரம் நான் பின்வருமாறு எழுதினேன்:

''உத்தரப் பிரதேச மந்திரி சபை விஷயமாக ராஜ்ய கவர்னர் திரு கோபால ரெட்டி பெற்றுள்ள சட்ட நிபுணர் ஆலோசனை ஸ்ரீமதி இந்திரா காந்திக்குச் சாதகமாக இல்லை. எனவே உத்தரப் பிரதேசத்தில் ராஷ்டிரபதி ஆட்சியை மத்திய சர்க்கார் பிரகடனம் செய்யும் எனத் தோன்றுகிறது.... அக்டோபர் 6-ந் தேதி உ. பி. சட்டசபை கூடும்போது தமக்கு அதில் பெரும்பான்மை உள்ளதா, இல்லையா என்பதை நிரூபிக்க ஸ்ரீ சரண் சிங்குக்கு வாய்ப்பளிக்காமல் இவ்விதம் ராஷ்டிரபதி ஆட்சியை ஏற்படுத்தினால் அது அரசியல் சாஸனத்துக்கு முரணாக மனம் போனபடி நடந்ததாகும். கட்சிகளின் கூட்டு என்று சொல்வதில் ஏதோ ஒரு கட்சியின் ஆதரவு போய்விட்டதை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு மத்திய சர்க்காரோ, கவர்னரோ உரிமை பெற்றிருக்கவில்லை. ஏனெனில் கட்சிகளையும் அவற்றின் கூட்டையும் பற்றிய பிரஸ்தாபம் அரசியல் சாஸனத்தில் இல்லை. சட்டசபையின் பெரும்பான்மை பலம் ஒன்றையே சாஸனம் கருத்தில் கொண்டுள்ளது.''

நான் எதிர்பார்த்தது போலவே இப்போது உத்தரப் பிரதேசத்தில் ராஷ்டிரபதி ஆட்சி ஏற்படுத்தப்பட்டு விட்டது.

நக்ஸலைட்டுகளும், வேறு சிலரும் சட்டம், சமூக ஒழுங்கு ஆகியவற்றை மீறி வருவதைப் பார்த்து வருகிறோம். ஆனால் சட்டத்தையும் சமூக ஒழுங்கையும் மீறுவதில் அவர்களை மிஞ்சிவிட்டனர் மத்திய சர்க்காரும், உச்சிப் பீடத்தின் நிர்ப்பந்தப்படி நடக்கும் உ. பி. கவர்னரும். அவர்களின் செய்கை தனிமனிதர்கள் இழைக்கக் கூடிய அராஜகக் குற்றத்தையெல்லாம் ஒன்றுமில்லாமல் செய்து விட்டது.

உத்தரப் பிரதேசத்தில் அரசியல் சாஸனப்படி அமைந்த அரசாங்கத்தை எடுத்ததற்குக் கூறப்படும் காரணம், ஸ்ரீ சரண் சிங்குக்குப் பெரும்பான்மை பலம் போய்விட்டது என்பதே. இவ்வாறு முடிவு கட்டுவது சரியல்ல என்று ஸ்ரீ சரண் சிங்கும், உத்தரப் பிரதேச அட்வகேட் ஜெனரலும் ஆட்சேபம் எழுப்புகின்றனர். புதிய காங்கிரஸின் ஆதரவை இழந்த பின்னரும் உத்தரப் பிரதேச சட்டசபையில் ஸ்ரீ சரண் சிங்குக்குப் பெரும்பான்மையினரின் ஆதரவு இருப்பதாகவும் இதை முன்பு உத்தேசித்தபடி அக்டோபர் 6ந் தேதி சட்டசபையைக் கூட்டினால் உறுதி செய்ய முடியும் என்றும் சரண் சிங்கின் சார்பில் கூறப்பட்டது.

இச்சந்தர்ப்பத்திற்கேற்ப ஸ்ரீ சரண சிங்கின் செயலூக்கம் எழுச்சி பெற்றது குறித்து மகிழ்கிறேன். ''சட்டத்துறையில் மிக உன்னத ஸ்தானம் வகிக்கும் நிபுணர்கள் ஒருமுகமாக கவர்னரின் செயலை ஆட்சேபித்துள்ளனர். அது சாஸனத்தை மீறியது என அவர்கள் கருதுகின்றனர். முன்னாள் அட்டர்னி ஜெனரல் ஸ்ரீ ஸெடல்வாட், முன்னாள் ஸொலிஸிடர் ஜெனரல் ஸ்ரீ எஸ். வி. குப்தே, ஸ்ரீ எம். ஸி. சாக்ளா, டாக்டர் எல். எம். ஸிங்வி, முன்னாள் பிரதம நீதிபதி ஸ்ரீ ஸர்ஜூ பிரஸாத், முன்னாள் நீதிபதி ஸ்ரீ ஸி. பி. அகர்வால் முதலியோர் கவர்னரின் நடவடிக்கை சாஸனத்துக்கு முரணானது என்றும், மிகவும் முறையற்றது எனவும் வெளிப்படையாகக் கூறியுள்ளனர். உத்தரப் பிரதேசத்தின் அட்வகேட் ஜெனரலும், கவர்னர் இப்படி நடவடிக்கை எடுக்கலாகாது என்றே ஆலோசனை கூறினார்''– இவ்வாறு ஸ்ரீ சரண் சிங் ராஷ்டிரபதிக்கு அனுப்பிய தந்தி கூறுகிறது.

எங்கே ஸ்ரீ சரண் சிங் சட்டசபையில் தமக்குப் பெரும்பான்மை பலம் இருப்பதை நிரூபித்து விடுவாரோ, அதனால் ஸ்ரீமதி இந்திரா காந்தியின் திட்டங்கள் எப்படித் தகர்க்கப்படுமோ என்கிற என்

ணத்தில் ராஷ்டிரபதி ஆட்சியைப் பிரகடனம் செய்து விட்டார்கள். ஸோவியத் ருஷ்யாவில் சுற்றுப் பயணம் செய்து வரும் ராஷ்டிரபதி யின் கையெழுத்துப் பெறுவதற்காக இப் பிரகடனம் அனுப்பப்பட்டது. இதன் பல விளைவுகளில் ஒன்று சட்டசபையைக் கலைப்ப தாகும்.

சட்டப்படி நியமிக்கப்பட்ட முதன்மந்திரி ஒருவரை விலக்குவதற்காக இவ்விதம் சதி செய்யப்படுகிறது: இதற்கு நாணயமற்ற வேகம் காட்டப்படுகிறது. அரசியல் துர் நோக்கத்துக்காகச் செயல்படுவதில் இதைக் காட்டிலும் மோசமாகப் போக முடியாது.

இந்தியாவெங்கிலும் உள்ள நிதான புத்தி படைத்த அநுபவஸ்தர் அனைவரும் — பொது வாகப் பத்திரிகைகள் யாவும் — இதற்குக் கண்டனம் தெரிவித்திருப்பது யுக்தமே. இதில் உள்ள தவற்றை ஸ்ரீமதி இந்திராகாந்தி உணர மாட்டாரா ? இப்படியெல்லாம் செய்வதன் மூலம் அடைகிற பயன் எவ்வளவு அற்ப மானது என்பதை அவர் காண முடியாதா?

சாதுரியம் வேண்டியதுதான். ஆனால் அது மிகையாகி, எதிர் விளைவுகளை உண்டாக்கத் தொடங்கும் போது சாதுரியமே முட்டாள் தனமாகி விடுகிறது. சொந்த நலனுக்கு ஒரு தர்மச் சொத்தைத் துஷ்பிரயோகம் செய்து கொள்வது எப்படிப்பட்ட குற்றமோ, அதே போன்ற குற்றம்தான் அதிகார சக்தியைத் தனக்கு ஆதாயமானது என நினைக்கும் ஒன் றுக்காகத் துஷ்பிரயோகம் செய்வதும். ஒருவ ருக்குத் தரப்படும் அதிகார சக்தி, அவரிடம் ஒப்புவிக்கப்பட்ட தர்மகர்த்தாச் சொத்துப் போன்றதே என்பது ஓர் ஆங்கில அறிஞரின் அறிவுரை.

ராஜாஜியின் கருத்துக்கள்

‘குழப்பங்கள் மிகுந்துள்ள இவ்வுலகிலிருந்து விடைபெற்றுக் கொண்டு விட்டார், ஐக்கிய அரபுக் குடியரசுத் தலைவர் நாஸர். நவீன காலச் சரித்திரத்தில் அரபு மக்கள் கண்ட மகா சக்தி படைத்த தலைவரைக் காலன் கவர்ந்து சென்றுவிட்டான்.

ஜோர்டன் உள்நாட்டுப் போரை நிறுத்து வதற்காகச் சென்ற வாரம் ஜோர்டன் அரசர் ஹுஸேனும், பாலஸ்தீனத் தலைவர் யாஸர் அராஃபத்தும் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டதற்கு நாஸரே காரண புருஷர்.

இந்த மகா மனிதரின் மறைவு மேற்கூறிய விவகாரங்களில் சம்பந்தப்பட்டவர்கள் யாவ ரையும் இதயசோதனை செய்துகொள்ளத் தூண்டும் என நம்புவோமாக. அதன் விளை வாக, அமெரிக்கா ருஷியா இரண்டும் சேர்ந்து கூட்டாகச் செல்வாக்கைப் பிரயோகித்து

ஸ்ரீ அனந்தராம யதீந்திரர்

பிரவசன சக்கரவர்த்தியாக விளங்கி, இறுதியில் சந்நியாசம் பூண்ட சேங்காலிபுரம் ஸ்ரீ அனந்தராம யதீந்திரர் அவர்கள் மறைந்து ஓராண்டு பூர்த்தியாகிறது. அக்டோபர் 21ந் தேதியன்று சேலத்தருகேயுள்ள சின்ன திருப் பதியில் அமைந்த அவர்களது அதிஷ்டானத் தில் ஆராதனை நடக்கிறது. 15ந் தேதியி லிருந்து வைதிக கர்மாக்களும், பிரபலமான உபந்நியாச கர்த்தர்களின் பிரவசனங்களும் நடக்கின்றன. சமீப காலத்தில் ஆஸ்திக வளர்ச்சிக்கு ஒரு முக்கிய சக்தியாக விளங்கிய யதீந்திரர்களின் ஆராதனையில் ஆஸ்திகர்கள் பங்குபற்ற வேணும். ஆராதனை சிறப்புற நிறைவேறுவதற்கு அன்பர்கள், ‘ஸ்ரீ எஸ். ஏ. ராமகிருஷ்ணன், 3, இரண்டாம் க்ராஸ், மரவனேரி எக்ஸ்டென்ஷன், சேலம்’ என்ற முகவரிக்குப் பொருள் அனுப்பலாம்.

யதீந்திரர்களின் அதிஷ்டானத்தில் நினை வாலயமும் வேத பாடசாலைகளும் அமைப்ப தற்கான நன்முயற்சி மேற்கொள்ளப்பட்டிருப் பதை ஆஸ்திகர் உலகு அறியும். ஸ்ரீ சேங் காலிபுரம் அவர்களின் உபந்நியாசத்தாலும், உபதேசத்தாலும் பயனடைந்த அனைவரும் இக்கைங்கரியத்தில் பங்கு கொள்ள வேணும். பொருள் அனுப்ப வேண்டிய முகவரி: ஸ்ரீ அனந்தநாராயணன், பொருளாளர், அனந்த ராம யதீந்திரர் அதிஷ்டானக் கமிட்டி, ஆஸ் திக சமாஜம், ஆழ்வார்ப் பேட்டை, சென்னை—18.



மேற்காசியாவில் சமாதானம் உண்டாவதற்கும், இஸ்ரேல் மக்களுக்குப் பாதுகாப்பு ஏற்படுவதற்கும், அரபு மக்கள் திருப்தி காண்பதற்கும் வழி வகுக்கட்டும்!

★

தமிழகத்தில் சர்க்கார் துறையில் மது உற்பத்தி சாலை தொடங்கும் திவ்வியமான உத்தேசம் முன்பிருந்த காங்கிரஸ் அரசாங்கத்தின் காலத்திலேயே இருந்தது என்றும் அது இன்றைய தி. மு. க. சர்க்கார் வகுத்துள்ள புதுத் திட்டம் அல்ல வென்றும் கூறப்பட்டிருக்கிறது. இதனால் என் கருத்து மாறுபடவில்லை. இந்த உத்தேசத்தின் மூலகர்த்தர் யார் என்பது பற்றி எனக்குக் கவலையில்லை. முதலில் இந்த யோசனையை யார் பிரஸ்தாபித்திருந்தாலும் சரி, மது உற்பத்திசாலை தொடங்கும் திட்டம் அறிவீனமானது, அதருமமானது என்றே கருதி அதனை ஆட்சேபிக்கிறேன்.



நாஸர்

★

பிர்லா மாளிகையை ஆர்ஜிதம் செய்து, அங்கு மகாத்மா காந்திக்குத் தகுந்த ஞாபகார்த்தம் நிறுவுவதற்காக அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்று புதுதில்லிச் செய்தி கூறுகிறது.

1948 ஜனவரி 30ந் தேதியன்று தாம் கொலையுண்டதற்கு முன்பு மகாத்மாஜியே, தமக்காக ஞாபகார்த்தம் எழுப்பிக்கொண்டு விட்டார். இந்தியாவின் சுயாட்சி என்பது தான் அந்த ஞாபகார்த்தம். அந்த நினைவாலயம் முறைப்படி பராமரிக்கப்படவில்லை. அது சிதிலமடையும்படி விடப்பட்டுள்ளது. காந்திஜி செய்த அனைத்தையும் தகர்த்த பின்பு மக்களின் கண்ணைப் பறிக்கும் நினைவாலயம் எடுப்பதில் என்ன பயன்? காந்திஜி கொலையுண்ட இடத்தில ஞாபகார்த்தம் அமைப்பதால் அது காந்திஜியை விட அவரைக் கொலை செய்தவனையே ஞாபகத்தில் வைத்துக் கொள்ளச் செய்வதாகும். காந்திஜியின் உண்மையான ஞாபகார்த்தம் தில்லியின் ஆட்சி அலுவலகத்தில் கவனத்துடன் செய்யப்படும் காரியங்களிலேயே அமையும்.

★


லண்டன் சர்வ கலா சாலையைச் சேர்ந்த கீழ்த்திசை நாடுகள் — ஆப்பிரிக்க நாடுகள் பற்றிய ஆராய்ச்சிக் கழகத்தில் ஸ்ரீ கிருஷ்ண கிருபளானி, காந்தி நினைவுரை நிகழ்த்தியுள்ளார். சென்ற வாரம் நான் ஒப்புரவு பற்றி எழுதியிருப்பதற்கு மிகுந்த தொடர்புடையதாக அவர் கூறுகிறார்:

அரசாங்க சக்தி பற்றி காந்திஜிக்கு ஆழ்ந்த ஐயப்பாடு உண்டு. அரசாங்கத்தின் அதிகார சக்தி மக்களைப் பலவந்தப்படுத்துவதிலேயே உள்ளது என்றும், அதிகாரத்துக்காக எழும் பேராசைக்கு எல்லையே இல்லை என்றும் அவர் உணர்ந்திருந்தார். காந்திஜியைப் போற்றுபவர்களில் சிலர் அவர் ஒரு சோஷலிஸ்ட் என உரிமை பாராட்டுகிறார்கள். அது உண்மையாயின் அவரது சோஷலிஸம் தனித்தன்மை வாய்ந்தது. அரசாங்கத்தின் அதிகார சக்தி வாடி உதிர்ந்த பின்பே தொடங்குவது அவரது சோஷலிஸம்.

வாழ்த்துகிறோம்!

திரு எம். ஏ. எம். ராமசுவாமி தென் இந்திய தொழில் வர்த்தக சங்கத்தின் (Southern India Chamber of Commerce and Industry) தலைவராக நடப்பு ஆண்டுக்கு ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறோம். திரு ராமசுவாமி, ராஜா சர் எம். ஏ. முத்தைய செட்டியார் அவர்களின் புதல்வர். ஏற்கனவே இந்தச் சங்கத்தின் உப தலைவராக இருந்து தற்போது தலைவராயிருக்கிறார். பல நிறுவனங்களில் மானேஜிங் டைரக்டராகவும், டைரக்டராகவும், சேர்மனாகவும் விளங்கும் இவர் போலோ, டென்னிஸ், பாட்மிண்டன் போன்ற விளையாட்டுக்களிலும் ஆர்வமுடையவர். தமிழகத்தில் அவற்றின் வளர்ச்சிக்கு உதவியுள்ளார். தொழில் வர்த்தகத் துறையில் நிரம்ப அநுபவம் உள்ள இவர் இந்தப் புதிய கௌரவத்தைப் பெற்றிருப்பது ரொம்பப் பொருத்தமாகும். இவரது இந்தப் பதவி காலம் தமிழகத்துக்குப் பயனுடையதாக விளங்கட்டும்.




களைப்பா?
க்ளாக்ஸோஸ்-D
நிமிட நேரத்தில் சக்தி தரும்
நாள் தோறும் களைப்புத்
தோன்றும்போது நான்
அருந்துவது க்ளாக்ஸோஸ்-D
இன்றே
களைத்திடும்போது
க்ளாக்ஸோஸ்-D
அருந்துங்கள் —
குறைந்த விலையில்
உடனடி சக்தி
தரும் உணவு

dCA/GL/10 Tam



அத்தியாயம் இருபத்தெட்டு

பாதாளப் பாதை

நாற்புறமும் நன்றாகப் பார்த்து விட்டு ரவிதாஸன் திறந்திருந்த நில வறைக் கதவைச் சுட்டிக் காட்டிச் சோமன் சாம்பவனை அதன் உள்ளே போகச் சொன்னான்.

"முதலில் இருட்டில் கண் தெரியாது. அதற்காகக் கதவின் அருகிலேயே நின்று விடாதே! உள்ளே கொஞ்சம் தூர மாகவே போய் நின்று கொள்!" என்றான்.

சோமன் சாம்பவன் நிலவறைக்குள் புகுந்ததும் அவனை இருள் விழுங்கி விட்டது போலிருந்தது.

பிறகு, ரவிதாஸன் நடைபாதை வழி யாகத் திரும்பி நந்தினி தேவியின் வஸந்த மண்டபம் வரையில் சென்றான். அங்கிருந்து பழுவேட்டரையரின் அரண் மனையைப் பார்த்துக்கொண்டிருந்தான். தாதிப் பெண்ணைத் தவிர வேறு யாரா வது வந்து விட்டால் அவனும் நில வறைக்குள் அவசரமாகச் சென்று கதவைச் சாத்திக் கொள்வது அவசியமா யிருக்கலாம் அல்லவா?

ரவிதாஸன் அவ்விதம் வஸந்த மண்ட பத்தில் நின்று கொண்டு அரண்மனை வாசலையே பார்த்துக் கொண்டிருந்த சமயத்தில், மந்தாகினி சிறிதும் சத்த மின்றி நடந்து வந்து திறந்திருந்த நில வறைக்குள் பிரவேசித்தாள். அடர்ந்த காடுகளில் நள்ளிரவில் எத்தனையோ நாள் இருந்து பழக்கப்பட்டவளுக்கு அந்த நிலவறையின் இருட்டு ஒரு பிர மாதமா என்ன? சில விநாடி நேரத்தில் கண் தெரிய ஆரம்பித்தது. ரவிதாஸ னுடன் வந்தவன் சற்றுத் தூரத்தில் ஒரு தூணுடன் முட்டிக் கொண்டு தவித்ததைப் பார்த்தாள். இவள் அதற்கு நேர்மாறான திசையில் சென் றாள். அங்கே ஒரு படிக்கட்டு காணப் பட்டது. நிலவறைப் பாதை அங்கே கீழே இறங்கிச் சென்றது. படிகளின் வழியாக இறங்கிக் கீழே நின்று கொண்டாள்.

சோமன் சாம்பவனுக்கு ஏதோ சிறிது சத்தம் கேட்டிருக்க வேண்டும். "யார் அது? யார் அது?" என்று குரல் கொடுத்

தான். அது திறந்திருந்த வாசல் வழியாகப் போய் ரவிதாஸனுடைய காதில் இலேசாக விழுந்தது.

அதே சமயத்தில் அரண்மனை வாசல் வழியாகத் தாதிப் பெண் கையில் தீவர்த்தியுடன் வந்து கொண்டிருந்ததை ரவிதாஸன் பார்த்தான். தான் முன்னால் சென்று சோமன்சாம்பவனுக்கு எச்சரிக்கை செய்வதற்காக விரைந்து நடந்தான். நிலவறை வாசற்படிக்குள் புகுந்ததும், ''சாம்பவா! எங்கே இருக்கிறாய்? என்னைக் கூப்பிட்டாயா?'' என்றான்.

''ஆமாம்; கூப்பிட்டேன்!''

''அதற்குள்ளே அவசரமா? உன் குரல் வெளியிலே யாருக்காவது கேட்டால் என்ன செய்கிறது? உன்னை இங்கே இப்படியே விட்டு விட்டுப் போய் விடுவேன் என்று நினைத்தாயா?''

''இல்லை; இல்லை! ஒரு விஷயம் கேட்பதற்காகக் கூப்பிட்டேன்!'' என்று சொல்லிக் கொண்டே சோமன் சாம்பவன் ரவிதாஸனை அணுகி வந்தான்.

இச்சமயத்தில் நிலவறையின் வாசலில் பிரகாசமான வெளிச்சம் தெரிந்தது. ''ஓகோ! அந்தப் பெண் தீவர்த்தியுடன் வந்து விட்டாள். உன்னைப் பார்த்துவிடப் போகிறாள். போ! போ! தூரமாகச் சென்று தூண் மறைவில் நில்! சீக்கிரம்!'' என்றான் ரவிதாஸன்.

சோமன் சாம்பவன் அவசரமாகப் பின்வாங்கிச் சென்றான்.

அடுத்த விநாடி நிலவறையின் வாசலில் தாதிப் பெண் கையில் தீவர்த்தியுடன் வந்து நின்றாள். ''மந்திரவாதி! மந்திரவாதி! எங்கே போனாய்?'' என்றாள்.

''எங்கேயும் போகவில்லை. உனக்காகத்தான் காத்துக் கொண்டிருந்தேன்'' என்று கூறிக் கொண்டே ரவிதாஸன் அவளை அணுகித் தீவர்த்தியைக் கையில் வாங்கிக் கொண்டான்.

''பெண்ணே! வெளியில் கதவைப் பூட்டிக் கொள். இன்னும் ஒரு நாழிகைக்கெல்லாம் சாவியுடன் திரும்பி வா! கதவைத் தட்டிப் பார்! நான் குரல் கொடுத்தால் திறந்து விடு! ஒருவரும் இல்லாத சமயமாகப் பார்த்துத் திற!'' என்றான் ரவிதாஸன்.

''ஆகட்டும், மந்திரவாதி! ஆனாலும் உனக்கு எச்சரிக்கை செய்கிறேன். சின்னப் பழுவேட்டரையருக்கு ஏதோ சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. நீ அகப்பட்டுக் கொண்டால் என்னைக் காட்டிக் கொடுத்து விடாதே!'' என்று கேட்டுக் கொண்டாள் தாதிப் பெண்.

''பெண்ணே! வீணாகக் கலவரப்படாதே! நான்தான் சொன்னேனே! காலாந்தக கண்டனுக்கே இறுதிக் காலம் நெருங்கி விட்டது!''

''என்னை ஏன் மறுபடியும் வந்து கதவைத் திறக்கச் சொல்லுகிறாய்? நிலவறையிலிருந்து வெளியில் போவதற்குத்தான் வேறு வழி இருக்கிறதே!''

''அந்த வழி இன்றைக்கு உபயோகப்படாது. வெட்டாற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. நீ போ! சரியாக ஒரு நாழிகைக்கெல்லாம் திரும்பிவிடு!''

தாதிப் பெண் வெளியில் சென்று கதவைச் சாத்தினாள். அவள் வெளியில் கத



வைப் பூட்டிய அதே சமயத்தில் ரவி தாஸன் உட்புறத்தில் தாளிட்டான்.

பின்னர், கையில் தீவர்த்தியைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு சோமன் சாம்பவன் இருக்குமிடம் நோக்கி விரைந்து வந்தான்.

''சாம்பவா! என்னை என்னமோ கேட்க வேண்டுமென்று சொன்னாயே? இப்போது கேள்'' என்றான்.

''நீ இதற்குமுன் ஒரு தடவை இங்கு வந்தாயா?'' என்று சோமன் சாம்பவன் கேட்டான்.

''ஒரு தடவை என்ன? பல தடவை வந்திருக்கிறேன். நாம் சேர்த்து வைத்திருக்கும் பொருளெல்லாம் வேறு எங்கிருந்து வந்ததென்று நினைத்தாய்?'' என்றான்.

''நான் அதைக் கேட்கவில்லை. நீ சற்று முன் என்னை இங்கு விட்டு விட்டு வெளியில் போனாய் அல்லவா? மறுபடியும்.......''

''இப்போதுதான் வந்திருக்கிறேனே?''

''நடுவில் ஒரு தடவை வந்தாயா?''

''நடுவிலும் வரவில்லை; ஓரத்திலும் வரவில்லை. எதற்காகக் கேட்கிறாய்?''

''நீ போன சிறிது நேரத்துக்



லெல்லாம் வாசற்படியின் வெளிச்சம் சட்டென்று மறைந்தது. நான் தூணில் முட்டிக் கொண்டேன்.''

''ஒரு வேளை கதவு தானாகச் சாத்தித் திறந்து கொண்டிருக்கும்.''

''ஏதோ ஓர் உருவம் உள்ளே வந்தது போலத் தெரிந்தது. காலடிச் சத்தமும் நன்றாகக் கேட்டது.''

''உன்னுடைய சித்தப் பிரமையாயிருக்கும். இந்த நிலவறையே அப்படித்தான். இப்படியே நிழல் போலத் தெரியும். திடீரென்று வெளிச்சம் தோன்றி மறையும். விசித்திரமான ஓசைகள் எல்லாம் கேட்கும். இங்கு நுழைந்தவர்கள் சிலர் பயப்பிராந்தியினாலேயே செத்துப் போயிருக்கிறார்கள். அவர்களுடைய எலும்புக் கூடுகள் அங்கங்கே கிடக்கின்றன. பழுவேட்டரையன் வேண்டுமென்றே அந்த எலும்புக் கூடுகளை எடுக்காமல் விட்டு வைத்திருக்கிறான். ஒருவரும் அறியாமல் இந்த நிலவறைக்குள் நுழைகிறவர்கள் எலும்புக் கூடுகளைப் பார்த்துப் பயந்து சாகட்டும் என்று......''

''அப்படி யாருக்கும் தெரியாமல் நிலவறையில்பிரவேசிக்கமுடியுமா, என்ன?''

''சாதாரணமாக யாரும் நுழையமுடியாது. என்னைத் தவிர அப்படி யாரும் நுழைந்திருப்பார்கள் என்று தோன்றவில்லை. நானும் இளையராணி அல்லது அவளுடைய தோழியின் உதவியினால் தான் இங்கு வந்திருக்கிறேன்...''

''பின்னே மனிதர்களின் எலும்புக் கூடுகளைப் பற்றிச் சொன்னாயே?''

''அதுவா? பழுவேட்டரையன் யாரை யாவது பயங்கரமாகத் தண்டிக்க விரும்பினால், நிலவறைக் கதவை இலேசாகத் திறந்து வைத்து விடுவான். பொக்கிஷ நிலவறையைப் பற்றிக் கேட்டிருப்பவர்கள் பொருளாசையினால் இதில் நுழைவார்கள். அப்புறம் இதை விட்டு வெளியில் போவதில்லை.''

''நீ ஒருவனைத் தவிர இங்கு வந்தவன் யாரும் வெளியில் போனதில்லை யென்று சொல்லுகிறாய்?''

''முன்னேயெல்லாம் அப்படித்தான். இப்போது இரண்டு பேரைப் பற்றி எனக்குச் சந்தேகமாயிருக்கிறது....''

''யாரைச் சொல்லுகிறாய் என்று எனக்குத் தெரியும். வல்லவரையனையும் கந்தமாறனையும் சொல்லுகிறாய்.''

''ஆமாம்.''

''அவர்களை நாம் இன்னும் உயிரோடு விட்டு வைத்திருக்கிறோமே?''

''எத்தனை தடவை உனக்குச் சொல்வது? வல்லவரையனை ஒரு முக்கியமான காரியத்துக்காகத்தான் இளையராணி விட்டு வைத்திருக்கிறாள். சுந்தர சோழனுடைய குலம் நசிக்கும் போது வந்தியத்தேவனும் சாவான். அதற்குக் காலம் நெருங்கி விட்டது. வா! வா! இந்த நிலவறையிலுள்ள சுரங்கப் பாதைகளையெல்லாம் உனக்குக் காட்டுகிறேன். ஒரு காரியத்தில் மட்டும் ஜாக்கிரதையாயிரு! இங்கே நவரத்தினக் குவியல் வைத்திருக்கும் மண்டபம் ஒன்றிருக்கிறது. அதில் நூறு வருஷங்களாகச் சோழர்கள் சேர்த்து வைத்த நவரத்தினங்களைக் குப்பல் குப்பலாகப் போட்டு வைத்திருக்கிறார்கள். அங்கே போய் மட்டும் அகப்பட்டுக் கொள்ளாதே. அந்த நவரத்தினங்களின் மோகத்தில் மனத்தைப் பறி கொடுத்துவிட்டால், நீ வந்த காரியத்தையே மறந்து போனாலும் போய் விடுவாய்!''

''ரவிதாஸா! யாரைப் பார்த்து இந்த வார்த்தை சொல்லுகிறாய்? உன்னைப் போல் நானும் வீரபாண்டியனுடைய தலையற்ற உடலின் மீது சத்தியம் செய்து கொடுத்தவன் அல்லவா?''

''யார் இல்லை என்றார்கள்? அந்த நவரத்தினக் குவியல்களைப் பார்த்த போது என் மனம்கூடச் சிறிது சலித்துப் போய் விட்டது; அதனாலேதான் எச்சரிக்கை செய்தேன். இருக்கட்டும், வா, போகலாம். முதலில் சோழன் அரண்மனைக்குப் போகும் வழியை உனக்குக் காட்டுகிறேன். அதைக் காட்டிவிட்டு நான் போன பிறகு நீயே சாவகாசமாக இந்த நிலவறை முழுவதையும் சுற்றிப் பார்த்துக்கொள். பின்னொரு காலத்தில் உபயோகமா யிருக்கலாம்.''

ரவிதாஸன் தீவர்த்தியைப் பிடித்துக் கொண்டு மேலே நடந்தான். சோமன் சாம்பவன் பக்கத்திலேயே சென்றான்.

முன்னொரு சமயம் பெரிய பழுவேட்டரையரும் இளைய ராணி நந்தினியும் சென்ற அதே பாதையில் அவர்கள் சென்றார்கள்.

தீவர்த்தியின் புகை சூழ்ந்த வெளிச்சத்தில் நிலவறையின் தூண்களும் அவற்றின் நிழல்களும் கரிய பெரிய பூதங்களைப் போல் தோன்றின. இருளில் வாழும் வௌவால்கள் பயங்கரமான குட்டிப் பேய்களின் தோற்றம் கொண்டிருந்தன. ஆங்காங்கு பிரம்மாண்டமான சிலந்திக் கூடுகளும் அவற்றின் மத்தியில் ராட்சஸ சிலந்திப் பூச்சிகளும் காணப்பட்டன. தரையிலோ விசித்திர வடிவங்கள் கொண்ட ஜீவராசிகள் சில அதிவேகமாகவும் சில மிக மெதுவாகவும் ஊர்ந்து சென்றன. ரவிதாஸன் கூறியதுபோலவே இனந் தெரியாத பலவிதச் சத்தங்கள் கேட்டன. வெளியே இன்னமும் அடித்துக் கொண்டிருந்த புயலின்

சத்தமும் எப்படியோ எங்கிருந்தோ அந்தச் சுரங்க நிலவறைக்குள் வந்து எதிரொலி செய்தது.

சோமன் சாம்பவன் திடீரென்று திடுக்கிட்டு நின்று, ''ரவிதாஸா! ஏதோ காலடிச் சத்தம் போல் கேட்கவில்லை?'' என்று கேட்டான்.

''கேட்காமல் என்ன? நம்முடைய காலடிச் சத்தம் கேட்கத்தான் கேட்கிறது. வீணாக மிரண்டு விடாதே! இப்போது நானும் இருக்கும் போதே இப்படிப் பயப்பட்டாயானால், இங்கே இரண்டு மூன்று தினங்கள் எப்படியிருப்பாய்?'' என்றான் ரவிதாஸன்.

''நான் ஒன்றும் பயப்படவில்லை. நீ போனபிறகு வீண் பிராந்திக்கு உள்ளாவதைக் காட்டிலும் நீ இருக்கும் போதே கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இந்த நிலவறைக்குள் புகுந்தவர்கள் சிலர் இங்கேயே செத்துப் போனார்கள் என்று சொன்னாயல்லவா?'' என்றான் சோமன் சாம்பவன்.

''ஆமாம்; அவர்களுடைய ஆவிகள் இங்கே உலாவிக் கொண்டுதானிருக்கும். அதனால் என்ன? பேய்கள்தான் நம்மைக் கண்டு பயந்து அலறுமே? அந்தச் சிறு பையன் வந்தியத்தேவன் இந்த நிலவறையில் பயப்படாமல் இருந்து எப்படியோ தப்பி வெளியேறியிருக்கிறான். எத்தனையோ பேய் பிசாசுகளைப் பார்த்த நானும் நீயும் ஏன் பயப்பட வேண்டும்?''

''பேயும் பிசாசும் இருக்கட்டும். அதற்கெல்லாம் யார் பயப்படுகிறார்கள்? வேறு பிராணிகள், விஷ ஜந்துக்கள் இங்கே இருக்கலாம் அல்லவா?''

''பாம்புக்கும் தேளுக்கும் பயப்படப் போகிறாயா? நம்மைக் கண்டாலே அவைகள் வளைகளில் போய் ஒளிந்து கொள்ளும்.....''

''இருந்தாலும் இரண்டு மூன்று நாட்கள் இங்கேயே இருக்கிறது என்றால் யோசனையாகத்தான் இருக்கிறது! ரவிதாஸா! அதற்கு முன்னாலேயே ஒரு வேளை சந்தர்ப்பம் கிடைத்தால்....?''

''வேண்டாம், வேண்டாம்! அந்தத் தவறு மட்டும் செய்து விடாதே! இன்றைக்குச் செவ்வாய்க் கிழமை. புதன் வியாழன் இரண்டு நாட்களும் நீ காத்திருக்க வேண்டும். சுந்தரசோழன் தனிமையாக இருக்கும் நேரம் எது என்பதைப் பார்த்து வைத்துக் கொள். சுந்தர சோழனுடைய பட்டமகிஷி எப்போதும் அவன் அருகிலேயே இருப்பாள். வெள்ளிக் கிழமை இரவு நிச்சயமாகத் துர்க்கா பரமேசுவரியின் கோயிலுக்குப் போவாள். அன்று இரவுதான் நீயும் உன் காரியத்தை முடிக்க வேண்டும். சுந்தர சோழனுடைய குலம் நிர்மூல

❋ இந்த அன்பளிப்பை நீங்களும் பெறலாம்:

தீபாவளி நன்னாளில் உங்கள் அன்புக்குரியவர்களுக்குப் பரிசாகவும் அளிக்கலாம்

தீபாவளி நன்னாளில் உங்கள் அன்புக்குரியவர்களுக்குப் பரிசாகவும் அளிக்கலாம்

அன்பளிப்பு

கல்கி

தீபாவளி மலர் 1970

○ இந்த விலைமதிப்பற்ற மலரை நீங்கள் இலவசமாகப் பெற என்ன செய்ய வேண்டும்?

○ கல்கி வார இதழுக்கு இரண்டு ஆண்டு சந்தாவாக ரூபாய் நாற்பது மணி ஆர்டர் அனுப்ப வேண்டும். நேரடியாக மானேஜர், கல்கி காரியாலயம், சென்னை—31 என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

○ நினைவிருக்கட்டும்! நீங்கள் இந்தத் தொகைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு 104 கல்கி இதழ்களைப் பெறுவதுடன் 1970ம் ஆண்டு கல்கி தீபாவளி மலரை இலவசமாகப் பெறுகிறீர்கள்!

○ கல்கிக்கு ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்களும் மேலும் இரண்டாண்டுகளுக்கு ரூ. 40- சந்தா அனுப்பி இந்த அன்பளிப்புத் திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இலங்கை நேயர்கள் (இலங்கை நாணயப்படி) ரூ. 42-ம் மற்ற வெளிநாட்டு நேயர்கள் ரூ. 80-ம் அனுப்ப வேண்டும்.

○ உங்கள் மணிஆர்டர் அக்டோபர் 15ந் தேதிக்குள் எங்களுக்குக் கிடைக்க வேண்டும். அதற்கு அப்பால் இந்தச் சலுகையை நீடிப்பதற்கு இயலாது.

❋ இந்த அன்பளிப்பை நீங்களும் பெறலாம்:

மாகும் நாள் வெள்ளிக் கிழமைதான். முன் பின்னாக நடந்தால் காரியம் கெட்டுப் போகலாம்!'' என்றான் ரவிதாஸன்.

இப்படிப் பேசிக் கொண்டே இருவரும் விரைவாக நடந்தார்கள். சோமன் சாம்பவன் மட்டும் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே போனான். ஆயினும் அவர்கள் அறியாமல் தூண்களின் மறைவிலே ஒளிந்தும் சிறிதும் சத்தமின்றிப் பாய்ந்தும் அவர்களைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்த ஊமை ராணி அவர்கள் கண்ணில் படவில்லை.

நிலவறைச் சுரங்கத்தின் ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்துக்கு அவர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்களுக்கெதிரே நெடுஞ் சுவர் நின்றது. அதில் எங்கும் வாசல் இருப்பதாகவே தெரியவில்லை. ஆனால் சுவரின் உச்சியில் ஒரு சிறு பலகணி வழியாகக் கொஞ்சம் வெளிச்சம் வந்தது.

ரவிதாஸன் தீவர்த்தியைச் சாம்பவன் கையில் கொடுத்து விட்டு அந்தச் செங்குத்தான சுவரில் ஆங்காங்கு நீட்டிக் கொண்டிருந்த முண்டு முரடுகளைப் பிடித்துக் கொண்டு ஏறினான். பலகணி வழியாகச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டுக் கீழே சரசர வென்று இறங்கினான்.

''அந்தப் பலகணி வழியாக வெளியில் குதிக்க வேண்டுமா? அதுதான் வழியா?'' என்று சாம்பவன் கேட்டான்.

''இல்லை; இல்லை. அந்தப் பலகணி வழியாக, எலிதான் நுழைந்து செல்லலாம். ஆனால் அது வழியாகப் பார்த்தால் சோழன் அரண்மனை தெரியும். அந்த அரண்மனையிலும் முக்கியமான இடம் தெரியும்'' என்றான் ரவிதாஸன்.

''சுந்தர சோழன் படுத்திருக்கும் இடமா?'' என்றான் சாம்பவன்.

''ஆமாம், அங்கே ஜன நடமாட்டம் எப்படி இருக்கிறது என்பதை இந்தப் பலகணியின் மூலமாகப் பார்த்து நீ தெரிந்து கொள்ளலாம். இப்போது என்னுடன் வா! நான் செய்கிறதை நன்றாய்ப் பார்த்துக் கொள்!''

இவ்விதம் கூறிவிட்டு ரவிதாஸன் கீழே குனிந்தான். உற்றுப் பார்த்து வட்ட வடிவமான ஒரு கல்லின் மீது காலை வைத்து அமுக்கிக் கொண்டு இரண்டு கைகளினாலும் ஒரு சதுர வடிவமான கல்லைப் பிடித்துத் தள்ளினான். கீழே ஒரு வழி காணப்பட்டது.

''கடவுளே! நிலவறைக்குள்ளே ஒரு பாதாளப் பாதையா?'' என்று வியந்தான் சோமன் சாம்பவன்.

''ஆமாம்; இந்தப் பாதை இருப்பது பெரிய பழுவேட்டரையனையும் இளைய ராணியையும் தவிர வேறு யாருக்கும் தெரியாது. மூன்றாவதாக எனக்குத் தெரியும்; இப்போது உனக்கும் தெரியும்! பாதையைத் திறப்பது எப்படி என்று தெரிந்துகொண்டாய் அல்லவா?''

இருவரும் அப்பாதையில் இறங்கிச் சென்றார்கள். தீவர்த்தியின் வெளிச்சம் சிறிது நேரத்துக்கெல்லாம் மறைந்தது.

ஊமை ராணி தான் மறைந்து நின்ற இடத்திலிருந்து ஒரே பாய்ச்சலாக அங்கு வந்தாள். திறந்திருந்த வழியை உற்றுப் பார்த்தாள். அதில் இறங்குவதற்கு ஓர் அடி வைத்தாள். பிறகு புனராலோசனை செய்தவளாய்ச் சட்டென்று காலை வெளியில் எடுத்தாள்.

சிறிது நேரம் யோசனை செய்து கொண்டிருந்து விட்டு, முன்னம் ரவிதாஸன் சுவரின் மீது ஏறிய இடத்தை நோக்கினாள். அங்கே ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து சென்று அவன் ஏறியது போலவே தானும் சுவர் மீது ஏறினாள். பலகணியை அடைந்ததும் அதில் ஏறி உட்கார்ந்து கொண்டு அப்பால் பார்த்தாள். சுவரை ஒட்டினாற் போல் தோட்டமும் அதற்கப்பால் அழகிய மாட மாளிகையும் தென்பட்டன. அந்த மாளிகையைப் பார்த்ததும் அவளுக்கு உடம்பு சிலிர்த்தது. அதற்குள்ளே தனக்கு உயிரினும் இனியவர்கள் இருக்கிறார்கள் என்பதை அவள் உள்ளுணர்ச்சி கூறியது. இரகசிய வழியாகப் போகிறவர்கள் தனக்குப் பிரியமானவர்களுக்குத் தீங்கு செய்யும் நோக்கம் கொண்டவர்கள் என்பதையும் உணர்ந்தாள். அவர்களுடைய தீய நோக்கத்தைத் தடுக்கும் ஆற்றலைத் தனக்குக் கொடுத்து அருள வேண்டுமென்று அவள் அந்தராத்மாவில் குடிகொண்டிருந்த தெய்வத்தைப் பிரார்த்தனை செய்து கொண்டாள்.

கீழே இறங்கிவிடலாமா என்று அவள் எண்ணிய சமயத்தில், சற்றுத் தூரத்தில் தெரிந்த மாளிகையின் மேன்மாடத்தில் ஓர் அதிசயக் காட்சி தெரிந்தது. சற்றுமுன் அந்த இருளடர்ந்த நிலவறையிலிருந்த ரவிதாஸனும் சோமன் சாம்பவனும் அதில் ஏறித் தூண்களின் மறைவில் ஒளிந்து நின்றார்கள். அரண்மனையின் உட்பக்கமாக உற்று உற்றுப் பார்த்தார்கள். அப்போது பகல் நேரமாதலால் அந்த மாளிகையின் மேன் மாடம் நன்றாய்த் தெரிந்தது. ரவிதாஸன் கையில் தீவர்த்தி இல்லை. சாம்பவன் கையில் வேல் மட்டும் இருந்தது. ரவிதாஸன் அந்த வேலை வாங்கிக் கொண்டு மாளிகையின் உட்புறத்தை நோக்கி அதை எறிவதற்காகக் குறிபார்த்தான். ஊமை ராணியின் நெஞ்சு அச்

சமயம் நின்றுவிட்டது போலிருந்தது. நல்ல வேளையாக, ரவிதாஸன் வேலை எறியவில்லை. எறிவதுபோல் பாவனை செய்து விட்டுச் சோமன் சாம்பவனிடம் திரும்பக் கொடுத்து விட்டான். மறுகணம் அவர்கள் இருவரும் அங்கிருந்து மறைந்து விட்டார்கள்.

ஊமை ராணியும் பலகணியிலிருந்து சுவர் வழியாகக் கீழே இறங்கினாள். சுரங்கப் பாதை தென்பட்ட இடத்தையே பார்த்துக் கொண்டு மறைந்து நின்றாள். இன்னும் சிறிது நேரத்துக்கெல்லாம் அந்தப் பாதையில் மறுபடியும் தீவர்த்தி வெளிச்சம் தெரிந்தது. இருவரும் வெளியில் வந்தார்கள். சுரங்கப் பாதையை மூடினார்கள்.

"இதைத் திறக்கும் வழியை நன்றாய்த் தெரிந்து கொண்டாயல்லவா?" என்று ரவிதாஸன் கேட்டான்.

"தெரிந்து கொண்டேன். இனி உனக்குக் கவலை வேண்டாம். ஒப்புக் கொண்ட காரியத்தை நிச்சயமாகச் செய்து முடிப்பேன்! சுந்தர சோழனுடைய வாழ்க்கை வெள்ளிக்கிழமையோடு முடிவடையும். இம்மாதிரியே நீங்களும் உங்கள் காரியத்தைச் செய்யுங்கள்!" என்றான் சாம்பவன்.

"இளையராணி கரிகாலனைப் பார்த்துக்கொள்வாள். அதைப் பற்றிக் கவலையில்லை. அந்தக் குட்டிப் புலி கடலிலிருந்து தப்பி வந்து நாகைப்பட்டினத்தில் இருப்பதாகக் காண்கிறது. ஆனால் இந்தத் தடவை அவன் தப்ப முடியாது. அவனைக் காப்பாற்றி வந்த இரண்டு பெண் பேய்களும் இப்போது இத் தஞ்சையில் இருக்கின்றன. ஓடக்காரப் பெண்ணையும் ஊமைச்சியையும் கூட்டத்தில் பார்த்தேன். அந்த வீரவைஷ்ணவத் துரோகிகூட இங்கேதான் இருக்கிறான். ஆகையால் குட்டிப் புலியும் இனித் தப்ப முடியாது. நாகைப்பட்டினத்துக்குக் கிரமவித்தனை அனுப்பப் போகிறேன். சுந்தர சோழனுடைய குலம் இந்த வெள்ளிக்கிழமை நசித்து விடும்...."

"அப்புறம் மதுராந்தகத்தேவன் இருப்பானே?"

"அவன் இருந்தால் இருக்கட்டும். அப்படிப்பட்ட ஒரு பேதை இன்னும் சில காலத்துக்குச் சோழ நாட்டுச் சிங்காதனத்தில் இருந்து வருவதுதான் நல்லது. பாண்டிய சக்கரவர்த்திக்கும் வயது வரவேண்டும் அல்லவா?"

இவ்வாறு பேசிக் கொண்டே ரவிதாஸனும் சோமன் சாம்பவனும் வந்த வழியோடு விரைந்தனர். (தொடரும்)

சத்யபாமாவின் சாஸ்திரீய நடனம்

கலப்படமற்ற சாஸ்திரீய பரதநாட்டியத்தின் அழகுகளைக் கண்டு ரசிக்க வேண்டுமானால் கலாக்ஷேத்திரத்தில் அவற்றைக் காணலாம். செப்டம்பர் 21ந் தேதி நடைபெற்ற குமாரி சத்யபாமாவின் நடன அரங்கேற்றம் இதற்கு விலக்கு அல்ல. எட்டு ஆண்டுகளாக அங்கேயே பரதம் பயின்று 1968ல் டிப்ளோமா பெற்று இப்போது உயர் நடன வகுப்புக்களிலும் தேறிப் பட்டம்பெறும் தறுவாயில் இருப்பவள் குமாரி சத்தியபாமா. ஸ்ரீமதி ருக்மிணி தேவியின் ராமாயண நாட்டிய நாடகப் படைப்புக்களில் ஏற்கனவே பங்கு கொண்டு ஓரளவுக்கு அனுபவமுள்ளவள். கலாக்ஷேத்திர நடனக் குழுவுடன் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று வந்திருப்பவள். கலாக்ஷேத்திரா நடனப் பகுதிக்குப் பின்னணி இசையைச் சென்ற பதினைந்து ஆண்டுகளாகச் சிறப்புடன் வழங்கி வரும் ஸ்ரீமதி கமலா ராணியின் புதல்வி சத்ய பாமா. எனவே, நாட்டிய மரபுகள் எதுவும் வழுவாமல் அவளுடைய நடனத்தில் பிரகாசிப்பது எதிர்பார்க்கப்பட வேண்டியதே. நிருத்ய பாகமும் தில்லானாவும் மிகவும் ரஞ்சகமாக இருந்தன. ஜதிகளும், அடவுகளும் பிசிறில்லாத தாளக் கட்டுடன் மிடுக்காக இருந்தன. அபிநயப்பகுதியில் பதங்கள் எல்லாமே விச்ராந்தியாகப் பாடப்பட்டதால் அபிநயங்கள் ஒவ்வொன்றும் அர்த்த புஷ்டியுடன் முழுமை பெற்றுப் பிரகாசித்தன.



"வரட்டும்" என்ற சாவேரி ராக பதத்துக்கும் "தாமாஸாக்ஷ" என்ற யதுகுல காம்போதி பதத்துக்கும் அபிநயங்கள் குறிப்பிடத்தக்கவை. "வதநி" என்ற அஷ்டபதியும் கேதார ராக "எந்த நே" ஜாவளியும் பரத நாட்டிய நிகழ்ச்சிக்கு நிறைவை அளித்தன. முழுமை பெற்றுள்ள சுத்த பரத நாட்டியம் குமாரி சத்யபாமாவின் அரங்கேற்றம்.

—எம். எஸ். சிவஸ்வாமி


ஒவ்வொருவரின்
மேனிக்கும்
பாதுகாப்பு தேவை
வியர்வை துர்நாற்றத்-
திருந்தும், அதனல்
நுண்ணிய கிருமிகளிட
மிருந்தும் உங்களுக்கும்,
மற்றவர்களுக்கும் ஏற்படும்
சங்கடத்திலிருந்தும் பாது
காப் பளிக்கிறது.
ஜி-11 (ஹெக்ஸாக்ளோ-
ரோ:ஃபீன்) கலந்த
சிந்தால் டாய்லெட் பவுடர்
இந்தப் பாதுகாப்பைத்
தருகிறது. அதோடு...
அன்றலர்ந்த மலரின்
நறுமணத்தையும் தருகிறது.
சிந்தால்—
துர்நாற்றத்தை அறவே
போக்கிப் பாதுகாப்பளிக்
கும் டாய்லெட் பவுடர்.
CINTHOL
DEODORANT LUXURY TOILET POWDER
Interpub/GP/5 Tam

இல்லங்களில் வளர் செல்லங்கள்

ஓரகாஸ் — டி. வி. எஸ். நிறுவனத்தில் பணியாற்றும் திரு லாரென்ஸுக்குப் பறவைகள், வீட்டுப் பிராணிகள் வளர்ப்பில் கொள்ளை ஆசை. வீட்டுக்குள் நுழைந்ததுமே அழகிய வாத்துக்கள் 'கக் கக்' என்று குரலெழுப்புகின்றன. திரு லாரென்ஸ் அருகில் வந்து, ''கொஞ்சம் தள்ளியே வாருங்கள். வாத்துக்களிடம் மிகவும் நெருங்க வேண்டாம்'' என்று எச்சரிக்கிறார். ''அதன் அலகின் உட்புறம் ரம்பம்போல் இருக்கும். துணியைப் பற்றினால் கிழித்துக் கத்தரித்துவிடும். புதிய மனிதர்களைக் கண்டால் குரல் எழுப்பும். காவலுக்கு நாய் இருந்தால் எப்படியோ அதே மாதிரிதான் வாத்தும்! கிரேக்கர்கள் வாத்தை இப்படித்தான் பயன்படுத்தினர்!'' என்று விளக்குகிறார் லாரென்ஸ்.

வாத்துக்களைக் கடந்து உள்ளே சென்றவுடன் ஒரு வலைக் கூண்டுக்குள்ளிருக்கும், நான்கு மஞ்சள் வண்ணப் பறவைகளைக் காண்கிறோம். வால் புறத்தில் சற்று இலேசான வெண்மை. கண்கள் வட்ட வடிவமாக இரத்தச் சிவப்பாக உள்ளன. ஏறக் குறைய கிளிமாதிரி உருவம். அளவில் சற்றே சிறியவை.

''இதற்கு என்ன பெயர்?''

''லூடினேஸ் அல்லது பாராகீட்ஸ் (Parakeets) என்று பெயர். இவற்றை வளர்ப்பதில் சிரமமேயில்லை. செலவும் அதிகமில்லை. ஜோடியாகத்தான் வளர்க்க வேண்டும். பெண் பறவை சற்றுப் பொல்லாதது. பொறாமையால் சண்டையிடும். உயர்ந்தபட்சம் ஏழு முட்டைகள் வரை இடும். ஆண், பெண் இரண்டுமே அடை காக்கின்றன. தினை, கம்பு முதலிய தானியங்கள்தாம் இவற்றுக்கு உணவு. கொத்துமல்லிக் கீரை ஆகியவற்றையும் விரும்பிப் புசிக்கும். சுத்த சைவம்தான்'' என்று விளக்குகிறார் திரு லாரென்ஸ்.

முன்புறத்து அறையில் கட்டில் காலில் ஒரு புள்ளிமான் குட்டி கட்டிப் போடப்பட்டுள்ளது. ஒன்றரை அடி உயரம்தான் இருக்கும்.

''எங்கள் உறவினர் ஒருவர் ஒரு மாதத்துக்கு முன்புதான் இதனைக் கொடுத்தார். சின்னக் குட்டி. பிறந்து சில மாதங்கள்தான் இருக்கும். பால்தான் இதற்கு இப்போது முக்கியமான உணவு. சிறு முட்கள் உள்ள கொடுக்காப்புளி இலைகளை நான்கள் விரும்பிப் புசிக்கும்'' என்று கூறினார் லாரென்ஸ்.

அடுத்துள்ள ஹாலில் ஒரு மேசையின்மீது ஒரு கண்ணாடித் தொட்டியில் சில மீன்கள் நீந்தி விளையாடுகின்றன. அவை 'ஏஞ்சல்' வகையாம். ''இதற்கு முன் பல்வேறு அபூர்வ மீன்கள் இருந்தன. இப்போது அவை இறந்து விட்டன'' என்று லாரென்ஸ் கூறினார்.



''பறப்பன, நீந்துவன, நடப்பன...இப்படி எல்லா வகைப் பிராணிகளையும் வளர்த்து வருகிறீர்களே? குடும்பத்தில் எல்லாருக்கும் பிராணி வளர்ப்பில் ஈடுபாடு மிகுதியாக இருக்கும்போலிருக்கிறதே?'' என்று கேட்டதற்கு, ''என் அப்பா ஜெரோமுக்கு இதில் அளவுகடந்த உற்சாகம். அவருடைய ஊக்கத்தினால் எங்கள் எல்லோருடைய ஆர்வமும் பெருகியுள்ளது. இதோ, அடுத்த அறைக்கு வாருங்கள்! அங்கே சுமார் ஐம்பது வெள்ளைக் கோழிகள் இருக்கின்றன. பார்க்கலாமா?'' என்று அழைத்தார் லாரென்ஸ்.

கோழி முட்டைகளை விற்று இவர் பணம் சம்பாதிக்கிறார். கோழிகளின் பராமரிப்புப் பற்றி நன்கு தெரிந்து வைத்திருக்கிறார்.

''கோழிகளுக்கு வரக்கூடிய வியாதிகள் என்ன?''

''முக்கியமானவை இரண்டு. வயிற்றுப் போக்கு; கோழியம்மை. (Fowlpox) இவை இரண்டும் வராமல் தடுக்க முன்கூட்டியே ஊசி போடுவது நல்லது. வியாதிக்கு டைமைசின் மருந்துகள் கூடக் கொடுக்க வேண்டும். வாசல் புறத்திலுள்ள ஒரு கூண்டில் சில கோழிகளைத் தனியே பிரித்து வைத்திருக்கிறேன். அவற்றுக்கு ஜலதோஷம்!''

''கோழிக்கும் ஜலதோஷம் வருமா?''

''ஜலதோஷமும் வரும்; தும்மலும் வரும். வீட்டில் பிராணிகளை ஆசையோடு வளர்ப்பவர்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு நாளும் இயல்பாக உள்ளனவா என்று பரிசோதிக்க வேண்டும்'' என்றார் லாரென்ஸ்.

பேட்டி: 'பாணன்'

பொழுதுபோக்குக்கு ஒரு புள்ளிமான்





ராமாயணம்

ராஜாஜி

சிலர் மிக அழகாக இருந்தார்கள். சிலர் மிகக் கோரமாக இருந்தார்கள். சிலர் வெளுப்பு. சிலர் மிகக் கறுப்பு. சிலர் சிவப்பு. சிலர் சாதாரண வடிவம். சிலர் மிகக் குள்ளம். சிலர் மிக உயரம். இவ்வாறு நாநாவித வடிவம்! கொண்ட ஜனங்களைக் கண்டான்.

மாளிகை மாளிகையாகப் பார்த்துக் கொண்டே ஹனுமான் சென்றான். மகோன்னத அழகைக் கொண்ட பல ஸ்திரீகளைக் கண்டான். நாயகர்களுடன் சந்தோஷமாக இருப்பவர்களைக் கண்டான். உருக்கிவிட்ட தங்கத்தைப் போன்ற நிறம் கொண்ட யௌவனப் பெண்மணிகள் பலரைக் கண்டான். சிலர் உப்பரிகையில் உட்கார்ந்திருந்தார்கள். சிலர் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். சிலர் விளையாடிக் கொண்டும் பாடிக் கொண்டும் இருந்தார்கள். இவ்வாறு கணக்கற்ற ஸ்திரீகளைக் கண்டான். ஆனால் துக்கப்பட்டு இளைத்துப் போய் ராமனையே தியானம் செய்து கொண்டிருக்கும் சீதையைக் காணவில்லை. 'சௌந்தரிய வடிவங்களை யெல்லாம் கண்ட ஹனுமானுடைய உள்ளத்தில் துக்கமே நிறைந்து நின்றது.

பல அரக்க வீரர்களுடைய மாளிகையில் ஒவ்வொன்றாகப் பிரவேசித்துப் பார்த்தான். யுத்த யானைகளும் ஜாதிக் குதிரைகளும் தேர்களும் ஆயுதச் சாலைகளும் எங்கும் நிறைந்திருந்தன. எங்கும் வீரர்கள் ஆயுதபாணிகளாய் நின்றார்கள். ஸ்திரீகளும் விளையாட்டுக்களும் பாட்டும் சங்கீத வாத்திய முழக்கமுமாக ஆனந்த மயமாயிருந்த மாளிகை வரிசைகளையும் தோட்டங்களையும் பார்த்து விட்டுப் பிறகு மலைபோல் உயர்ந்து நின்ற ஒரு மிகப் பெரிய அரண்மனையைக் கண்டான். அதன் முன் நின்ற யானை, குதிரை, காலாட் படைகளையும், அதைச் சுற்றியிருந்த மதிலையும், மாளிகையின் அபார அழகையும், ஆபரண தோரணங்களையும் பார்த்து, இதுவே ராவணனுடைய அரண்மனை என்று தெரிந்து கொண்டு செல்வ மயமான லங்கா நகரத்துக்கே ஒரு சுடர்விட்டு ஜொலிக்கும் ஆபரணம் போலிருந்த அந்த அரண்மனைக்குள் பிரவேசித்தான்.

பூவுலகத்தில் ஒரு சுவர்க்கம்போல் அந்த அரண்மனை விளங்கிற்று. ராவணனுடைய நிகரற்ற பராக்கிரமத்துக்கும் பலத்துக்கும் தகுந்த அரண்மனையாகவே இருந்தது. தோட்டமும், தோட்டத்தில் சந்தோஷமாக விளையாடிக் கொண்டிருந்த பறவைகளும், அங்கங்கே மனத்தைக் கவரும் சித்திரங்களால் சித்திரிக்கப்பட்ட விஹார ஸ்தலங்களும் கண்டு ஹனுமான் ஆச்சரியத்தில் மூழ்கினான்.

'ஆகா! என்ன செல்வம்! என்ன அற்புத சுகம்!' என்று வியந்தான். உடனே வியப்புக் கலைந்து, 'ஜானகியைக் காணவில்லையே! வந்த காரியம் முடியவில்லையே! அற்புதங்களைக் கண்டு ஆச்சரியப்பட்டுப் போவதில் பயன் என்ன?' என்று ராம காரியக் கவலையில் மூழ்கினான்.

அந்த மாளிகைகளுக் கிடையில் ராவணனுடைய பிரத்தியேக அறைக்குள் சென்று அங்கே எல்லாப் பாகங்களிலும் நுழைந்து பார்த்தான். 'இது சுவர்க்கமோ? இது தேவலோகமோ?' என்று ஆச்சரியம் அடையும்படியான அலங்காரங்களும் தங்கமும் வெள்ளியும் தந்தமும் ரத்தினங்களும் முத்தும் மிக நுண்ணிய சிற்ப வேலை செய்த கம்பளங்களும் சித்திர வேலைப் பண்டங்களும் கண்டான். மத்தியில் புஷ்பக விமானத்தைப் பார்த்தான்.


அது பிரம்மாவிடம் குபேரன் அடைந்த அற்புத விமானம். குபேரனை ஜெயித்து ராவணன் அதை இலங்கைக்குக் கொண்டு வந்து வைத்திருக்கிறான். வசிஷ்டருடைய பசுவைப் போல் எதை வேண்டினாலும் தரும் அந்த அற்புத விமானத்தைப் பார்த்தான்.

ராவணனுடைய அந்தப்புரத்தில் நுழைந்தான். அது ஒரு போக சமுத்திரமாகவே இருந்தது. எண்ணற்ற அழகிய ஸ்திரீகள் தூங்கிக் கொண்டிருந்த அந்த விஸ்தாரமான இடம் பல நிறப் பூங்கொடிகள் நிறைந்த வனம் போல் பிரகாசித்தது. வந்த காரியத்தை அனுசரித்து ஹனுமான் படுத்திருந்த ஸ்திரீ

களையெல்லாம் பார்த்தான். படுத்துத் தூங்கியிருந்த அவர்கள் ஒருவரைக் காட்டிலும் ஒருவர் சௌந்தரியமாகவும் காம மயக்கத்தில் ஈடுபட்டவர்களாகவும் காணப்பட்டார்கள். எல்லோருமே சந்தோஷமாக்வும் சம்மதமாகவும் இருந்த காட்சியை மாருதி அங்கே பார்த்தான். ராவணனுடைய காம ரூப சக்தியும் பௌருஷமும் அந்தத் திவ்விய சௌந்தரிய ஸ்திரீகளை முற்றிலும் வசப்படுத்தி யிருந்ததைக் கண்டான்.

''இந்த மாதர் கூட்டத்தில் சீதை இல்லை என்பது நிச்சயம். அவள் ஒருநாளும் அரக்கனுக்கு வசப்பட்டிருக்க மாட்டாள் அல்லவோ? அவளை இங்கே நான் தேடுகிறேனே. நான் எவ்வளவு பைத்தியக்காரன்! சீதை இவர்களுக்குள் ஒருத்தியாக இருக்க முடியாது'' என்று தீர்மானித்தான்.

பிறகு பார்த்துக்கொண்டே சென்றான். ஓர் அறையில் அநேக சிறந்த சயனாசனங்களைக் கண்டான். தந்தமும் தங்கமும் வைடூரியங்களும் இழைத்த பல அழகிய மஞ்சங்களுக்கிடையில் ஒரு மிகச் சிறந்த மஞ்சத்தைக் கண்டான். அதன்மேல் மேருமலை படுத்துத் தூங்குவதைப் போல் படுத்திருந்தான்



ராவணன். அந்த அரக்கனுடைய வடிவத்தின் கம்பீர அழகும் பொலிவும் ஹனுமானை ஒருகணம் நடுங்கச் செய்தன.

ஒதுங்கி நின்று பார்த்தான். யானைத் துதிக்கைகளைப் போன்ற கைகளும், மார்பில் ஐராவத யானையின் தந்தத்தால் குத்தப்பட்ட காயக்குறியும், உடம்பில் இந்திரனுடைய வஜ்ராயுதத்தாலும் விஷ்ணு சக்கரத்தாலும் உண்டான வடுக்களும் பார்க்கப் பார்க்க அரக்கனுடைய கம்பீர அழகு மாருதியின் மனத்தைக் கவர்ந்தது.

அதன் மேல் சுற்றிலும் படுத்துத் தூங்கும் பல ஸ்திரீகளைப் பார்த்தான். கீதம் பாடிக் கொண்டே தூங்கிப் போன பல ஸ்திரீகள் அவரவர்களுடைய வாத்தியச் சாமான்களைக் கட்டிக் கொண்டு அப்படியே கிடந்தார்கள்.

அப்பால் ஒரு திவ்விய மஞ்சத்தின் மேல் ஒரு ஸ்திரீ படுத்திருந்ததைக் கண்டான். அந்தப்புரத்துத் தலைவியாக விளங்கினாள். அவளுடைய அவயவ அழகும் முக லக்ஷணமும் கண்டு இவளே சீதை என்று ஹனுமான் ஒருகணம் சந்தேகித்தான். முகத்தில் உத்தம குணங்களைக் கண்டான். 'கண்டு விட்டேன் சீதையை' என்று குதித்தான். அடுத்த கணம், 'சீ! இது என்ன மடமை! சீதை இப்படிச் சுகமாகத் தூங்குவாளா? இப்படி ஆபரணங்கள் பூண்டு அந்நிய புருஷனுடைய அறையில் படுப்பாளா? இப்படி நான் எண்ணியது பெருங் குற்றம்' என்று தனக்குள் சொல்லித் துயரத்தில் மூழ்கினான்.

பிறகு, "தனக்குச் சம்மதிக்காத படியால் சீதையை இந்த அரக்கன் கொன்று விட்டே யிருப்பான். நான் தேடித் தேடிச் செல்வதில் என்ன பயன்?" என்று எண்ணினான்.

* * *

ராவணனுடைய அந்தப்புரம் முழுதும் பார்த்துவிட்டான். படுக்கும் இடம் சாப்பாட்டுச் சாலை, பர்ணசாலை, சங்கீத சாலை இன்னும் பல இடங்களும் நன்றாகத் தேடிப் பார்த்தாயிற்று. எங்கும் சீதையைக் காணவில்லை.

"சீதையைக் காண்பதற்காக நுழையக் கூடாத இடமெல்லாம் நுழைந்து பார்த்தேன். ஸ்திரீகள் படுத்திருக்கும் இடம் புகுந்து தருமத்தைக்கூட ஓரளவு புறக்கணித்து விட்டேன். காரியம் சித்தியாகவில்லை" யென்று துயரப்பட்டுப் பர்ணசாலையை விட்டு வெளியே தோட்டத்துக்குள்சென்று அங்கே பற்பல கொடிகளால் பின்னப்பட்ட பந்தல்களிலும் கொட்டகைகளிலும் விஹார ஸ்தலங்களிலும் தேடினான். எங்கும் காணவில்லை.

"லங்கா நகரம் முழுவதும் பார்த்தாகிவிட்டது. ராவணன் அரண்மனை முழுதும் தேடியாகி விட்டது. இனி என்ன இருக்கிறது? சீதையைக் காணாமல் திரும்புவதா? இங்கேயே என் உயிரைத்தான் விட வேண்டும். அதுவே நான் செய்யக் கூடியது" என்று தீராத துக்கத்தில் மூழ்கினான்.

* * *

மறுபடியும், "சீ! சீ! இப்படி மனத் தாழ்ச்சி அடையலாகாது. தீரனுக்கு இது தகுந்த லக்ஷணமல்ல" என்று கிளம்பி மறுபடியும் ஓர் அங்குலம் மிச்சமின்றி எல்லா இடங்களையும் நன்றாகக் கவனித்துத் தேடிப் பார்த்தான். மூடியிருந்த கதவுகளையும் ஜன்னல்களையும் திறந்து பார்த்தான். கோர ரூபமான ராக்ஷஸப் பெண்களையும் மிகச் சௌந்தரியமான பல மானுடப் பெண்களையும் நாக கன்னிகைகளையும், அரக்கன் அபகரித்து வந்த பல அழகிகளையும் கண்டான். சீதையைக் காணவில்லை.

இன்னது செய்வது என்று தோன்றாமல் ஹனுமான் மனம் மிகத் தத்தளித்தது. "காரியம் கைகூடவில்லையென்று கிஷ்கிந்தைக்குத் திரும்பினால், கேட்போருக்கு நான் என்ன சொல்லுவேன்? சீதையைப் பற்றி இனி ஆசையில்லையென்றால் ராமன் கதி என்னவாகும்? உயிரை விடுவான். அதற்குப் பிறகு மற்றவர்கள் கதி என்ன? என் முயற்சி வீணாயிற்று என்று சுக்ரீவனிடம் சொல்வதைவிட இங்கேயே நான் காட்டிலும் சமுத்திரக் கரையிலும் வாழ்நாளைக் கழித்து விடுவது மேலாகும்! அதுதான் ஏன்? தற்கொலை செய்து கொள்வதே நலம். சீதை இலங்கையில் இருக்கிறாள் என்று சம்பாதி சொன்ன சொல் பொய்யா? அல்லது இவ்விடத்தில் இருந்தவள் துஷ்ட ராக்ஷஸனால் கொல்லப் பட்டாளா? அவளை அரக்கிகள் தின்று விட்டிருக்கலாம். ஒன்றும் தோன்றவில்லையே! என்ன செய்வேன்?" என்று இப்படி ஹனுமான் பலவாறு சிந்தித்துச் சிந்தித்துக் கவலைக் கடலினின்று கரையேற வழி தெரியாமல் இருந்தான். அச்சமயம் உயர்ந்த மதிலால் சூழப்பட்ட ஒரு விஹார வனத்தைக் கண்டான்.

"ஆஹா! இந்த இடம் நான் தேடவில்லை. இங்கே கட்டாயம் சீதையைக் காண்பேன்!" என்று வாயு புத்திரன் ராமன், லக்ஷ்மணன், சீதை, சுக்ரீவன் இவர்களைத் தியானித்தான். ருத்ரன், இந்திரன், யமன், வாயு, சந்திரன், சூரியன், மருத்கணங்கள் இவர்களை மனத்தால் வணங்கிப் பிரார்த்தனை செய்தான்.

"இது ஒரு தனி நந்தவனமாக இருக்கிறது. நன்றாகக் காக்கப்பட்டு வருகிறது. இவ்விடத்தில் சீதை வைக்கப் பட்டிருக்கிறாள் என்பது நிச்சயம்" என்று ஹனுமானுடைய உள்ளத்தில் ஒரு நம்பிக்கை தோன்றிற்று.

மறுபடியும் தேவர்களை யெல்லாம் நமஸ்கரித்துவிட்டு அந்த அசோகவனத்துச் சுவர் மேல் குதித்து ஏறி நின்றான். மிக அழகிய ஓர் உத்தியான வனம் கண்டான்.

(தொடரும்)

விளங்கும் விஞ்ஞானம்

மூன்று நிமிஷங்களில் ஒரு மைல் ஓட முடியுமா?



விளையாட்டு வீரர்கள் பத்து செகண்டில் நூறு கெஜ தூரம் ஓடுவதைப் பார்க்கிறோம். இதே விகிதத்தில் கணக்குப் போட்டால் மூன்று நிமிஷங்களில் ஒரு மைல் ஓடுவது சாத்தியமான காரியமாகத்தான் இருக்கவேண்டும்.

ஆனால் நம் உடலின் அமைப்பு இப்படிப்பட்ட வறட்டுக் கணக்குக்குள் அடங்குவதில்லை. சற்றுத் தூரமே ஓடுகிறவனும் நீண்ட தூரம் ஓடுகிறவனும் தங்கள் தங்கள் உடலை வெவ்வேறு விதமாகப் பயன்படுத்துகிறார்கள்.

சற்றுத் தூரமே ஓடுகிறவன் தன் கால்கள் தன்னை எவ்வளவு வேகமாக அழைத்துச் செல்லுமோ அத்தனை வேகமாக ஓடுகிறான். தசைகளுக்கு இருதயமும் நுரையீரலும் பிராண வாயுவை எத்தனை வேகமாக அனுப்ப இயலுமோ, அதைவிடத் துரிதமாகவே அவன் ஓடுகிறான். பிராணவாயு இல்லா விட்டாலும்கூட, தசைகளால் சிறிது நேரம் நன்றாக இயங்க முடியும். ஆனால் குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு அவற்றுக்குப் பிராணவாயு கிடைத்தே ஆகவேண்டும் — ஈடு செய்தும் தீரவேண்டும். அதனால்தான் ஓட்டப் பந்தயத்துக்குப் பிறகு அதில் ஈடுபட்டவர்களுக்கு ஒரேயடியாக இறைக்கிறது. நீண்டதூரம் ஓடவேண்டி விரும்புபவன் ஆரம்பத்திலேயே வெகு வேகமாக ஓடினானேயானால் கொஞ்ச நேரத்துக்குப் பிறகு தசைநார்கள் பிராணவாயு கிடைக்காததால் சரியாக இயங்க மறுத்துவிடும். ஓடுபவன் முடிவான எல்லையை அடையு முன்னரே இறைக்க இறைக்க உட்கார்ந்து விடுவான்.

ஆதிநாள் மனிதனை ஓட்டம்தான் மரணத்திலிருந்து காப்பாற்றியது. புலியின் கோரமான பசிக்கு இரையாகாமல் வேகமாக ஓடி அருகிலுள்ள மரத்திலேறினான்.



ஆனால் இதே மனிதன் மானைப் பின்தொடர்ந்தபோது அவன் ஓட்டத்தில் சற்று நிதானம் காட்டினான். எடுத்த எடுப்பிலேயே வெகுவேகமாக ஓடினானேயானால் மானை நெருங்கியதும் வேலை எறியக்கூட அவன் உடலில் சக்தி இராது.

ஓட்டக் கலையை நுணுக்கமாக் ஆராய்ந்து முன்னேற்றத்துக்குரிய மாறுதல்களைச் செய்திருக்கிறார்கள். இதனால்தான் புதிய 'ரிகார்டு'கள் ஏற்படுத்தப்படுகின்றன. ஆயினும் இந்த முன்னேற்றத்துக்கு ஒரு வரம்பு உண்டு. பெரிய அளவில் எதையும் சாதித்துவிட முடியாது.

ஆனால் நீச்சல் இப்படியல்ல. இதில் ஒரே ஒரு விதமாகத்தான் தசைகள் இயங்க வேண்டும் என்பதில்லை. ஓடுவதைப் போலன்றி நீச்சலில் பலவிதமான முறைகளைக் கையாள முடியும். ஒரு பாணியைக் காட்டிலும் இன்னொரு பாணி சிறந்தது என்று முன்னேறுகையில் பலன் அதிகரிக்கிறது. அதாவது குறிப்பிட்ட தூரத்தை நீச்சலடித்துக் கடக்க எடுத்துக் கொள்ளும் நேரம் குறைகிறது.

ஒரு மைல் தூரம் ஓட எடுத்துக் கொள்ளப்பட்ட நேரம் 1886ல் 4 நிமிஷம், 13 செகண்டு. 1967ல் 3 நிமிஷம் 51 செகண்டு. அதாவது முன்னேற்றம் எட்டரை சதவிதம். இதே காலகட்டத்தில் நீச்சல் ரிக்கார்டுகளைப் பாருங்கள். ஒரு மைல் நீச்சலடிக்க 1886ல் 28 நிமிஷம் பிடித்தது. 1967ல் 18 நிமிஷமே ஆயிற்று. முன்னேற்றம் 36 சதவிதம்!

இந்த வியக்கத்தகு முன்னேற்றத்துக்குக் காரணம் 'க்ரால்' எனப்படும் ஒரு வகை நீச்சலடிக்கும் பாணி. 1886ல் இத்தகைய நீச்சலடிக்கும் பாணி கண்டுபிடிக்கப்படவில்லை. இதே போல் ஓட்டத்திலும் முழுக்க முழுக்கப் புதுமையான முறையை யாராவது கண்டுபிடித்தால் திறன் அதிகரிக்கலாம். ஆனால் அது நடக்கிற காரியம் அல்லவே!




''மூன்று நிமிஷங்களில் ஒரு மைல் ஓடுவதென்பது நடக்காத காரியம்'' என்று தைரியமாகச் சொல்லலாம், 'பெட்' கட்டலாம். ஆனால், ''பன்னிரண்டு நிமிஷங்களில் ஒரு மைல் நீந்துவதென்பது அசாத்தியம்'' என்று யாரும் துணிந்து கூறுதல் உசிதமல்ல; ஏனெனில், இப்படிக் கூறுபவர் இன்னும் சில ஆண்டுகளில் முகத்தில் கரியைப் பூசிக்கொள்ள நேரிடலாம்! —மைக்கேல் ஆர்னல்டு


சிதம்பர ரகசியம்

கதை: கோமதிசுவாமிநாதன்

சித்திரம்: ராஜு

11






தூக்கம்! அது மனிதனின் முதல் எதிரி!...
சமையலறையில்...
ஒரு டம்ளர் காப்பி வேணும்.
டிகாஷன் இருக்கா?
தொடரும்

The best mills use Nirlon yarn

NIRLON YARN brings a new kind of excitement to fabrics. Fabrics with a beautiful difference—sensually soft, vibrantly textured. In a wild plumage of colours.
A charming cascade of georgette from HIMSONS. With billowing harem-girl trousers.
From STANDARD SILK MILLS—A midnight blue sky studded with gold is this alluring hostess gown that Cleopatra might have worn.




காணிக்கை
ஆர்வி

அத்தியாயம் 1

வெள்ளித் திரையில் விழுந்த சக்கச் சதுரமான வெளிச்சம் கண்ணுக்குப் பிடிபடாமல் 'குர்...ர்' என்ற சத்தத்தோடு துள்ளிக் குதித்துவிட்டு இருளோடு கலந்து விட்டது. அந்தச் சமயத்தில் தான் பாஸ்கரன் அந்தத் திறந்தவெளி அரங்கத்துக்குள்ளே பூனைமாதிரி நடந்து வந்தான். திரையில் சிதறித் தெறித்த வெளிச்சத்தில் தான் வந்ததை யாரும் கவனித்திருக்க மாட்டார்கள் என்று நினைத்துக் கொண்டான்.

பனி வாடை கலந்த குளிர் காற்று அங்கிருந்த கூட்டத்துக்குக் கொஞ்சமும் அஞ்சியதாகத் தெரியவில்லை. ஆண்களும் பெண்களுமாகச் சுமார் முந்நூறு பேர்கள்போல் அந்தத் தோட்ட அரங்கத்தில் கலந்து உட்கார்ந்திருந்தார்கள். அந்த இடமே தேவலோகம் மாதிரி உரு மாறிப் போயிருந்தது. நாலு பக்கமும் மரகதச் சுவர் எடுத்தது போல் கத்தரித்து விட்ட பச்சைச் சவுக்கு வரிசை. நுழை வாயிலில் அழகான தோரணம். அரங்கத்தில் விளக்குகள் எரியவில்லையே தவிர, அங்கே வண்ண விளக்குகள் வருகிறவர்களை வரவேற்றுக் கொண்டிருந்தன.

திடீரென்று மேல்புறத்தில் இரண்டு மூன்று வரிசைகளிலிருந்து ஒரு கதம்பக் கூச்சல் ஆரவாரமாக எழுந்தது. படம் ஆரம்பிக்காமல் இருப்பதற்காகத்தான் சத்தம் போடுகிறார்களோ என்று பயந்தது போல், படம் ஓடத் தொடங்கிவிட்டது. வண்ணத்தில் ஒரு செய்திப் படம். இருந்தும் ஆரவாரம் அடங்கவில்லை. இன்னும் விறுவிறுப்போடு கேட்டது. எல்லாத் தலைகளும் அந்தப் பக்கமே திரும்பின. படம் மறைக்கப் போகிறதே என்று உடலை வளைத்துக் கொண்டு வந்த பாஸ்கரன் அந்தப் பகுதியில் ஓர் இடம் தேடி உட்கார்ந்த பிறகுதான் அந்த அமளி மெல்ல அடங்கியது. அவனுக்குத்தான் இத்தனை அமர்க்களமான வரவேற்பு. எல்லாரும் அவனுடைய நண்பர்கள்தான். இந்த மாதிரியான கலாட்டாவுக்கு என்ன காரணம் என்று பாஸ்கரனுக்குத் தெரியும். அந்த அரைகுறை வெளிச்சத்தில் அடையாளம் புரியாமல், 'பாப்' செய்து கொண்டு வெள்ளை ஸ்கர்ட் அணிந்திருந்த பெண் ஒருத்தியைத் தன் நண்பன் என்று நினைத்துக்கொண்டு பக்கத்தில் போய் உட்கார்ந்து விட்டான். அப்படி உட்கார்ந்ததுடன் மட்டுமா? 'ஹலோ சம்' என்று அவள் முதுகிலும் ஒரு தட்டு செல்லமாகத் தட்டிவிட்டான். அந்த யுவதி திகைத்துப் போய்த் திரும்பிப் பார்த்த போதுதான் அவனுக்குத் தன் மகத்தான தவறு தெரிந்தது.

"ஓ! ஐ ஆம் ஸாரி, எக்ஸ்க்யூஸ் மீ...!" என்று முகத்தில் அசடு வழிய, துள்ளியெழுந்து வந்து விட்டான். அதைப் பார்த்துத்தான் பின் வரிசைகளிலிருந்து அந்தக் கதம்பக் கூச்சல் ஒரே சமயத்தில் எழுந்தது. அவன் அப்படி எழுந்திருக்காமல் போயிருந்தால், யாரோ அவனுக்குத் தெரிந்த பெண் போலிருக்கிறது என்று எல்லாரும் சும்மா இருந்திருப்பார்கள். ஆனால் அது எப்படி முடியும்? முன்பின் தெரியாத ஒரு மங்கையின் முதுகில் போய்த் தட்டுவதாவது, பக்கத்திலேயே உட்கார்ந்திருப்பதாவது? நல்ல வேளை; அவள் இந்தப் பக்கத்துப் பெண் அல்ல; மொரீஷஸ் தீவிலிருந்து மேல் படிப்புப் படிக்க வந்திருப்பவள்.

அப்போது எழுந்த ஆரவாரம் உடனே அடங்காததற்கான காரணமும் அவனுக்குப் புரிந்தது. பல நாட்களுக்குப் பிறகு அவன் இன்றுதான் பான்ட்—ஷர்ட் அணிந்து கொண்டு வெளியே புறப்பட்டிருந்தான். இது வரையில் அவன் அணிந்தது வேட்டி — சட்டை தான். இன்று அவன் போட்டிருந்த சபதம் நிறைவேறிவிட்டது. அதாவது அமெரிக்காவில் போய்ப் படிக்கவும் பயிற்சி பெறவும் அழைப்பு வருகிற வரையில் அவன் மேல்நாட்டுப் பாணியில் உடுத்துவதில்லை என்று தன் நண்பர்களிடம் சபதம் போட்டிருந்தான். இன்றைக்குத் திடீரென்று அவன் உடையில் மாற்றம் இருப்பதைக் கண்ட பிறகு நண்பர்கள் சும்மா இருப்பார்களா? அவனை வரவேற்கிற உற்சாகம்தான் அந்தப் பரபரப்புக்கும் கூச்சலுக்கும் காரணம்.

ஒருவிதமாக அவன் நண்பர்கள் மத்தியிலே இடம் பார்த்து உட்கார்ந்து கொண்டதும் அவன் கையைப் பிடித்துக் குலுக்க அத்தனை கைகளும் நீண்டன. அவனும் முடிந்த வரையில் சளைக்காமல் சமாளித்துப் பார்த்தான். முடியவில்லை.

"ஓ — ப்ளீஸ், ப்ளீஸ்... தாங்க் யூ ஸோ மச்!" என்று கையை உயரே தூக்கி, சரணடைவது போல் பொதுவாக ஒரு பெரிய கும்பிடாகப் போட்டுவிட்டான். அதற்குப் பலனும் இருந்தது. உண்டான சலசலப்பு கப்பென்று ஓய்ந்து விட்டது. அப்படியும் சற்றுப் பொறுத்து இந்த விஷயமே எதுவும் அறியாத மென்கரம் ஒன்று மெல்ல வந்து அவன் முன்னே நீண்டது. இவ்வளவு தூரம் கேட்டுக் கொண்ட பிறகுமா...?

நல்ல காலமாக அவன் தன்னை நோக்கி வந்த கரத்தைச் சற்று நிதானமாகப் பார்த்தான். பொன் வளையல் அணிந்த பூவை ஒருத்தியின் கை. அந்தக் கையிலே ஒரு துண்டுக் கடிதம். ''தாங்கஸ்'' என்று அவசரமாகச் சொல்லிவிட்டு அதை வாங்கிக் கொண்டான். வெளிச்சம் போதாதுதான்; இருந்தாலும் கையெழுத்து தெரிந்தது. ஒரே வரி :

''காட்சி முடிந்ததும் எங்கள் வீட்டுக்கு வர வேண்டும். — அஜிதா.''

அஜிதா எழுதினால் அது கட்டளை போலத்தான் இருக்கும். அவன் திரும்பிப் பார்த்தான். அதைக் கொடுத்தவள் அதற்குள் பின்வரிசை இருளில் கலந்து உட்கார்ந்து விட்டாள். இதை அவளேதான் எழுதிக் கொண்டு வந்து கொடுத்திருப்பாள் என்பதில் சந்தேகமில்லை. .வந்தவளை ஏறிட்டுக்கூடப் பார்க்காமல் போனது தப்புத்தான் என்று பட்டது. ''ஹலோ!'' என்றாவது சொல்லியிருக்கலாம். போகட்டும்; அதைப் பற்றி இனிமேல் என்ன ?

அந்த அஜிதாவின் சித்திரம் ஒருகணம் அவன் நெஞ்சில் எழுந்தது. பதினேழு வயதுக்கு மேலேயே புள்ளி போடுகிற ஒரு வளர்த்தி. மாநிறம்தான்; ஆனாலும் செவ்வரி படர்ந்த முகம். எலிஸபெத் டெய்லர் மாதிரி பளிங்குக் கண்கள். உதட்டோரத்திலே தோன்றியும் தோன்றாமலும் நெளிந்து மறைகிற புன்னகை — அது ஒரு புதிர் அவனுக்கு என்றைக்குமே. எத்தனையோ தேர்வுகளில் வகுப்பிலேயே முதல்வனாக, பட்ட மேல் படிப்பில் பல்கலைக் கழகத்துக்கே முதல்வனாகத் தேறியிருந்தும் இந்தப் புதிரைப் புரிந்துகொள்ளும் முயற்சியில் அவன் இதுவரையில் வெற்றி பெற்றதில்லை. இனியும் முடியுமா என்பது சந்தேகம்தான். அந்தப் பளிங்குப் பார்வைக்கும் இந்தப் புதிர்ப் புன்னகைக்கும் அவள் தன் பெற்றோரில் யாரைக் கொண்டிருக்கிறாள் என்று தெரியவில்லை. அவளுடைய அப்பா — அதாவது அவனுடைய ஒன்றுவிட்ட மாமா— கொஞ்சம் சாதுவான சுபாவம் உடையவர். உருவத்தைப் பார்த்தால் ராஜா வேஷம் கொடுக்கலாம் என்று தோன்றும். ஆனால் அதிகாரமெல்லாம் செலுத்துகிற பழக்கத்தை அவர் மறந்து போய்ப் பல காலமாகிவிட்டது. அவருடைய சாமர்த்தியத்தை விட அதிருஷ்டத்தில்தான் சக்கரம் ஓடிக் கொண்டிருந்தது. மனைவி வாய்த்திருந்த விஷயத்தில் மட்டும் அந்த அதிருஷ்டம் சற்று மட்டோ ' என்று மற்றவர்களுக்குப் படலாம். மனைவிக்குக் கட்டுப்பட்டு நடப்பதில் உள்ள அநுகூலத்தைப் பற்றி அவர்களுக்கு என்ன தெரிந்திருக்கப் போகிறது! சாயலில் அப்பாவையும் தோரணையில் அதிக அளவில் அம்மாவையும் கொண்டிருந்த அஜிதா தன்னைக் கண்டதும் இவ்வளவு தூரம் எழுந்து வந்து அழைப்புக் கொடுத்ததே பெரிய காரியம்தான் என்று எண்ணிக் கொண்டான் அவன்.

அவனுக்காகவே காட்டுவது போல அமெரிக்க நாட்டின் இயற்கை வளப்பை விளக்கும் செய்திப் படமாக இருந்தது அது. நாட்டின் வளப்பமும் சரி, அதைப் படமாக்கிக் காட்டி விளக்கியிருக்கிறமுறையும் சரி, ஒன்றையொன்று மிஞ்சுகிற தரத்தோடு நெஞ்சை அள்ளுகிற வகையில் இருந்தன. பாஸ்கரனுக்கு இதை நம் செய்தித் துறைப் படங்களோடு ஒப்பிட்டுப் பார்க்க விருப்பமில்லை. நல்லதைத் திறந்த மனத்தோடு பார்ப்பதை விட்டு விட்டு, இல்லாததை நினைத்து வருத்தப்பட்டுக் கொள்வதில் என்ன ஆதாயம் இருக்கிறது என்ற கட்சியைச் சேர்ந்தவன் அவன். இந்தப் படத்தைத் தொடர்ந்து திருஷ்டிப் பரிகாரம் போல் தமிழ்ப்படம் ஒன்று ஆரம்பமாயிற்று. கண்ணைக் கரிக்கிற வெளிச்சமும் காட்டுக் கத்தலும் கூடவே ஆரம்பமாகி விட்டன. இதை யெல்லாம் தூக்கியடிக்கிற பேத்தல் கதையும் பொருத்தமற்ற நடிக நடிகைகளும் அவர்களுடைய காதல்—மோதல் சேஷ்டைகளும், அப்பப்பா ! அவனால் பொறுக்கவே முடியவில்லை. கல்லூரி மாணவர்களாம், மாணவிகளாம் ! இந்தப் பாத்திரங்களுக்கு நாற்பத்தைந்து ஐம்பது வயது நடிகர்களையும் முப்பது முப்பத்தைந்து வயதுள்ள நடிகைகளையுமா தேர்ந்தெடுப்பது ? டைட்ஸும் ஜீன்ஸும் போட்டுக் கொள்ளப் பொருத்தமான உடல் அமைப்பு முதலில் வேண்டாமா? அவனுக்கு வேறு வழியில்லை. மாணவர் சங்க நிதிக்காக நடத்துகிற படக்காட்சி. உற்சாகமாகப் பலர் தலையில் டிக்கெட்டைச் சுமத்தி விற்றிருக்கிறார்கள். அவன் தலையிலும் ஒரு டிக்கெட்டைக் கட்டி விட்டார்கள். அதனால் வந்திருக்கிறான். வந்த இடத்தில் பல நண்பர்களைச் சந்திக்கலாம். வெளிநாட்டுக்குப் போக வாய்ப்பு வந்திருக்கிற செய்தியைச் சொல்லி அவர்களோடு மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம். அப்படிப்பட்ட நிலையில் இந்தப் படத்துக்குப் பயந்துகொண்டா எழுந்து போவது ? 'சே, சே' என்று உட்கார்ந்திருந்தான்.

ஆனால் அவன் நினைத்தது எதுவும் நடக்கவில்லை. படம் முடிந்தவுடனேயே

மற்றவர்கள் வந்து சூழ்ந்து கொள்வ தற்குள்ளாகவே துண்டுக் கடிதம் கொடுத்திருந்த அஜிதா அவன் அருகே வந்து விட்டாள்.

''போகலாமா, பாஸ்கர் ?''

''ஓ! நீ வந்து விட்டாயா? ஆனால் இன்னும் ஒருவரையுமே சந்தித்துப் பேச வில்லையே !''

''இனி அது எப்படி முடியும்? மணி ஒன்பதரைக்கு மேல் ஆகிறதே! எல்லா ரும் வீடு போய்ச் சேர வேண்டாமா ? அதற்குச் சாயங்காலமே வந் திருக்கணும்.''

''அதுவும் சரிதான். மணி என்ன, ஒன்பதரையா? ஐயோ, கடவுளே! இத்தனை நேரமா நாம் பொறுமையாய் இருந்திருக்கிறோம்? சரி, வா. எல்லாம் பிறகு சந்தித்துப் பேசிக்கலாம்.''

இருவரும் வருகிற வழியில் அந்த மொரீஷஸ் மங்கை எதிர்ப்பட்டதோடு நில்லாமல் அவனை அடையாளமும் கண்டு கொண்டு புன்னகை பூத்தாள். அவனோடு வந்த அஜிதாவையும் ஒரு மாதிரியாகப் பார்த்தாள்.

''எக்ஸ்கியூஸ் மீ, இது என் கஸின்!'' என்று நிற்காமல் சொல்லிக் கொண்டே வேகமாக நடந்தான். நின்றால் தொல்லைதானே ?

''தெரியுமா இவளை ?''

''ஏன் அப்படிக் கேட்கிறே ?''

''என்னமோ அப்படிச் சிரிக்கிறாளே! தெரியாமல் அவள் பக்கத்தில் போய் உட்கார்ந்ததாக நினைச்சுட்டேன்.''

''அதனால் என்ன இப்போ? எல்லாம் ஒண்ணுதான். வெளிநாட்டுப் பெண் களுக்கே கூர்மையான பார்வை. போட்டோகிராபிக் மெமரி. இந்தக் கூட்டத்திலேயும் என்னைச் சட்டென்று தெரிந்துகொண்டு விட்டாள், பாரேன்!''

'உன்னை அடையாளம் கண்டுபிடிக் கிறது ஒரு கஷ்டமா?' என்று அவள் கேட்க நினைத்தாள். அதற்குள் வெளி வாசல் வந்து விட்டது.

''வண்டி இல்லையே, டாக்ஸிதானே?'' என்று கேட்டான் பாஸ்கரன்.

''அவ்வளவு சுலபமா இங்கே கிடைக்குமா ?''

''வேகமாக முதலில் போனால் கிடைக்கலாம்.''

அப்படியே வேகமாக நடந் தார்கள். அவன் சொன்னது போலவே ஒரு டாக்ஸி கிடைத்து விட்டது. அஜிதா வின் வீடு இருந்த நாகநாதன் கால னிக்குவிடச் சொன் னார்கள்.

''நல்ல சான்ஸ்தான், இல்லே?''

''அதுக்குத்தானே வேகமாக வந் தோம் !''

''இதைச் சொல்லல்லே. அமெரிக்கா போகிற சான்ஸைச் சொல்றேன்.''

''ஓ — அதுவா? ஆமாமாம்.''

''எப்பப் புறப்படணுமாம்?''

''இரண்டு மாதத்திலே புறப்பட வேண்டியதுதான் !''

''அம்மாவுக்குத்தான் பாவம், கஷ்ட மாய் இருக்கும்.''

''உங்க அம்மாவுக்கா ?''

''அவள் இதைக் கேட்டால் சந் தோஷப்படுவாள்.''

பாஸ்கரன் இதற்குப் பதிலே சொல்ல வில்லை. டாக்ஸி போய்க் கொண் டிருந்தது.


அத்தியாயம் 2

அஜிதாவின் அம்மாவைப் பற்றி அவனுக்கு ஓரளவு நன்றாகவே தெரி யும். அவள் தன்னுடைய முன்னேற்றத் துக்காகச் சந்தோஷப்படுவாள் என் பதை அவனால் நம்ப முடியவில்லை. அடுத்தாற்போல் மாமாவைச் சொன்ன லும் பொருந்தும். அவன் விஷயத்தில் அவருக்கு அக்கறை, அபிமானம் இரண்டுமே உண்டு. படிப்பில் மிகவும் கெட்டிக்காரன் என்பதில் சிறிது பெருமையும் உண்டு. மனைவிக்குப்



பயந்து எதையுமே வெளிக் காட்டிக் கொள்ள மாட்டார். ஆனால் உள்ளூற இதைக் கேட்டால் அவருக்குச் சந்தோஷம் மட்டுமா, பெருமையாகவும் இருக்கும். சந்தேகமே இல்லை.

பாஸ்கரன் கல்லூரியில் சேர்ந்தது முதலே உபகாரச் சம்பளத்தில் படித்தான். பிறகு எம். டெக். வரையில் மத்திய சர்க்கார் கல்வி மான்யத்தின் உதவி பெற்று வந்தான். தகுதி காரணமாகக் கிடைத்த உதவியானதால் பெற்ற



உதவிக்கு நிபந்தனை எதுவும் கிடையாது. அவனுக்குக் கிடைத்த பணம் அவன் வரையில் தாராளமாகப் போதும். ஒரு சமயம் முதலில் பணத்தைக் கட்டிவிட்டு, பின்னால் வாங்கிக் கொள்ளும்படியாகி விட்டது. அந்தப் பணத்தை உடனே மாமாதான் கொடுத்து உதவினார். சர்க்கார் உதவித் தொகையை வாங்கி அதைத் திருப்பிக் கொடுக்கப் பல மாதங்கள் பிடித்தன. அதற்குள் அந்த மாமி எத்தனை தடவை ஜாடையும் மாடையுமாகச் சொல்லிக் காட்டி விட்டாள்! யார் யாருக்கெல்லாமோ பணம் கொடுத்து உதவியிருக்கிறார்களாம். ஒருவருமே திருப்பிக் கொடுப்பதில்லையாம்! வேறு யாரையோ தான் குறிப்பிட்டுச் சொல்கிறாள். ஆனால் அவனையும் வைத்துக் கொண்டு சொன்னால் அவனுக்கு எப்படி இருக்கும்?

அந்தப் பணம் வந்ததுமே அதைத் திருப்பிக் கொடுக்கப் போன போது மாமி வீட்டில் இல்லை. மாமாதான் இருந்தார்.

''சரிதாண்டா போடா! உன் செலவுக்கு வெச்சுக்கோ. நல்ல டிரஸ்ஸா நாலு தைச்சுக்கோ!'' என்றார் அவர்.

''இல்லே மாமா, எங்கிட்டே இது போகவும் மீதி இருக்கு.''

''இருக்கட்டும்டா போடா! இன்னும் உனக்கு எத்தனையோ செய்யணும். பெரிசாத் திருப்பிக் கொடுக்க வந்துட்டான்'' என்று செல்லமாக அதட்டினார்.

மாமாவின் அதட்டலில் ஒரு சுகம் இருந்தது. அதனால் அவன் கொஞ்சம் தயங்கினான்.

அவன் போகாமல் இன்னும் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து அவர், ''நான் சொல்றது உனக்குப் புரியல்லியோ?'' என்று குரலை உயர்த்தினார்.

''இல்லே மாமா, மாமி வந்து....''

''மாமியாவது, சாமியாவது, அவள் கிடக்கட்டும்டா போடா! இது ஒண்ணும் அவளுக்குத் தெரிய வேண்டாம். நீ எடுத்திண்டு போ, சொல்றேன்.''

'அவளுக்குத் தெரிய வேண்டாம்' என்று சொன்னதே அவனுக்குப் பிடிக்கவில்லை. இதிலெல்லாம் அவள் தலையிடக் கூடாது என்றோ, இதற்கெல்லாம் தடை சொல்ல மாட்டாள் என்றோ சொல்லியிருந்தால், அப்போது சரியாக இருந்திருக்கும். அப்படி அவர் சொல்லவில்லையே என்று நினைத்துக் கொண்டே இருக்கிற சமயத்தில் மாமி அங்கே வந்து விட்டாள்.

அவள் தலையைக் கண்டதுமே, ''உஹ்ஹூம்; அப்படிச் சொல்லுடா அவன்! அப்புறம் என்ன சொன்னான்?'' என்று திடீரென்று அவர் பேச்சையும் குரலையும் மாற்றிக்கொண்டது பாஸ்கரனுக்குச் சிரிப்பாகவும் வேடிக்கையாகவும் இருந்தது.

''யார், என்னத்தைச் சொல்கிறாரும்?'' என்றபடி அருகில் வந்த மாமியின் கண்கள் அவன் கையிலிருந்த ரூபாய் நோட்டுக்களைப் பார்த்து விட்டன.

அவளுக்குத் தெரியாமல் மாமா அவனைப் பார்த்து முறைத்தார். பல்லைக் கடித்தார்.

''யாரைப் பத்திக் கேக்கறீர் மாமா? அது என்ன கையிலே?''

''முந்தி வாங்கிண்டு போய்க் கட்டினேனே, அந்தப் பணம்....''

''வந்துடுத்தா அது? அதானே பார்த்தேன். சரி, இப்படிக் கொடு. நல்ல சமயத்துக்குக் கொண்டு வந்திருக்கே. துணிக்கடை செட்டியாருக்குப் புடவைப் பணம் கொடுக்கணுமேன்னு இருந்தேன்!'' என்று அதை வாங்கிக் கொண்டாள்.


மாமாவுக்கு வந்த ஆத்திரத்தைச் சொல்வதா, அதை அப்படியே எச்சிலோடு சேர்த்து விழுங்கிய வேகத்தைச் சொல்வதா என்று இருந்தது பாஸ்கரனுக்கு. கையிலிருந்த செய்தித் தாளைத் தூக்கி விட்டெறிந்து விட்டு எழுந்து போனார் மாமா. அவனும் எழுந்திருந்து விட்டான். மாமி வருவதற்குள் அவர் அவனை அனுப்பிவிடப் பார்த்ததும், மாமி கையில் படும்படி கையில் பணத்தை வைத்திருப்பதைக் கண்டு அவர் தவித்த தவிப்பும் இப்போதும் கண்ணிலேயே நின்றன. அவருக்கு வேறு எந்த வருத்தமுமில்லை. அவனுக்கு அந்தப் பணம் சேராததில்தான் அவருக்கு அசாத்தியக் கோபம். அப்புறம் இரண்டு, மூன்று மாதங்கள் போல் அவனிடம் அவர் பேசவேயில்லை. மாமா அப்படிப்பட்டவர். அவரைச் சொன்னால் ஒப்புக் கொள்ளலாம். நாகலக்ஷ்மி மாமி சந்தோஷப்படுவதாவது?

அவர்கள் இருவரும் வந்து சேர்ந்த போது அஜிதாவை எதிர்பார்த்து மாமி ஹாலில் கிடந்த சோபாவிலேயே உட்கார்ந்திருந்தாள். இவர்களைப் பார்த்ததில் துளி மாறுதல் ஏற்பட வேண்டுமே? முகத்திலே மலர்ச்சிக்கு அஜிதாவாவது வேறு யாராவது இரவல் கொடுத்தால் தான் உண்டு.

''இத்தனை நேரம் என்ன உனக்கு? நன்னாத்தான் இருக்கு. நீங்க வர்றது!''

அதைவிட இந்த நேரத்துக்கு மேல் இவனையும் அழைத்துக் கொண்டு ஏன்

கீதைக் கதைகள்



'வைரம் என்பது நிலக்கரியின் இன்னொரு ஸ்திதி. முத்துக்கள் புழுக்களின் மலங்களே.'

11. நிறை

அவ்வேந்தனின் புகழ் அட்ட திக்குகளெல்லாம் பரவலாயிற்று. அவன் தாமரை இலை நீராக, ஜனக ராஜனைப் போல ராஜ்ய பரிபாலனம் செய்வதாகப் பேசிக் கொண்டார்கள். இத்தகைய பிரஸ்தாபத்தி லுள்ள உண்மை பொய் அறியும் கருத்து, தேசாந் திரியான தபசி ஒருவரின். உள்ளத்தில் மூண்டது.

அவர் அரண்மனைக்கு வந்து வேந்தனைச் சந்தித் தார். தம்முடைய தபோ வலிமையினால் அவனுக்கு முன்னால் மூன்று பொன் தட்டுகள் தோன்றும்படி செய்தார். ஒன்றிலே வைரங்களும் இன்னொன்றில் முத்துக்களும் மற்றதில் அன்றலர்ந்த மலர்களும் குவிந்து கிடந்தன.

''வேந்தே! உன் முன் மூன்று தட்டுகள். ஒன்றில் வைரங்கள், அவை நிலமடந்தை தன் நெஞ்சின் ஆழத்தில் புதைத்து வைத்திருக்கும் அற்புதச் செல்வங்கள். அடுத்ததில் முத்துக்கள். அவை கடற்கன்னியின் பொக்கிஷங்கள். மூன்றாந் தட்டில் மலர்கள். அநித்தியத்தின் நித்தியத்து வத்தை விளக்கும் அற்பங்கள். இம்மூன்றினுள் நீ விரும்பும் தட்டு ஒன்றினை என் அன்புப் பரிசாக ஏற்றுக் கொள்.''

மூன்று தட்டுக்களையும் பார்த்த வேந்தன் இள நகை சிந்தினான். மலர்த் தட்டிலே இருந்த மலர் களுள் ஒன்றினைக் கையில் எடுத்தான். ''இதுவே போதும், ஏனையன வேண்டாம்'' என வேந்தன் அடக்கத்துடன் கூறினான்.

''நீ வேந்தன்; துறவியல்லன்!'' என்றார் தபசி.

''அறிவேன். அத்துடன் வைரம் என்பது நிலக் கரியின் இன்னொரு ஸ்திதி என்பதையும் முத்துகள் புழுக்களின் மலங்களே என்பதையும் அறிவேன்.''

''உன் கையில் உள்ள மலர்?''

''இறை சிருஷ்டியின் ஜீவத்துவத்தைப் புன்னகை மூலம் அஃது எனக்கு ஞாபகப்படுத்துகிறது. அச் சிரிப்பு அதனையும், என்னையும், உம்மையும் சிருஷ் டித்த அநாதி மூத்த சித்துருவாகிய முதல்வனைப் பற்றிய நினைவினை என் நெஞ்சமெல்லாம் நிரப்பு கின்றது. இந்நினைவினால் அவன் பணித்த கருமத்தை இயற்றி அதன் வழி அவனைச் சேரும் யோகத்தைச் சுகிக்க முடிகின்றது'' என்றான் வேந்தன்.

தபசி ஒரு கணம் யோசித்தார்.

''வேந்தே! நீதான் உண்மையான தபசி. நீ வாழ வேண்டிய இடம் காடு. அங்கு செல்லவும்'' என்றார்.

''காட்டில் வாழும் உமக்கு வைரங்களும் முத் துக்களும் இன்னமும் சம்பத்துக்களாகவே தோன்று கின்றன. ஆகையால் காட்டிலே சென்று வாழ் வதனால் யான் அடையப் போகும் பயன் யாது?''

பதில் சொல்லத் தபசியின் நா எழவில்லை.

- எஸ். பொன்னுத்துரை

வந்தாய் என்று கேட்டிருக்கலாம். அத் தனை சுமுகமான வரவேற்பு.

''என்னம்மா இது. பாஸ்கரைப் பார்க்கல்லியா ?''

'' அவனையும்தான் சொல்றேன், அதான் பார்த்திண்டே இருக்கேனே! அவனுக்குப் புதிசா என்ன வந்திட்டுது இப்ப ?''

''என்ன இவ்வளவு சுலபமாச் சொல்லிட்டே ? அமெரிக்காவுக்குப் போறதுக்கு என்ன எதிர்பார்த்திண் டிருந்ததோ, அதுதான் வந்திட்டுது!''

''என்னது! என்னது?'' என்பதற்கு மேல் மாமிக்குப் பேச்சே வரவில்லை. அப்படி ஓர் அடைப்பு அடைத்துக் கொண்டது.

''பாஸ்கருக்கு அமெரிக்கா போகிற சான்ஸ் வந்திட்டுது.''

''நிஜமாவே வந்துட்டுதா? நீங்கள் ளாம் சும்மாப் பரிகாசத்துக்குப் பேசிக் கிறதான்னு எண்ணிண்டிருந்தேன்! அதெல்லாமாவது வரதாவதுன்னு....''

''கடையிலே இன்னிக்கு அது வந்தே விட்டது. இன்னும் இரண்டு மாசத்திலே பாஸ்கர் புறப்பட் டாகணும் !''

இந்த வார்த்தைகளை மனத்துக்குள் வாங்கிக் கொள்ளவே, சிறிது நேரமா யிற்று மாமிக்கு.

''மாமா மாடிக்குப் போயிட்டாரா?'' என்றான் பாஸ்கரன்.

''பின்னே இத்தனை நாழி அவராலே உட்கார்ந்திருக்க முடியுமா? அவருக்குத் தான் கொஞ்ச நாளா உடம்பு கலகலப் பாகவே இல்லையே. இப்பத்தான் கண் ணைச் சித்தே மூடியிருப்பார்.''

''நான் இன்னொரு சமயம் வந்து பார்த்துக்கறேன். இப்ப அதுக்காக வரல்லே.''

''நான் அதுக்காகச் சொல்லல்லே.. ஆறு வந்து, அவ்வளவு தூரம் போற துன்னு சொன்னு ஏகச் செலவு ஆகுமே? அதுக்கெல்லாம்?''

''என்ன ஆறு என்ன? எல்லாச் செல வும் அவாளே கொடுத்துடப் போறும்மா.''

''ஓ்ஹோ, அது வேறேயா? அவ் வளவும் கொடுத்திடுவாளா?''

> இருபது ஆண்டுகளுக்குமுன் ஜப்பானில் பதினெட்டாயிரம் பேரிடம்கூடக் கார் கிடையாது. இப்பொழுது ஆண்டுக்குப் பதினெட்டாயிரம் பேர் கார் விபத்தில் இறந்து போகிறார்கள்.
>
> "ஸ்டேட்ஸ்மன்" - "பாபு"

''பின்னே? அதுவே மிஞ்சிப் போய் விடும்.''

நாகலக்ஷ்மி மாமியின் உள்ளம் கண்ணாடியில் தெரிவது போல் அத்தனை தெளிவாகத் தெரிந்தது பாஸ்கரனுக்கு. இப்படி ஒரு வாழ்வு இவனுக்கு வந்து விட்டதே என்று அது கிடந்து பொருமிக்கொண்டிருந்தது. செலவுக்கும் அவன் யார் கையையும் எதிர்பார்க்கப் போவதில்லை என்பது அதை இன்னும் மோசமாக்கி விட்டது. திடீரென்று அவன் நிலை உயர்ந்து, தாங்கள் கீழே சிறுத்து நிற்பது போல் ஒரு பிரமை தட்டிவிட்டது.

அஜிதா ஏதோ காரியமாக உள்ளே எழுந்து சென்ற சமயம் பார்த்து, ''சரி, இதுக்கு உங்க அம்மா என்ன சொல்றா?'' என்று பாஸ்கரனிடம் கேட்டாள் மாமி.

''அவள் சொல்ல என்ன இருக்கு? அவளுக்கு ரொம்பச் சந்தோஷம். போயிட்டு வான்னுதான் சொல்றா!''

''ம்ம்... பிள்ளையைக் கண் காணாத தேசத்துக்கு அனுப்பிச்சுட்டு இருக்கேன் என்கிறாளா? ரொம்பத்தான் தைரியம் அவளுக்கு!''

உள்ளே யிருந்தபடியே அம்மாவை அழைத்தாள் அஜிதா.

''நீ என்ன நினைச்சாலும் சரி. உங்க அம்மா என்லிக்குமே அழுத்தம்தான்!'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே போனாள் மாமி.

இந்த மாமியின் மனம் இந்தப் பிரயாணத்துக்கு ஏதாவது ஒரு தடை துளியாவது கிடைக்காதா என்று தேடுவதை உணர்ந்து பாஸ்கரன் தனக்குள் சிரித்துக் கொண்டான். அவள் மனத்துக்கு ஆறுதல் உண்டாகும்படி தடைபோல ஒன்றைக் கற்பனை செய்தாவது சொன்னால் என்ன என்றுகூட எண்ணினான். அவனுக்குக் கற்பனை உருவாவதற்குள்ளேயே மாமி திரும்பி வந்துவிட்டாள்.

''அப்பா பாஸ்கரா! மணி பத்தாகிறது. இங்கேயே ஒரு வாய் சாப்பிட்டு விட்டுப் போயிடு. இலையைப் போடறேன்'' என்றாள் மாமி.

''அடடே, அதெல்லாம் வேண்டாம். அம்மா காத்திண்டிருப்பாள்.''

''நேரமாச்சே, அவ்வளவு தூரம் போகணுமேன்னு சொல்றேன்!''

''இது என்ன புதுசு, எத்தனையோ நாள் போயிருக்கேனே!''

''சாப்பிடச் சொல்லாமே அனுப்பிச்சிருக்கேன்னு ஜாடையாச் சொல்றதைப் பாத்தியா அஜிதா!''

அஜிதா முன்னால் வந்து, ''அதெல்லாம் எனக்குத் தெரியாது. இன்னிக்கு அம்மாதான் பரிமாறப் போறா. அதனாலே வீட்டுக்குப் போயும் சாப்பிடலாம்!'' என்று கேலியாகச் சொன்னாள் சிரித்துக் கொண்டே.

அவன் சாப்பிட நேர்ந்தபோதெல்லாம் நாகலக்ஷ்மி மாமி அத்தனை திருப்தியோடு உபசரித்தாள் என்று சொல்லிவிட முடியாது. அதற்கு ஒரு மாறுதலாக இன்றைக்குத் திருப்தி இல்லாமல் தான் சாப்பிட்டு வைப்போமே என்று அவன் எழுந்து வந்து இலை முன்னே உட்கார்ந்தான்.

சாப்பிடுகிறபோது, பார்த்த வண்ணப் படத்தைப் பற்றிப் பேச்சு வந்தது. கடைசியில் வழியில் அடையாளம் கண்டு கொண்டு புன்னகை செய்த பெண்ணைப் பற்றியும் பேச்சு வந்தது.

''மொரீஷஸ் பெண்தானே அவள்? ஏதோ ஒரு பத்திரிகையிலே அவள் படம் வந்திருக்கு; பார்த்திருக்கேன்.''

''நான் அதையும் பார்த்ததில்லை; அவளையும் பார்த்ததில்லை!''

''பின்னே தெரிஞ்சவள் மாதிரி சிரித்தாளே!''

''அந்தக் காரணத்தை அவளைத்தான் கேட்கணும். என்னைக் கேட்டால்?''

அஜிதாவின் முகத்தில் இப்போது அந்தப் புன்னகை நெளிந்தது.

''என்ன புன்சிரிப்பு இது? எதுக்காக?''

''இப்பத்தான் எனக்குப் புரிஞ்சுது. பக்கத்திலே வந்து உட்கார்ந்துட்டு, பைத்தியம் மாதிரி பயந்திண்டு எழுந்து போனியேன்னுதான் சிரிச்சிருக்காள், அவள்!''

''இருக்கலாம்'' என்றான் பாஸ்கரன்.

''அமெரிக்காவிலே போய் அத்தனை நாள் தனியா இருக்கணுமே — எனக்கு என்னமோ ஒண்ணும் சொல்லத் தெரியல்லே!'' என்றாள் அஜிதா.

''என்ன பேசிக்கிறேள் நீங்க? எனக்கு ஒண்ணும் புரியல்லியே!'' என்றாள் நாகலக்ஷ்மி மாமி.

''உனக்கு இதெல்லாம் புரியாது!'' என்றாள் அஜிதா.

இருவருமே சிரித்தார்கள். (தொடரும்)

ரகுபதி ராகவ

மகாத்மா காந்தி

தமிழாக்கம் : ராஜாஜி

47 – (II)

பல ஹிந்துக் கோவில்களிலும், கிறிஸ்தவக் கோவில்களிலும், மசூதிகளிலும் மோசமும் திருட்டும் நடைபெறலாம். புனிதம் குறைந்து போய்க் குற்றம் மிகுந்திருக்கலாம். ஆயினும் பூஜை செய்யும் குருக்கள்மார்கள் அனைவரும் கெட்டவர்கள் என்று சொல்லவும் முடியாது. எல்லாக் கோயில்களுமே கெட்டுப் போயின என்றும் சொல்ல முடியாது. எந்தச் சமயத்துக்கும் ஒரு கோவில் அவசியமாகிறது. கோவிலில்லாமல் சமயம் இருக்க முடியாது. சமயம் தோன்றியதும் அதற்கென்று ஒரு கோயில் தோன்றவே தோன்றும். இது ஒரு தவிர்க்க முடியாத இயற்கை விதி.

ஆண்டவனுக்கு இந்த மனித உடலே ஒரு கோவில் என்பார்கள் அல்லவா? அப்படிச் சொல்வதில் தவறு ஒன்றுமில்லை. ஆயினும் தோலும் சதையும் கொண்ட அந்தக் கோவில்கள் எத்தனையோ பாபமும் குற்றமும் நிறைந்த கோவில்களாக இருக்கின்றன! அந்தக் கோவில்களையெல்லாம் இடித்து அழித்து விட ஒப்புவோமா? சிலரேனும் நல்லவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் இதயத்தில் ஆண்டவன் கோவில் கொண்டிருக்கிறான் என்பது நமக்குப் போதுமல்லவா? சதையும் தோலும் போர்த்திய உடல்களாகிய இந்தக் கோவில்களைப் போலவே கல்லும் சுண்ணாம்பும் போட்டுக் கட்டிய பல கோவில்களும் கெட்டுத்தான் போயிருக்கின்றன. அவை தோன்றியது நன்மைக்காகவே. ஆனால் மனிதனுக்குள்ள குறைகளினால் கெட்டுப் போகின்றன. இதற்காகக் கோவில்களே வேண்டாம் என்று சொல்வதற்கில்லை.

ஏதேனும் ஓர் இடத்தைப் புனிதமாகக் கருதிக் கோவில் என்றோ மடம் என்றோ வைத்துக் கொண்டுதான் எல்லா மதங்களும் சம்பிரதாயங்களும் உலகத்தில் நடைபெற்று வருகின்றன. அப்படியல்லாத எந்தச் சம்பிரதாயத்தையும் நான் கண்டதில்லை. மக்களைத் திருத்துவதற்காகத் தோன்றிய பெரியோர்கள், மகாத்மாக்கள், அவதார புருஷர்கள் அனைவருமே தம்மைச் சேர்ந்த மக்கள் வைத்துக் கொண்டிருந்த கோவில்களை இடித்ததில்லை; விட்டுவிட்டதுமில்லை. சீர்திருத்தம் செய்யத்தான் பார்த்தார்கள். அழித்துவிட முயலவில்லை. கோவில்களிலேயே நின்று உபதேசம் செய்திருக்கிறார்கள்.


நான் பல ஆண்டுகளாகக் கோவில்களுக்குப் போனதில்லை. அதனால் நான் உயர்ந்தவனாகி விடவில்லை. என்னைப் பெற்ற தாய் உடல் நோயால் பாதிக்கப்பட்டுத் தடைப்பட்ட சமயம் தவிர, எப்போதுமே கோவிலுக்குப் போய் வந்தாள். கோவிலுக்குப் போகாத என்னை விட அவளுடைய தெய்வ பக்தியே மிகச் சிறந்தது. இதில் சந்தேகமே இல்லை. அதைப் போலவே லட்சக் கணக்கான மக்களுடைய தெய்வ பக்தியானது கோவில்களாலும், மசூதிகளாலும் உருவம் கொண்டு காக்கப்பட்டு வருகிறது. அவர்கள் மூடர்கள் அல்ல, மூர்க்கர்கள் அல்ல. குருட்டுப் பக்தர்களும் அல்ல. அறியாமையும் மூர்க்கத்தனமும் எல்லா மக்களுக்கும் பொது. அந்தக் குறை சம்பிரதாய சமய முறைகளினால் உண்டானதல்ல. அது நம்முடைய உள்ளத்திலுள்ள குற்றத்தினால் உண்டான குறை. எந்தச் சம்பிரதாயத்தைக் கொண்டிருந்தாலும் ஒன்றே.

(ஹரிஜன் 11-3-33)





வெள்ளம் வடிந்ததா? வேதனை தீர்ந்ததா?



செப்டம்பர் மாதம் 21ந் தேதி திங்கட்கிழமை. ஆந்திரத்தின் தலைநகர் ஹைதராபாத். அன்று காலை விடியும்போதே மானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. மாலையிலிருந்து மழை வலுத்தது.

அன்று இரவு ஸ்டேட் பாங்க் பியூன் பாபுராவ் மழைக்காகத் தனது வீட்டு ஜன்னல் கதவுகளைச் சாத்திவிட்டு மனைவி, குழந்தைகளுடன் படுக்கச் சென்றான். மார்வாரி அகர்வால் குடித்தனக்காரர்கள் இன்னும் விளக்கை அணைக்கவில்லையே என்று முணுமுணுமுணுத்தபடி படுக்கையில் புரண்டார். முதல் காட்சி சினிமாப் பார்த்து விட்டு வந்த பூரிப்புடன் ஜக்கய்யா வீட்டு வெளி வராந்தா சார்ப்பில் கட்டிலில் படுத்தபடி கண்ணை அயர்ந்தான்.

இவர்களும், இவர்களைப் போன்ற பல்லாயிரக்கணக்கான ஹைதராபாத் வாசிகளும் இரவு நிகழவிருக்கும் இயற்கையின் உற்பாதத்தைப் பற்றி ஒன்றும் அறியாது அமைதியான உள்ளத்துடன் படுக்கச் சென்றனர்.

இரவு ஒன்பது மணியிலிருந்து பெய்யத் தொடங்கிய மழை இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு பெருஞ் சீற்றம் கொண்டது. திக்குக்கள் எட்டும் சிதறி வானம் பொத்துக் கொண்டு பாய்ந்தது. நான்கு மணி நேரக் குறுகிய அவகாசத்தில் 140 மி.மி. மழை. 1908ம் ஆண்டு வெள்ளத்துக்குப் பிறகு இத்தகைய பலத்த மழையை ஆந்திரக் கேந்திரம் கண்டதில்லை.

ஜாபிலி குன்றில் பெய்த மழை நீர் பெருக்கெடுத்து மல்லபல்லி தாழ்நிலங்களில் தோன்றியுள்ள புதிய காலனி வீடுகளை அரித்துக் கொண்டு, அங்கிருந்த சாக்கடைத் தாரைகள் வழிவிட மறுக்க, சினந்து தடம் பெயர்ந்து, குடிசைகளிலும் ஓட்டு வீடுகளிலும் புகுந்து புறப்பட்டு, தூங்காத மக்களைத் துயர் உற ஓடச் செய்து, அகாபுரா சானக்வாடி தெருக்களில் குழி பறித்தபடி, தேங்காறு இரட்டை மாடிக் கட்டடங்களைத் தரை மட்டமாக்கி, எதிரில் வந்த ரிக்ஷா, வண்டி, மரச் சாமான்களை எடுத்து வீசி, நுங்கும் நுரையுமாகப் பாய்ந்து, பத்தடிக்கும்மேலே உயர்ந்து, உறங்கிய மனிதர்களை அடித்துச் சென்று, கால்நடைகளைப் புரட்டி எடுத்து, ஏழைகளின் கூரைகளை இரையுண்டு, கௌலிகூடா டெலிபோன் எக்ஸ்சேஞ்ஜ் கேபின்களை அறுத்து, பல்லாயிரம் டெலிபோன்களை 'சாக' அடித்து, கௌலிகூடா மூன்று மாடி சங்கரய்யா கட்டடத்தை நிர்மூலமாக்கி, பாதுகாப்புக்கு அதில் பதுங்கியவர்களைப் பந்தாடிப் பிணமாக்கி, நகர பஸ் நிலையத்தை நாடி, அங்கு முந்நூறு அடி சிமின்ட் வீதியைப் பாளம் பாளமாகப் பெயர்த்து, நடைபாதையில் நிறுத்தப்பட்டிருந்த லாரியையும், மூன்று டாக்ஸிகளையும், ஓர் அம்பாஸடர் காரையும் மூஸி நதியில் குப்புறக் கவிழ்த்து, மூஸியின் பொங்கும் பிரவாகத்தில் சங்கமித்த பிறகுதான் வெள்ளத்தின் கொள்ளை நடை ஓய்ந்தது.

ஓர் இரவில் வெட்டி அடித்து, கொட்டி இடித்த மழை வெள்ளம், பேராற்றலுடன் பெருகி வந்து, எல்லையற்ற பயங்கர விளைவுகளைப் பின்தங்கவிட்டு, விடியுமுன்னே ஒன்றுமே செய்யாத நல்ல பிள்ளை போல் அடங்கி ஒடுங்கி ஓய்ந்து விட்டது.

காலையில் நகரம் விழித்துக் கொண்ட போதுதான் எத்தகைய மகத்தான சேதம் நிகழ்ந்துவிட்டது என்பது மேட்டுக்குடி மக்களுக்கும், அதிகாரிகளுக்கும், அரசுக்கும் புலப்பட்டது. டெலிபோன் வேலை செய்யாததால்

- ☐ முதன் மந்திரி ஸ்ரீ பிரும்மானந்த ரெட்டி வெள்ளச் சேத இடங்களைப் பார்வையிடுகிறார்.
- ☐ கொழிப்பதுவும் - கெடுப்பதுவும் மழை.
- ☐ உயிரிழந்த கால்நடைகள் கணக்கிலடங்கா.





ஜவான்கள் ஓடி உயர் போலீஸ் அதிகாரிகளை எழுப்பினர். வாரங்கல்லிலிருந்து விடியற் காலை திரும்பிய போலீஸ் மந்திரிக்குத் தியணைக்கும் இலாகா டைரக்டர் விபத்துச் செய்தியைக் கூறினர். முதல் மந்திரியும், போலீஸ் அமைச்சரும், இதர அதிகாரிகளும் ஸ்தலத்துக்கு விரைந்தனர்.

சுற்றம் இழந்து, சோகம் ததும்பும் குரல் களும்; இடிகவர், நனை கூரையிடையே கண் ணீர் வடிக்கும் ஏழை மக்களின் ஓலமும் தெளி வற்ற வானத்தை நிரப்பின. இருளின் திரை தூக்கப்பட்ட போது அழுந்திக் கிடக்கும் பிணங்களும், அரித்துக் கிடந்த தெருக்களும், மனம் அலுத்துப் போன மக்களும் சொல்ல வொண்ணாச் சோக பாத்திரங்களாகத் தோற்றமளித்தனர்.

* * *

இரவில் நடைபெற்ற துன்பியல் அநுப வங்கள் ஒவ்வொன்றாக வெளிவந்தன.

ஸ்டேட் பாங்க் பியூன் பாபுராவ் வீட்டை வெள்ளம் சூழ்ந்ததும், மனைவியையும் நான்கு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு ஓர் உயர்ந்த பிளாட்பாரத்தின் மீது உட்கார்ந்து கொண்டான். திடீரென்று அண்மைக் கட்ட டம் இடிந்து, மேடை சரிந்து, குடும்பம் தண்ணீரில் மிதந்தது. பாபுராவின் ஒரு கைப் பிடி லாந்தர் கம்பத்தில்; மற்றொரு கையில் கைக் குழந்தையுடன் நீரில் திணறிய மனைவி யின் கூந்தல். இரண்டு மணி நேர உயிர்ப் போராட்டம்; மனைவி மூழ்க ஆரம்பித்தாள்; இடிபாடுகளில் உடல் சிக்கிக் கொண்டதால் அவனால் நகர முடியவில்லை. அவள் கொஞ்சம் கொஞ்சமாகச் சாவதைப் பரிதாபகரமாகப் பார்க்கவே முடிந்தது. காலையில் அவனை அரை உயிரும் கால் உயிருமாகக் கண்டு எடுத் தார்கள். அவனது அண்ணன் வீட்டில் தூங் கிய இரு குழந்தைகள் மட்டும் பிழைத்தன.

வீட்டினுள் நீர் புகுந்தது கண்டு நர்ஸ் ஆண்ட்ருஸ் வெளியேற முனைந்த போது, கட்டடம் பெயர்ந்து, எத்தனையோ உயிர் களைப் பேணிய அவள் உயிரைப் பறித்துச் சென்றது.

தன் இரு குழந்தைகளை வெள்ளத்திலிருந்து காப்பாற்ற முனைந்த ஒரு தகப்பனுர் கையில் அகப்பட்டது வேறு இரு குழந்தைகள். அவரது செல்வங்கள் சென்ற இடம் தெரியவில்லை.

மல்லப்பல்லியிலிருந்த மக்கள் வீட்டைத் திறந்து போட்டு விட்டு (மூடிச் சென்றால் வெள்ளத்தின் தாக்குதலால் வீடு இடிந்து விடுமாம்) அருகிலிருந்த உயர் மருதிக் கட்ட டத்துக்குள் அடைக்கலம் புகுந்தனர்.

கௌலிகூடாவில் சங்கரய்யா பில்டிங்கில் சொந்தக்காரர் குடும்பம் தவிர பதினறு குடித்தனங்கள். வெள்ளத்துக்குப் பயந்த ஜனவெள்ளம் பாதுகாப்புக்கு முதல் மாடிக் குச் சென்றது. நீர் மட்டம் உயர்ந்தபோது இரண்டாவது மாடிக்கு ஓடிற்று. சுமார் பன்

- ☐ தேங்காளுனில் இடிந்து விழுந்த கட்டிடம்.
- ☐ கௌலிகூடாவில் 'சங்கரய்யா பில்டிங்' என்ற மூன்று மாடிக் கட்டிடம் தரைமட்டமாகி விட்டது. ராணுவமும், தியணைப்புப் படையினரும் மூன்று நாட்கள் இடைவிடாது உழைத்து முப்பத்தேழு பிரேதங்களை மீட்டனர்.
- ☐ கௌலிகூடா நகர பஸ் நிலையம் பட்டபாடு!
- ☐ உடமைகளுடன் உயிருக்கு மன்றாடி ஓடும் உலகம்.
- ☐ படங்கள் உதவி: பொதுநலச் செய்தி இலாக்கா, ஆந்திரப் பிரதேசம்.

சுபஸ்ரீ





விரண்டு மணி இருக்கும். மளேர் என்ற சத்தம். மூன்றாவது மாடி இரண்டாவது மாடியில் சரிந்து, இரண்டு ஒன்றில் விழுந்து... யாத்திரியின் மூன்று குழந்தைகள், சகோதரர் குழந்தைகளிரண்டு, பெண்களிருவர் இடிந்த கட்டடத்தில் புதைந்தனர். மேலும் பலருக்கு இதே கதி. தீயணைப்புக் குழுவினரும், ராணுவத்தினரும் மூன்று நாட்கள் இடைவிடாது தோண்டி, சுமார் முப்பத்தேழு பிணங்களை எடுத்தனர். அந்தப் பிராந்தியமே ஒரேயடியாக நாறிக் கொண்டிருந்தது.

வெள்ளத்தில் உருட்டிச் செல்லப்பட்ட ஐந்து வயதுப் பாலகனை ஒரு மிதக்கும் டயர் காப்பாற்றியது.

சுடுகாடு நிறைய தண்ணீர் நிரம்பி இருந்ததால் அதன் அருகே நடைபாதையில் பிணங்கள் எரிக்கப்பட்டன.

சுமார் பத்தாயிரம் டெலிபோன்கள் தொடர்பு இழந்தன. 'மிகப் பெரிய கேபிள் விபத்து' என்று அதிகாரி ஒருவர் குறிப்பிட்டு, 'விரைவில் சீர் செய்ய பம்பாய், சென்னை முதலிய இடங்களிலிருந்து தொழில் நுணுக்க ஊழியர்கள், நுட்பக் கருவிகளுடன் வருகின்றனர்' என்றார்.

ஹைதராபாத் தவிர பீகம்பெட், நல்லகுண்டா என்ற இடங்களில் வெள்ளத்தின் நாச வேலை நடைபெற்றது. லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் கூரை இழந்து அவதியுறுகின்றனர். பரிகார வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. சேதமடைந்த இடங்களை நாமும் சுற்றிப் பார்ப்போம்.

சங்கரய்யாவின் மகள் யாத்திரியைச் சந்திக்கிறோம். ''ஊரெல்லாம் கூப்பிட்டு மேல்மாடியில் ஏறிக் கொள்ளுங்கள் என்று கூறினேன். எனது மூன்று குழந்தைகளைக் காப்பாற்ற முடியவில்லை. என் மகன் பத்தாவது வகுப்பில் முதல் வகுப்பில் தேறினான் ஐயா. தையல் மிஷின் ரிப்பேர்கூடச் செய்வான். எத்தனை நம்பிக்கை வைத்திருந்தேன். போய் விட்டான். விட்டலேசுவரர் கோயிலில் அகதிகளாக மாறிவிட்டோம். மாடி வீட்டில் வாழ்ந்தேன் ஐயா. இனி என்ன செய்யப் போகிறேன்....'' என்று விக்கித்து அழுகிறார். நமது கண்களிலும் நீர் முட்டுகிறது.

மார்வாரி அகர்வாலைக் கண்டு பிடிக்கிறோம். மொட்டை அடித்துக் கொண்டிருக்கிறார். தாய்க்குக் கொள்ளி போட்டதாலோ என்னவோ! கண்கள் வெறித்து நோக்குகின்றன! நம்மைக் கவனிக்க மறுக்கிறார். அவரது வீட்டில் எண்ணெய்க் கடை வைத்துப் பதினையாயிரம் பெறுமான பொருள் இழந்த கோமுட்டி ராகவலு கூறுகிறார்: ''வீடு இடிந்த நஷ்டம்; தாயார் சகோதரர் மறைவு; நேற்றிலிருந்து சேட்டு சித்தம் நிலையில் இல்லாமல் சுற்றி வருகிறார்.''

திங்கட்கிழமை இரவிலிருந்து தூங்காது இருபத்தி நாலு மணி நேரமும் உழைக்கும் தீயணைப்புப் படையினர் ஓர் இடிந்த கட்டடத்தில் நசுங்கிய பிணங்களைத் தேடுகின்றனர்.

'முனிசிபல் எமர்ஜன்ஸி குழு' என்ற பாட்ஜ் அணிந்த ஊழியர்கள் கௌலிகூடா சாக்கடைப் பாலத்தில் வேலை செய்கின்றனர். ஒரே நாற்றம். ''சாக்கடைக்குள் ஒரு ஜீப்பும், மாடுகளும், மனிதப் பிணங்களும் அழுகிய நிலையில் இருக்கின்றன. 'டைவர்'கள் உள்ளே புகுந்து ஜீப்பில் இரும்புக் கயிற்றைப் பிணைக்க வேண்டும். அதற்குமுன்பு சாக்கடையில் பிளீச் ஊற்றிக் கிருமிகளை அழிக்க வேண்டும். 'டைவர்'களுக்கும் இனாகுலேஷன் செய்ய வேண்டும். பிறகு க்ரேன் மூலம் இழுக்க வேண்டும்..... உடன் எடுக்காவிட்டால் அழுகி, தொத்து நோய் வரலாம்...'' ஊழியர்களது சேவை நமது மனத்தைத் தொடுகிறது.

சீக் குருத்வாராவில் ஒரே நெரிசல். தலைவர் ஸர்தார்ஜி தமது சொந்த வீட்டை மறந்து விட்டுப் பம்பரம் போல் வளைய வருகிறார். ''எங்கள் லங்காராவில் (சமையல் அறை) சுமார் ஆயிரம் பேருக்குத் தினசரி உணவு அளிக்கிறோம். அரிசி, சப்பாத்தி, பால்.... இங்கு முஸ்லிம், சீக்கியர், ஹிந்துக்கள் எல்லாரையும் ஜாதிமத பேதமின்றி வெள்ளத்தின் போது குருத்வாரா காப்பாற்றியது...''

மைசூர் கபே, தாஜ்மஹால் ஹோட்டல் முதலாளிகள் தினசரி ஐயாயிரம் உணவுப் பொட்டலங்கள் வழங்கி வருகின்றனர்.

செஞ்சிலுவைச் சங்கம் போன்ற பல சமூக ஸ்தாபனங்கள் 'காம்ப்' நடத்தி வருகின்றன. கீஸ் பள்ளி போன்ற ஸ்தாபனங்கள் ரொட்டியும் துணியும் நல்குகின்றன. ஏராளமான நன்கொடைகள் வந்த வண்ணமிருக்கின்றன.

''இந்த வெள்ளத்தின் காரணம் மழை நீரைத் தேக்கிக் கொள்ளும் தாழ்நிலங்களில் வீடு கட்டியதுதான். தவிர டிரெயினேஜ் முறையில் பெருத்த மாறுதல்கள் தேவை. கண்டிபெட் ஏரிக் கரைகளை இன்னும் பலப்படுத்த வேண்டும்'' என்று விஷயம் அறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

திங்கள் இரவுக்குரிய பயங்கர விளைவுகள் சூடு ஆறி, நகரம் பழைய நிலைக்கு வருகையில் மற்றுமோர் அதிர்ச்சி ஏற்பட்டது.


வியாழக்கிழமை (24ந் தேதி) கண்டிபெட் ஏரியின் அதிகப்படி நீரை மூஸி நதியில் விடத் தொடங்கினர். அதுபற்றி முன் அறிவிப்பு செய்யாதது அந்த இலாகா குறைதான். இடீரென்று நதியில் வெள்ளப் பெருக்கைக் கண்டவுடன் ஜனங்கள் பீதி அடைந்தனர். 'ஏரியில் உடைப்பு. ஊருக்குள் ஜலம் வருகிறது. ஓடுங்கள்' என்ற குரல் எங்கும் ஒலித்தது.

அடுத்த விநாடி —

சாரி சாரியாக மக்கள் தங்கள் உடைமைகளையும் உயிரையும் உறவினர்களையும் கையில் பிடித்தபடி மேட்டு நிலங்களுக்கு ஓடினர்; கார் உள்ள சீமான்கள் 'நௌத்பாடா' என்ற குன்றுக்கு விரைந்தனர். உயிருக்கு ஆபத்து என்றால் வாழத் துடிக்கும் மனித குலம் எவ்வாறு இயங்கும் என்பதை அன்று நிதரிசனமாகக் கண்டோம்.

போலீஸ் வாகனத்தில் 'பயப்பட வேண்டாம். ஒன்றுமில்லை. வீட்டில் இருங்கள்' என்று அறிவிப்பு செய்த பிறகும் மக்களுக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. ரேடியோ, 'புரளியை நம்பாதீர்கள். அது அதிகப்படி ஜலம் விடும் சாதாரண நிகழ்ச்சி' என்று அடிக்கடி அறிவித்து அவர்களை வழிக்குக் கொணர்ந்தது.

''வெள்ளம் வடிந்ததா, வேதனை தீர்ந்ததா?'' என்று நமது ஆந்திரச் சகோதரர்களை அனுதாபத்துடன் தமிழர்கள் கேட்டால், 'வெள்ளம் ஒருமாதிரி வடிந்தது, வேதனைகள் இன்னும் நீடிக்கின்றன' என்றுதான் இப்போதைக்குப் பதில் வரும். துன்பங்களை விரைவில் துடைத்து, எங்கும் ஆனந்தத்தை ஏற்படுத்துவார் முதல்வர் ஸ்ரீமான் பிரும்மானந்தரெட்டி என்று நம்புவோமாக.



வர்ணமென்ன...
ஜாலமென்ன...
கோலமென்னவோ !
டாடா டெக்ஸ்டைல்ஸின் அழகுமிக்க
பிரிண்டட் பாப்ளின்களைக் கண்டதும் நெஞ்சில்
ஆயிரம் எண்ணங்கள் உதயமாகின்றன.
எத்தனை விதமான வர்ணஜாலங்கள்:
எண்ணங்கவரும் பிரிண்ட்கள் கமீஸாக
தைத்தாலும் கவர்ச்சிதான்—
இல்லை வேறு விதமான அணிகளுக்கும் உகந்ததுதான்.
மாதந்தோறும் பத்துவித புத்தம் புதிய பிரிண்ட்கள்,
'டெரீன்-காட்டன்' 2x2, மற்றும் கேம்ப்ரிக்
டிசைன்கள் வெளி வந்துகொண்டே இருக்கின்றன.
இதயம் கவர்ந்ததை எடுத்தணிவீர்.
TATA Textiles
ULKA TT-132 TH

11. இரு துருவங்கள்

சிவராமனது சிந்தனை தலைவர் வேதமூர்த்தியின் பேச்சுக்களிலேயே நிலைத்திருந்தது. என்னதான் லட்சியம், கொள்கை என்றிருந்தாலும், அதில் தர்மத்துக்கும், மனசாட்சிக்கும் இடம் இருக்கக் கூடாதா என்ன.......? கூடாது என்றல்லவா தலைவர் திடமாகக் கூறி விட்டார்!

அவருடைய -பேச்சில் தான் எவ்வளவு கண்டிப்பு! ஒவ்வொரு வார்த்தையும், எவ்வளவு தெளிவாக, திடமாக மாற்றானை அச்சுறுத்தும் வகையில் வெளிவந்தது.....!

தலைவரின் போக்கில் சில வேளைகளில் சிவராமனுக்கு எரிச்சல் தோன்





போராட்டங்கள்

ர.சு.நல்லபெருமாள்

றினாலும், மிகுந்த அக்கறையுடன் ஒரு தலைவனாவதற்குள்ள தகுதியைச் சிவராமனிடம் புகுத்த அவர் எடுத்துக் கொண்ட முயற்சியை நினைத்தபோது, நன்றிப் பெருக்கால் அவனுடைய கண்களில் நீர் சுரந்தது. வேதமூர்த்தியைப் பற்றி நினைக்க நினைக்கச் சிவராமன் வியப்பில் மூழ்கினான்.

தலைவர் என்ற முறையில் அவரிடம் கொடூரமும், நியாயமற்ற செயலும் இருக்கலாம். ஆனால் தனிப்பட்ட முறையில் அவரிடம் என்ன குறையைக் கண்டு விட முடியும்? மனிதனுக்குள்ள இயல்பான பலவீனங்களைக்கூட அகற்றிய வீர புருஷர்! எவையெல்லாம் மனித

னுடைய பலவீனங்களோ, அவற்றை யெல்லாம் தம்முள்ளேயே போராடி ஒழித்து வெற்றி கண்டவர். அனைத்தையும், தமக்கு அடிமைப்படுத்திவிடவேண்டும் என்னும் வெறி, எதற்கும் தாம் அடிமைப்படாத வைராக்கியத்தை உண்டாக்கி விட்டது.

நாற்பது வயது ஆகியும், இன்னும் பிரம்மச்சாரியாகவே வாழும் வேதமூர்த்தி, அந்த விஷயத்தில் ஒரு நெருப்புத்தான். கட்சியின் இலட்சிய நெருப்பிலே தம்மைப் பூரணமாகப் புடம் போட்டுக் கொண்டவர். ஓர் இயக்கத்துக்குத் தலைவராக இருப்பதற்கென்றே படைக்கப்பட்ட இரும்பு மனிதர்.

அவருடைய சொந்த வாழ்க்கையில் காணப்படும் தூய்மையும், வைராக்கியமும், சுயநலத்தை மறந்துவிட்ட தன்மையும்தான் மற்றவர்களை அச்சுறுத்தின. எத்தனையோ சொந்த ஆசைகளைச் சுமந்து கொண்டு திரியும் மற்றவர்களுக்கு அவர் அண்ட முடியாத நெருப்பு மாதிரிதான் இருந்தார்.

ஒரு நாள் அவர் கூறியது இன்னும் நினைவில் சாடுகிறதே! அவர் சொன்னார் —

''சிவராமன்! தன்னை அடக்காதவன், பிறரை அடக்க லாயக்கற்றவன். அற்பமான சதை வெறிக்காகப் பெண்ணை நாடுபவனிடம் எந்த உயர்வைக் காண முடியும்? மனிதனைச் சிறுமைப்படுத்துவது இந்தக் கேவலமான நுகர்ச்சிதான்.....''

கட்சியைச் சேர்ந்த ஒரு நபரின் நடத்தை பற்றிய புகார் வந்தபோதுதான் இப்படிக் கூறினார். இதைக் கூறிய போது அவர் முகத்திலும், பார்வையிலும்; கொந்தளித்த வெறுப்பும், அந்த நபரை அற்பப் புழுவாக நினைத்து உள்ளேயே கசந்துகொண்ட உணர்வும் இன்னும் சிவராமனின் நினைவில் பசுமையாக இருக்கின்றன.

• • •

சட்டசபைக் கூட்டத்தில் குழப்பம். எதிர்க் கட்சியினர் கூக்குரலிட்டுக் கொண்டிருந்தார்கள். ஆளும் கட்சியினர் பேச முடியாமல் தவித்தார்கள். சபாநாயகரோ செய்வதறியாது திகைத்தார். ஒவ்வொருவரிடமும் அன்றைய 'பாரத மணி'ப் பத்திரிகை இருந்தது.

தலையங்கத்துக்குப் பக்கத்தில் அச்சாகியிருந்த 'கோமாளி'யின் கேலிச் சித்திரம் எல்லாரையும் திகைக்க வைத்தது.

சீனத் தலைவரான மாஸே துங், கற்களை எடுத்துக் கொடுப்பது போலவும், கம்யூனிஸ்ட் கட்சிக்காரன் இந்தியா





"அதிகமான வேலையில் ஈடுபட்டிருக்கும் போது சில சமயம் எனக்குக் கடுமையான தலைவலி வருகிறது"

என்கிறார் விபின் ஜெயின்
பம்பாய் ஆபீசர்

தலைவலியா? விரைவிலே குணம் பெற அனாஸின் சாப்பிடுங்கள்



வயது வந்தவர்களுக்குப் போதுமான சக்தி வாய்ந்தது குழந்தைகளுக்கு நம்பகமானது

அனாஸின் சக்தி வாய்ந்தது—உலகெங்கும் டாக்டர்கள் மிக அதிகமாகச் சிபாரிசு செய்யும் வலி நிவாரணியை அதிக அளவில் கொண்டது. அனாஸின் நம்பகமானது. டாக்டரின் மருந்தைப் போல பல மருந்துகளின் சிகிச்சைக் கலவையே அது. தலைவலி, ஜலதோஷமும் ஃப்ளுவும், முதுகுவலி, பல்வலி, மற்றும் தசை வலிகளுக்கு அனாஸின் சாப்பிடுங்கள்.

சக்தி வாய்ந்த, நம்பகமான

அனாஸின்

இந்தியாவின் மிகப் பிரசித்தமான வலி நிவாரணி

4 வழிகளில் செயல்படுகிறது.



Regd. User of TM: Geoffrey Manners & Co., Ltd.

என்னும் கண்ணாடிக் கட்டடத்தின்மீது கற்களை வீசுவது போலவும், சற்றுத் தள்ளி நின்றவாறு இந்திய அரசு என்னும் போலீஸ்காரர் பயத்துடன் முகத்தைக் கைகளால் மூடிக் கொண்டு விரல்களின் இடுக்கு வழியாகக் கவனிப்பது போலவும் கேலிச் சித்திரம் வரையப்பட்டிருந்தது.

சபையில் பேசிக் கொண்டிருந்த எதிர்க்கட்சி அங்கத்தினர், தம்முடைய கையிலிருந்த 'பாரத மணி'ப் பத்திரிகையை விரித்துக் காட்டி அதில் அச்சாகியிருந்த புகைப்படங்களையும், கேலிச் சித்திரத்தையும் விளக்கிக்கொண்டிருந்தார்.

முந்தின இரவு 'பாரத மணி'ப் பத்திரிகைக் கட்டடத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் விளைவுகளைப் படம் பிடித்துப் 'பாரதமணி' அச்சிட்டிருந்தது. காம்பௌண்டுச்சுவரில் ஒட்டப்பட்டிருந்த மாஸேதுங்கின் படமும் 'பாரத மணி' கட்டடத்தில் ஏற்பட்டிருந்த சேதங்களும் போட்டோ' எடுக்கப்பட்டு அச்சாகியிருந்தன.

''தமிழ் நாட்டில் சீனாவின் படையெடுப்பு'' என்னும் தலைப்பில் 'பாரத மணி'யில் வெளியாகியிருந்த தலையங்கத்தை உரக்க வாசித்தார் ஓர் அங்கத்தினர்.

''....இது ஒரு சாதாரணத் தாக்குதல்தான். இதனால் ஏற்பட்ட சேதம், பதினைந்து கண்ணாடிச் சன்னல்களுக்கும், சில பல்புகளுக்கும்தாம். எல்லாம் நூறு ரூபாய்க்குள்தான் பண நஷ்டம். ஆனால் இதன் பின்னே மறைந்திருக்கும் ஆபத்தையும் பயங்கரத்தையும் மக்கள் உணர வேண்டும். காம்பௌண்டுச் சுவரில் ஒட்டப்பட்டிருந்த மாசே துங்கின் படம் எல்லாவற்றுக்கும் தெளிவான விளக்கம் கொடுத்து விட்டது. நாட்டின் துரோகிகள், வெளிநாட்டாரின் வருகைக்கு வாசலைத் திறந்து வைத்திருக்கிறார்கள். தாக்கியவர்கள், தாங்கள் யாருடைய கைக் கூலிகள் என்பதையும் வெட்கமில்லாமல் வெளிப்படுத்த மாசே துங்கின் படத்தையும் ஒட்டிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். பாவம், இவர்களுக்கு ஓர் இந்தியன் தலைவனைக் கிடைக்கவில்லை போலிருக்கிறது. வெளிநாட்டானைத் தலைவனாக ஏற்று இந்தத் தாக்குதலை நடத்திய நாட்டுத் துரோகிகள், கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள். நாட்டில் விஷக் கிருமிகள் பரவிக் கொண்டிருக்கின்றன. இதைக் கவனிக்கத் தவறி விட்டால், இந்த நாடு முழுவதுமே ஒரு நச்சுப் பொய்கையாகி விடும். பிறகு இதிலிருந்து நம்முடைய கலாசாரத்தையோ, பண்பாட்டையோ காப்பாற்றவே முடியாமல் போய் விடும்....''

இதை வாசித்த போது கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர்கள் கூச்சலிட்டனர். சட்ட சபை அங்கத்தினர் விடாமல் தொடர்ந்து படித்தார்:

''.....'பாரத மணி'யின் மீது விழுந்தவை அனைத்தும் வெறும் கற்கள் அல்ல; சீனாவின் துப்பாக்கிக் குண்டுகளுக்குச் சமமாக அவற்றைப் பாவிக்க வேண்டும். வீசியவர்கள் சீனர்கள் அல்லர் என்றாலும், சீனர்களுக்குப் பாதை காட்டும் இந்நாட்டுத் துரோகிகள். எதிரிகளைவிடத் துரோகிகள்தாம் ஆபத்தானவர்கள். இந்த ஆபத்தைத் தடுக்க அரசாங்கத்தையோ போலீஸாரையோ நம்பிப் பயனில்லை. தாக்குதல் நடந்து ஒரு மணி நேரத்துக்குப் பிறகுதான் போலீஸார் வந்தார்கள். பாவம், போலீசாரின் மீது குற்றமில்லை. ஆளும் கட்சியினரின் கொள்கை அப்படி. மக்கள் விழித்திருக்க வேண்டும். துரோகிகள் மறைவது வரை உறங்காதீர்கள். யாருக்கோ நேர்ந்த கதி என்றிருந்து விடாதீர்கள். 'பாரத மணி'யின் மீது விழுந்த கற்கள் நாளை நாடு முழுவதும் குண்டுகளாக வந்து விழும்.''

தலையங்கத்தைப் படித்து முடித்ததும், சபையில் சலசலப்பு ஏற்பட்டது. கம்யூனிஸ்ட் அங்கத்தினர்கள் கூச்சல் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

அதே நேரத்தில் ஊருக்குள் தெருக்களில் மக்கள் கும்பல் கும்பலாக நின்று கையில் 'பாரதமணி'ப் பத்திரிகையை வைத்துக் கொண்டு பேசிக் கொண்டிருந்தார்கள். 'பாரதமணி'ப் பத்திரிகைக் கட்டடத்தின் வாசலில் பெரிய கும்பல் கூடி, கட்டடத்தில் ஏற்பட்டிருந்த சேதங்களை அனுதாபத்துடன் பார்த்துக் கொண்டிருந்தது.

மத்தியானம் இரண்டு மணிக்குப் 'பாரத மணி'க் கட்டடத்துக்குள் பரபரப்புடன் நுழைந்தான் சிவராமன். நேரே முரளியின் அறைக்குச் சென்றான்.


''பழியைக் கம்யூனிஸ்ட் கட்சியின் மீது போடுகிறாயே ஏன்....?'' என்று கோபத்தோடு கேட்டான்.

''அவர்கள் செய்த வினைக்கு வேறு யார் மீது போடுவது? அப்படி யார் மீதாவது உங்கள் கட்சி பழியை ஒதுக்குகிறதோ?'' என்று கேட்டான் முரளி.

''நாங்கள்தான் செய்தோம் என்பதற்கு உனக்கு என்ன ஆதாரம்?'' — கோபம் தணியவில்லை சிவராமனுக்கு.

''ஏன் நின்று கொண்டே பேசுகிறாய்? உட்கார் !'' என்றான் முரளி.

ஏ, மீனே!



"எத்தனையோ காலமாகக் கடலுக்கு அடியிலேயே வாழ்ந்து வருகிறீர்களே. உங்களுக்குப் பகைமையான உலகம் தெரியுமா? மலையைத் தொட்டும் மாலை வானத்து அழகு தெரியுமா?

இவைகளை யெல்லாம் காட்டி உன்னை வியப்பில் ஆழ்த்திப் பரவசப்படுத்தலாமே என்ற எண்ணத்தில் தூக்கி வந்து பறக்கிறேனே, உனக்குச் சிறிதாவது நன்றி உணர்ச்சி இருக்கிறதா?

உலகோர் கழுகைப் பொல்லாதது என்பார்கள். நீயும் அப்படித்தான் நினைக்கிறாய் போலும்! இல்லாவிட்டால் என் எண்ணம் புரியாமல் இப்படி உயிரையே விட்டு விட்டு நிற்பாயா?"

ஆதாரம்: தாகூர் சிந்தனைகள்
"தேனு"

ஒருநாற்காலியை இழுத்து மேஜைக்கு எதிரே போட்டு அமர்ந்தான் சிவராமன்.

"இப்படி ஒரு தாக்குதல் நடந்திருப்பதைக் கண்டு நீ வருந்துகிறாயா? அல்லது மகிழ்கிறாயா? அதை முதலில் சொல்" என்றான் முரளி.

"நான் மகிழ்வதோ துக்கப்படுவதோ ஒரு புறம் இருக்கட்டும். இதை எப்படி எங்கள் மீது நீ சுமத்தலாம்?"

"மாசே துங் படத்தைச் சுவரில் ஒட்டி விட்டுச் சென்றிருக்கிறார்களே, இது ஒன்று போதாதா?" என்று கேட்ட முரளி, போனை எடுத்துச் சாமிநாதனிடம் பேசினான். சிறிது நேரத்தில் சாமிநாதன் உள்ளே வந்து ஒரு தாளை முரளியிடம் கொடுத்தான்.

"ராத்திரி கல்லெறிந்தவர்கள் போட்டு விட்டுப் போன தாள் இது. உன் கட்சியைச் சேர்ந்த துண்டுப் பிரசுரம் இது" என்று கூறிக் கொண்டே முரளி, அந்தத் தாளைச் சிவராமனிடம் நீட்டினான்.

அதைக் கூர்ந்து பார்த்தான் சிவராமன். பிறகு சொன்னான்:

"இதை வேறு யாராவது போட்டு விட்டுப் போயிருக்கலாமே?"

"நான் துப்பறியும் நிபுணன் இல்லை. உன் கட்சிக்காரர்களின் செயல்தான் இது என்பதுதான் என்னுடைய நம்பிக்கை. மீண்டும் சொல்கிறேன், நேற்று தாக்கியவர்கள் கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்கள்தான்."

"நீ அநாவசியமாக எங்களைத் தாக்கி எழுதி, எங்கள் கட்சியைப் பகைத்துக் கொள்கிறாய்" என்று கூறிவிட்டு எழுந்தான் சிவராமன்.

"இந்தப் பகையினால் மக்களுக்கும், நாட்டுக்கும் நன்மை கிடைக்குமானால் பகை நன்றாக வளரட்டுமே!" என்று கூறிவிட்டு அலட்சியமாகச் சிரித்தான் முரளி. கோபத்துடன் சிவராமன் வெளியேறினான்.

சிவராமன் போவதைச் சற்றுப் பயத்துடன் பார்த்தவாறு நின்று கொண்டிருந்தான் சாமிநாதன். சிவராமன் வெளியேறிய பிறகும் சாமிநாதனிடம் தோன்றியிருந்த பயம் நீங்கவில்லை.

"சார், சற்று முன் ஒரு ஃபோன் வந்தது" என்றான்.

"என்னவாம்... பேசியது யார்?"

"நம்மைப் பயமுறுத்தித்தான் பேசினான். யார் என்று சொல்லவில்லை. கம்யூனிஸ்ட் கட்சியைத் தாக்கி இனி ஏதாவது எழுதினால் நம் அனைவரையும் ஒழித்து விடுவார்களாம்" என்று கூறி, சாமிநாதன் மிகுந்த பயத்துடன் முரளியின் முகத்தைப் பார்த்தான்.

முரளி இலேசாகச் சிரித்தான். பிறகு சாமிநாதனை உற்றுப் பார்த்தான்.

"உனக்குப் பயமாக இருக்கிறதா?" என்று கேட்டான்.

"எனக்கு மட்டுமில்லை சார். இங்குள்ள அத்தனை பேரும் பயப்படுகிறார்கள்...."

"ஜவுளிக் கடைக்குப் போன் பண்ணி இருபது, இருபத்தைந்து சேலைகளைக் கொண்டு வரச் சொல்."

"ஏன் சார்?"

"பயப்படுபவர்களுக்கெல்லாம் கொடுக்கத்தான். கட்டிக் கொள்ளட்டும்" என்றான் முரளி. குரலில் கோபம் தொனித்தது. சாமிநாதன் குறுகிப் போய் நின்றான்.

"சார்! கம்யூனிஸ்டுகள் எதற்கும் துணிந்தவர்கள்" என்றான். அவனிடமிருந்த பயம் நீங்கவில்லை.

"ஓஹோ... அப்படியானால் இந்த ஊரை விட்டே ஓடிவிடுவோமா?"

"நான் சொல்ல வந்தது..."

"சொல்லு."

"அந்தக் கட்சியைப் பற்றித் தாக்கி எழுதுவதை நிறுத்திக் கொண்டால்..."

"அதைவிடச் சுலபம் பத்திரிகையையே நிறுத்தி விடுவதுதான்.... இந்த யோசனையை நீ கூறியிருக்கலாமே?" என்று கோபத்துடன் உரக்கக் கத்தினான் முரளி.

பாவம், சாமிநாதன், பதில் கூறமுடியாமல் திணறிக் கொண்டிருந்தான்.

"எதற்கு இவ்வளவு கோபம்? கட்டடம் இடிந்துவிடப் போகிறது" என்ற


Kleertone

கிளீயர்டோன்-உன்னத மின்சார சாதனங்கள்

கிளீயர்டோன் எல்லாவித மின்சார சாதனங்களுக்கும் ஈடற்ற பேர் பெற்றது. அனைத்துமே நம்பகம், உறுதி, நீடித்த உழைப்பு ஒருங்கிணைந்தவை. நாடெங்கிலுமுள்ள பல்லாயிரம் இல்லத்தரசிகளின் பாராட்டுப் பெற்றவை. ஒவ்வொரு தயாரிப்பும் ஆண்டுக் கணக்கான அனுபவ நுட்பத்தையும், தொழில் நுணுக்கத்தையும் பின்னணியாகக் கொண்டவை.

உங்கள் இல்லங்களுக்கேற்ற கிளீயர்டோன் மின்சார சாதனங்களையே வாங்குவீர் அது நீங்கள் அளிக்கும் பணத்திற்கும் பன்மடங்கான பலனையே தருகிறது.


நாடு பூராவும் உள்ள 1500-க்கும் அதிகமான கிளீயர்டோன் விற்பனையாளர்கள், விற்பனைக்குப் பின்னும் எப்போதும் சேவைசெய்ய காத்திருக்கிறார்கள்.



நேஷ்னல் ரேடியோ அண்டு எலக்ட்ரானிக்ஸ் கம். லிட்

(ஜெனரல் ரேடியோ அண்ட் அப்ளையன்ஸஸ் பிரிவு) பம்பாய்-கல்கத்தா-டெல்லி-சென்னை-

ULKA KL-3-TH



குரலைக் கேட்டுத் திரும்பினான் முரளி. சாரதா உள்ளே வந்து கொண்டிருந்தாள்.

அவளைக் கண்டவுடன் அவனுடைய கோபமும் ஆயாசமும் மறைந்துவிட்டன. களை இழந்திருந்த அவனுடைய முகத்தில் மீண்டும் மந்தகாசம் பரவியது. உள்ளம் மகிழ்ச்சியால் நிறைந்து பொங்கியது. கையிலிருந்த இரண்டு புத்தகங்களை மேஜையின் மேல் வைத்துவிட்டு அவனுக்கு எதிரே இருந்த சோபாவில் அமர்ந்தாள் சாரதா.

'' கல்லடி பலமாக விழுந்திருக்கிறதே....'' என்றாள்.

''பதிலாகச் சொல்லடி கொடுத்திருக்கிறேனே'' என்றான் முரளி சிரித்துக்கொண்டு.

''அதையும் படித்தேன். உங்கள் கார்ட்டூனையும் பார்த்தேன். கல்லடியை விட உங்கள் சொல்லடிதான் பலமாக இருக்கிறது. சட்டசபையையே கலக்கி விட்டதே! உண்மையிலேயே கம்யூனிஸ்டுகளா கல்லெறிந்தார்கள்?'' என்று கேட்டாள் சாரதா. முரளி தலையை ஆட்டினான்.

''மிஸ்டர் சிவராமனுக்குத் தெரியுமா?'' — சாரதா கேட்டாள்.

''தெரியுமோ தெரியாதோ... ஒரு வேளை தெரியாதது மாதிரி நடிக்கிறானோ என்னவோ... இப்போது இங்கே வந்து விட்டுத்தான் போகிறான்.''

''ஓ....! உங்கள் நண்பரையே சந்தேகிக்கிறீர்களா?''

'' கம்யூனிஸ்டுகளுக்கு நட்போ உறவோ எதுவுமே கிடையாது. அவர்களுக்கு உள்ளதெல்லாம் கட்சியின் சித்தாந்தம்தான்'' என்றான் முரளி வெறுப்புடன். பதில் ஏதும் கூறாமல் சாரதா சிந்தனையில் ஆழ்ந்தாள். அவளையே சிறிது நேரம் உற்றுப் பார்த்தான் முரளி.

''சாரதா, நீ மட்டும் எனக்கு உதவினால் எவ்வளவு தெம்புடன் போராடுவேன், தெரியுமா?... 'பாரதமணி' உன்னுடைய சேவையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது'' என்றவன், அவளை ஆவலோடு நோக்கினான்.

'' ஓ....! வர்க்கப் போராட்டத்தில் துணிந்து இறங்கி விட்டீர்களா?''

''எனக்காக இல்லை... இந்த நாட்டுக்காக, இந்த நாட்டு மக்களுக்காக, கலாசாரத்துக்காக... நீ மட்டும் எனக்குத் துணையாக இருந்தால்...''

''மக்கள் விரும்பும் ஒரு லட்சியத்தை எதிர்த்துப் போராட முடியுமா? வீண் முயற்சி'' என்றாள் சாரதா.

முரளி திகைப்புடன் அவளை வெறிக்கப் பார்த்தான்.

''மக்கள் விரும்பும் லட்சியமா?.... எதைக் கூறுகிறாய்?'' என்று குழப்பத்துடன் கேட்டான்.

''பொதுவுடைமைக் கட்சியின் கொள்கைகளைத்தான்.''

''உன்னுடைய படிப்பிலும் சிந்தனையிலும் நான் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தேன். ஆனால் நீகூட இப்படி ஏமாந்திருப்பாய் என்று நினைக்கவில்லை'' என்றான் முரளி ஏமாற்றத்துடன்.

''மக்களிடையே ஏற்றத் தாழ்வு இல்லாமல் செய்யும் ஒரு லட்சியம் அவசியமற்றது என்கிறீர்களா?''

''கம்யூனிஸத் தத்துவத்துக்கு ஈடாக இதுவரை வேறு ஒரு தத்துவம் இன்னும் யாருடைய சிந்தனையிலும் உதிக்கவில்லை. ஆனால் உலக மக்கள் அனைவரும் மகாத்மாவாகவோ, அல்லது இயேசு



பெண்ணின் தந்தை: என் பெண்ணுக்கு ஏற்ற மாப்பிள்ளை நீங்கதான். அவ கழுத்தில் தாலி கட்ட நீங்க என்ன கேட்டாலும் நான் தரத் தயார், என்ன வேண்டும் சொல்லுங்க.

மாப்பிள்ளை: வேறு ஒன்னும் வேண்டாம். தாலி கட்ட அவளுக்கு ஒரு கழுத்துத்தான் வேணும்.

நாதராகவோ இருந்தால்தான் இந்தத் தத்துவம் நடைமுறையில் லாயக்காக இருக்கும்'' என்று கூறிக் கொண்டே மேஜையின் மீது சாரதா வைத்திருந்த புத்தகத்தை எடுத்துப் பார்த்தான். அவனுடைய புருவங்கள் வியப்பினால் உயர்ந்தன. பரபரப்புடன் தலை நிமிர்ந்து சாரதாவைப் பார்த்தான். அவள் புன்சிரிப்புடன் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். கையிலிருந்த புத்தகங்களைப் புரட்டினான்.

அவை கம்யூனிஸ சித்தாந்தங்கள் அடங்கிய புத்தகங்கள். ஒன்று ரஷ்யாவில் அச்சானது, மற்றொன்று சீனாவில் அச்சானது.

''ஓஹோ! இதனால்தான் இப்படிப் பேசுகிறாயா?'' என்று ஒரு புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தவாறே கேட்டான் முரளி. பிறகு, ''இவை ஏது?'' என்று கேட்டான்.

''சிவராமன் கொடுத்தார்... கம்யூனிஸ்ட் கட்சியின் தத்துவங்கள் மனத்துக்கு எவ்வளவோ நிறைவைக் கொடுக்கின்றன. இன்றையப் பாமரர்களின் பிரச்னைக்கு ஒரே வழி, இந்தத் தத்துவங்கள்தாம். எத்தனை ஆண்டுகள்தான் பாட்டாளி வர்க்கம் முடங்கியே இருக்கும்?'' என்றாள் சாரதா.

புத்தகங்களை மூடி மேஜையின் மேல் வைத்து விட்டு அமைதியாகத் தலை நிமிர்ந்தான் முரளி. அவன் முகத்தில் சோகத்தின் நிழல் படர்ந்திருந்தது. ஒரு பெருமூச்சு விட்டான்.

''இந்தப் பத்திரிகைக்கு நீயும் ஓர் ஆசிரியராக வந்து எனக்குக் கைகொடுப்பாய் என்றுதான் நம்பிக் கொண்டிருந்தேன். ஆனால் சிவராமன் முந்திக் கொண்டு விட்டான்...''

மேஜை மீதிருந்த புத்தகங்களையே வெறிக்கப் பார்த்தான். அவனுடைய சிந்தனை அந்தச் சூழ்நிலையை விட்டு வேறு எங்கோ சில விநாடிகள் திரிந்து விட்டுத் திரும்பியது. சாரதா மௌனமாக அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''பத்திரிகையில் பணி புரிவதை விட, கட்சிக்காகப் பணி புரிவதில்தான் எனக்கு ஆத்ம திருப்தி இருக்கிறது'' என்றாள்.

''கட்சியிலேயே சேர்ந்து விட்டாயா?'' என்று பதற்றத்துடன் கேட்டான் முரளி.

''இன்னும் சேரவில்லை. விரைவில் சேர்த்து விடுவதாகச் சிவராமன் கூறியிருக்கிறார். உங்களுக்குக் கம்யூனிஸ்ட் கட்சியின் லட்சியங்கள் எல்லாம் அலர்ஜிதான்'' என்று கூறிவிட்டுச் சிரித்தாள்.

''நடைமுறைக்கு ஏற்காதவை, நாட்டுக்குத் தேவையில்லாதவை எதுவும் அலர்ஜிதான்'' என்றான் முரளி முகத்தைச் சுளித்துக் கொண்டு. பிறகு தொடர்ந்து, ''இனி நான் என்ன சொன்னாலும் உன் மனத்தில் பதியப் போவதில்லை. கட்சியின் சித்தாந்தப் போதையில் மூழ்கத் தொடங்கிவிட்டாய். நீ கம்யூனிஸ்ட் கட்சியில் சேரப் போகிறாய் என்பதைக் கேட்டவுடனேயே என் மனம் சரியில்லை. ஒன்றே ஒன்று மட்டும் சொல்கிறேன். அதில் சேருவதற்கு முன் நன்றாகச் சிந்தித்துக் கொள்!'' என்று கூறிவிட்டுப் பரிதாபமாக அவளைப் பார்த்தான். அவள் சிரித்தாள். அவனுடைய பயமோ, அநுதாபமோ அர்த்தமற்றவை என்னும் அலட்சிய பாவம்தான் அவள் பார்வையில் இருந்தது. அவள் விடைபெற்றுச் செல்லும்போது முரளி கூறினான்:

''சாரதா! நீ எந்த லட்சியத்தை நோக்கிச் சென்றாலும் எந்தக் கட்சியில் பணியாற்றினாலும் உன்மீது எனக்குக் கோபமோ, வெறுப்போ இல்லை.''

சாரதா பதில் ஒன்றும் சொல்லாமல் அவனைப் பார்த்து ஒரு சிரிப்பை உதிர்த்து விட்டுச் சென்றாள்.

அவள் சென்றதும் முரளிக்கு அனைத்தையும் இழந்து, வெறுமையாகிவிட்ட உணர்வு தட்டியது. சோர்ந்து போய் நாற்காலியிலேயே சாய்ந்து கிடந்தான்.

(தொடரும்)

ஆறாவது வருஷமாகத் தொடர்ந்து நடக்கும் பொம்மைக் கலைக் கண்காட்சியை நவராத்திரியை யொட்டி செப்டம்பர் 17ந் தேதியிலிருந்து மூன்று வாரங்கள் நடத்துகிறது, சென்னை காதி கிராமோத்யோக் பவன்.

''இதோ இந்த நாய்ப் பொம்மையைப் பார்த்தீர்களா? இதைத் தத்ரூபமாகப் படைத்தளித்தவர் பண்ருட்டி சின்னசாமி பத்தர். இவர் பொம்மைகளுக்கு இன்டர் நேஷனல் மார்க்கெட் இருக்கு!'' என்று பூரிப்புடன் கூறினார் மானேஜர் கேசவனு.

'' 'நாய்கள் ஜாக்கிரதை!' என்று போர்டு போட்டு வாசலில் இந்த நாய்ப் பொம்மையை வைத்துவிட்டால் போதும்! அசல் நாய் என்று அசந்துவிடுவார்கள்!'' என்றார் நண்பர் கிருஷ்ணசாமி.

இருபத்தைந்து பைசாவுக்கும் இங்கு பொம்மைகள் விற்பனைக்கு உண்டுதான். ஆயின், திருப்பதி வேங்கடாசலபதி கொலுவிருக்கும் மண்டபத்தின் விலை ரூ. 4500 ரூபாய் என்றதும் தலையைச் சுற்றுகிறது. ஆனால் அதைத் தயாரித்த மேதையின் கலைத் திறனுக்கு எவ்வளவு கொடுத்தாலும் தகும் என்றும் கூடவே ஓர் எண்ணம் தோன்றுகிறது. அது சரி, ஆனால்

ஊர்வலம்

இது பொம்மை ஆகுமா? கலைப் பொக்கிஷம் என்றல்லவோ அழைக்க வேண்டும்?


இந்த வருஷம் விசேஷமாகக் கிறிஸ்துவத் தெய்வங்களையும் இக் கொலுவில் சேர்த்திருக்கிறார்கள்.

'நவராத்திரி' படத்தில் நடித்ததால்தானோ என்னவோ, சாவித்திரி கணேசன் இந்தப் பொம்மைக் கொலு கண்காட்சியைத் திறந்து வைத்தார்!

''பொம்மைக்கும் பொம்மைக்கும் கல்யாணம்
பூலோகமெல்லாம் கொண்டாட்டம்''

என்றார் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை. இப்படிப் பூலோகமெல்லாம் கொண்டாடும் படியான ஓர் அற்புதப் பொம்மைக் காட்சி தான் இது. தமிழர், தெலுங்கர், வடஇந்தியர், குஜராத்தியர், ஆங்கிலேயர், அமெரிக்கர் இப்படிப் பல மொழிகள், பல தேசங்களைச் சேர்ந்தவர்கள் கொண்டாட்டமாகக் கண் காட்சியைப் பார்க்கவும் பொம்மைகளை வாங்கவும் வருகிறார்கள்.

மண்ணினால் அருங்கலைப் பொம்மைகளைப் படைப்பவர்கள் சென்னை குயப்பேட்டையில் இருக்கிறார்கள். காஞ்சீபுரம், வேலூர், பண்ருட்டி, புதுச்சேரி ஆகிய ஊர்களிலும் இருக்கிறார்கள். சென்னை யருகே கிண்டியில் காகிதக் கூழில் அற்புதமான கலை வடிவங்களை உருவாக்குவோர் இருக்கிறார்கள். இக் காட்சியில் துணியினாலும் அருமையான பொம்மைகள் செய்து வைக்கப்பட்டிருந்தன. ஆந்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த ஓர் அம்மையார் இக்கலையில் மிகத் தேர்ச்சி பெற்று விளங்குகிறார். பலருக்குப் பயிற்சியளித்து வருகிறார். இக்கலையில் ஜப்பானியர் முன்னணியில் நிற்



பவர்கள். அவர்களிடம் கற்றுக் கொண்டு அம்முறையை நம் நாட்டுக்கு ஏற்பச் சிறிது மாற்றிப் பல அரிய சிருஷ்டிகள் யாத்திருக்கிறார். வங்கத்தில் கிருஷ்ணகர் கலைஞர்கள் பரம்பரை பரம்பரையாகப் பொம்மைக் கலை செய்து வருபவர்கள். அவர்கள் பொம்மைகளில் கலையழகு சொட்டுகிறது. இவ்வாறே லக்னௌ, மைசூர், ஹைதராபாத், காசி முதலிய பல ஊர்களிலிருந்தும் இக் கண் காட்சிக்குப் பொம்மைகள் வந்திருக்கின்றன.

மைசூரில் சௌகத் அலி என்ற ஒரு கலைஞர், இருக்கிறார். ஒரு மரத்தை வெட்டிப் பலகை எடுக்கும்போது அப்பலகையில் இயற்கையே வகை வகையான கோடுகளையும் வட்டங்களையும் வரைந்திருக்கிறது அல்லவா? அதற்கேற்பவும் அதையொட்டியும் இவர் கற்பனையைச் செலுத்தி அரிய சித்திரங்கள் வரைகிறார்.

கொலுப் படிகளை அலங்கரிப்பது மட்டுமல்ல, ''டாலர்'' சம்பாதித்தும் தருகின்றன இந்தக் கலைப் பொருட்கள்.

அண்ணா மருத்துவ மனை

ஆயுர்வேதம், சித்த வைத்தியம், யுனானி ஆகிய பாரத நாட்டின் பழம் பெருமை வாய்ந்த மூன்று வகையான சிகிச்சை முறைகளை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்று கோட்பாடுகளைத் தம் லட்சியமாகக் கொண்டு வாழ்ந்த பேரறிஞர் அண்ணாவின் பெயரால் அண்ணா நகரில் தொடங்கியிருக்கிறார்கள். அவர் பிறந்த தினம் கொண்டாடப்படும் தருணத்தில் மேற்படி மருத்துவ மனை திறந்து வைக்கப்பட்டிருப்பது மற்றொரு சிறப்பு.

கல்வித் துறை அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில், ''இந்திய மருத்துவ முறை இழந்த பெருமையை மீண்டும் பெற வேண்டுமானால், அது இந்திய மருத்துவர்கள் கையில்தான்

இருக்கிறது. அலோபதி முறையை விட நம் நாட்டு முறையில் மக்களுக்கு ஈடுபாடும் நம்பிக்கையும் உண்டாகும் விதத்தில் அவர்கள் தொண்டாற்ற வேண்டும்'' என்றார்.

இப் புது மருத்துவ மனைக்கு ஆன செலவு ரூபாய் எட்டேகால் லட்சம். இப்பொழுது நூறுபேர்களுக்குப் படுக்கை வசதி செய்யப் பட்டிருக்கிறது. இம்மருத்துவ மனைக்கு எதிரில் மூலிகை வளரும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

மருத்துவ மனையைத் திறந்து வைத்துப் பேசினார் முதல் அமைச்சர் கருணாநிதி.

''நான் சின்ன வயதில் திருவாரூர் உயர் நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த போது பனகல் மன்னரைப் பற்றிய ஒரு சிறு வரலாற்று நூல் பாடமாக இருந்தது. பனகல் மன்னர் முன்னாள் சென்னையின் முதல் அமைச்சர். இந்திய மருத்துவப் பள்ளியைக் கீழ்ப்பாக்கத்தில் தொடங்கியவர் அவர். சிறு வயதில் அவரைப் பற்றிப் படித்த நான் தமிழ் நாட்டின் முதல் அமைச்சராக வந்து அதே இந்திய மருத்துவ முறையை விரிவுபடுத்திப் புதுக் கட்டடம் திறந்து வைப்பேன் என்று அப்போது எண்ணியதில்லை'' என்றார்.

★ படங்கள்: நாலாயிரத்து ஐந்நூறு ரூபாய் பெறுமானமுள்ள பொம்மை!


★ அண்ணா மருத்துவ மனை திறப்பு விழா.

★ ருஷ்ய நாடோடி நடனம்.

பேஷான நடனம்!

'நடனம்' என்ற தமிழ் வார்த்தை இந்த ருஷ்யரின் பெற்றோருக்குத் தெரிந்திருக்க முடி





யாது: தங்கள் மகள் எதிர்காலத்தில் ஒரு நடன மேதையாகத் திகழ்வாள் என்பதையும் புரிந்து கொண்டிருக்க முடியாது. ஆனாலும் பாருங்கள், இவர்கள் தங்கள் மகளுக்கு வைத்த பெயர் நடேஷ்டா நடேஷ்டினா! நடனம் என்ற தமிழ் வார்த்தையைக் கொஞ்சம் ரஷ்ய மொழிக்கு ஏற்ப மாற்றி அமைத்தது போலில்லையா?

சென்னை சர்வகலாசாலை 'நூற்றாண்டு மண்டபத்தில் செப்டம்பர் 24ந் தேதியிலிருந்து நான்கு நாட்கள் ரஷ்ய நாட்டிலிருந்து வந்து நடேஷ்டா. நடேஷ்டினாவின் பாலே நடனக் குழுவினர் சென்னை ரசிகர்களை மகிழ்ச்சி ஆரவாரத்தில் மூழ்கடிக்க வைத்தனர். கைகளிலே கைக்குட்டை ஏந்தி அப்சர மங்கைகளைப் போல ஆடி வந்தனர்; கரங்களில் சிறு செடிகளை ஏந்திக் குதித்துக் கும்மாளமிட்டு மயக்கினர். ஆடவரோடு எழிலரசிகளும் இசைக் கேற்பத் 'தட்டாமாலை தாமரைப்பூ' வாக வேகமாகச் சுழன்றனர். படகு அசைவதைப் போல் பாவையர் நெளிந்து அசைந்து பலரது இதயத்தையும் அசைத்து விட்டனர். ஏழு மங்கையரோடு ஆடிக் களித்த ஆடவர்கள் மறைந்தெழும் அற்புதத்தைக் கண்டு அயராதவர் இல்லை. நடுவில் பல சர்க்கஸ் கூத்துகளும் இடம் பெற்றிருந்தன.

நடேஷ்டா நடேஷ்டினாவின் குடும்பத்தினர் தம் கோடை விடுமுறையை அழகுமிக்க காமா நதிக் கரையில் கழிப்பது வழக்கம். அப்பொழுது நடேஷ்டினா கிராமத் திருவிழாக்களையும் நடனங்களையும் காணுவாள். அவள் மாஸ்கோ பால்சாய் தியேட்டரில் நடன நங்கையாகத் திகழ்ந்தபோதும் இக்காட்சிகள் நினைவை விட்டகலவில்லை. கிராமிய நடனங்களில் துலங்கிய நளினம் ரஷ்ய நடனங்களில் இல்லாததைக் கண்டாள் நடேஷ்டினா. 'கவிதைக் கண்ணோடு கிராமிய நடனங்களைப் போற்ற வேண்டும்' என்று கருதினாள் அவள். 1948ம் ஆண்டில் கிராம நடன விற்பன்னர்களின் கலைவிழா நிகழ்ந்தது. நடேஷ்டினா ஒரு நடன நிகழ்ச்சி தயாரித்தாள். முதலில் பெர்யோஷ்கா (பெர்ச் மரம்) கிராம நடனம் உருவாயிற்று. பாலே நடனத்தில் இது புது சகாப்தத்தைத் தந்தது. இதைத் தொடர்ந்து நடேஷ்டினாவின் நடனக் குழுவுக்கே 'பெர்யோஷ்கா' என்ற பெயர் நிலைத்துவிட்டது! அதாவது, 'பெர்ச் மர நடனக் குழு!'

எழுபத்தைந்து கலைஞர்களுள்ள நடேஷ்டினா பாலே குழு இருபது வருஷங்களுக்கு மேலாக உலகம் முழுவதும் மூந்நூறு நகரங்களில் நாற்பத்தொரு தேசங்களில் பவனி வந்து கலை உலகில் ஒரு புரட்சியை உண்டு பண்ணி வருகிறது. பற்பல நாடுகளிலும் நல்லுறவை வளர்த்து வருகிறது.

உலக சமாதான கௌன்சிலின் சார்பில் பால் ராப்சன், நடேஷ்டா நடேஷ்டினா குழுவினருக்குச் சமாதானத் தங்கப் பதக்கம் வழங்கியுள்ளதே அதன் பெருமைக்குச்சான்று. நடேஷ்டினா! பலே பேஷ்டினா, சபாஷ்டினா!



உங்கள் சொந்தப்
பக்குவ முறையைச்
சிறப்பிப்பவை
பிரவுன் & போல்ஸன் மற்றும் ரெக்ஸ்
தயாரிப்பு வகைகள்
REX
JELLY CRYSTALS
LEMON
ரெக்ஸ் ஜெல்லி
க்ரிஸ்டல்
REX
BAKING
POWDER
ரெக்ஸ் பேகிங் பவுடர்
Brown & Polson
Custard
பி & பி கஸ்டர்டு பவுடர்
Brown & Polson
பி & பி வெரைட்டி
கஸ்டர்டு பவுடர்
Brown & Polson
பி & பி ஃப்ளேவர்டு
கார்ன் ஃப்ளவர்
Brown & Polson
பி & பி பேடென்ட்
கார்ன் ஃப்ளவர்
கார்ன் பிராடக்ட்ஸ் கோ. (இந்தியா) பிரைவேட் லிட்.
ஸ்ரீனிவாஸ் ஹவுஸ், வாட்பி ரோடு, பம்பாய்-1. BR.
ஏகபோக விற்பனை ஏஜெண்டுகள்:
பாரி & கம்பெனி, டேர் ஹவுஸ், மதராஸ்-1,
மற்றும் அவர்களது கிளைகள்.
உங்கள் சமையல் உன்னதமாக இருக்க,
உயர்ந்த சாமான்களையே உபயோகியுங்கள்
Benson/BJ/5260 TM

பட்டினிக் குரல்!

கே. ஜெயலக்ஷ்மி



'விஜயா' தியேட்டரின் வாசலில் கூட்டம் என் போட்டால் என் விழாது. கே. டி. ஆர். நடிக்கும் புதுப் படம் இன்று வெளியாகிறது என்றால் கேட்கவா வேண்டும்?

கைமுறுக்கு விற்பவனுக்கும் வேர்க்கடலை விற்பவனுக்கும் இன்று நல்ல வியாபாரம். எதிரே யிருந்த வெற்றிலைப் பாக்குக் கடைக்காரருக்குக் கலர், சோடா வாங்கி வைத்துச் சாத்தியப்பட வில்லை.

நேரம் நகர்ந்து கொண்டே யிருந்தது.

நெஞ்சங்கள் துடிதுடித்துக் கொண்டிருந்தன.

முதல் மணி ஒலித்தது.

அப்படி இப்படி அலட்சியமாய் புகைத்துக் கொண்டிருந்த 'க்யூ' வரிசை துண்டுப் பீடிகளைத் தூர எறிந்து விட்டு — சட்டைக் காலரையும் தூக்கிவிட்டு நிமிர்ந்து நின்றன.

கட்டுக் கட்டாக டிக்கெட்டுக்களைச் சுமந்து கொண்டு பணியாளர்கள் தம் தம் கூண்டுக்குள் புகுந்து கதவடைப்பும் செய்து கொண்டாயிற்று.

இரண்டாவது மணியும் ஒலித்தது.

'க்யூ' மெள்ள நகரலாயிற்று.

நடக்க முடியாமல் நடந்து வந்து கொண்டிருந்தான் ராமு. நேற்று முழுதும் அவன் சாப்பிடவில்லை. கண்கள் இருண்டுகொண்டே வந்தன. அப்படியிருந்தும் அவன் ஐம்பத்து மூன்று நயாபைசாவுக்கான 'க்யூ'வை வேடிக்கை பார்த்துக் கொண்டே வந்தான்.

மேய்ந்து கொண்டே வந்தவனின் பார்வையில் அந்தப் பையன் தட்டுப்பட்டு விட்டான். இவனைவிட அவனுக்கு அதிகமாகப் போனால் நான்கு அல்லது ஐந்து வயதுதான் அதிகமாக இருக்கும். அவனுடைய கையில் ஓர் ஐம்பது பைசா நாணயமும், மூன்று பைசா நாணயமும் மின்னிக் கொண்டிருந்தன. கவுண்டரின் அருகில் வந்ததும் 'டக்'கென்று நீட்டி விட்டுப் பட்டென்று டிக்கெட்டை வாங்கிக் கொண்டு பிய்த்துக் கொண்டு விட வேண்டும் அல்லவா? அதற்காகத்தான் இரண்டு நாணயங்களையும் ஆள்காட்டி விரலுக்கும் கட்டை விரலுக்கும் இடையில் வைத்துத் தூக்கிப் பிடித்துக் கொண்டு நின்றிருந்தான்.

''டேய் !'' என்று கத்திக் கொண்டே அந்தப் பையனின் மீது பாய்ந்தான் ராமு. அடுத்த விநாடி அவன் கையிலிருந்த நாணயங்கள் இவன் கைக்கு வந்து விட்டன.

''பிடிடா, திருட்டுப் பயலே....''

''உதைடா ! திருட்டு ராஸ்கலே !''

ஒரு பட்டாளமே ராமுவைத் தொடர்ந்தது. ராமு தன் கையிலிருந்த காசுகளில் ஒன்றை — அதாவது மூன்று பைசாவைக் கீழே விசியெறிந்து விட்டு ஓடினான்.

துரத்தி வந்த கும்பல் அவனை விட்டுவிடுவதாக இல்லை.

'' எடுடா, அந்த எட்டணாவை !''

''புடுங்குடா, ஐம்பது பைசாவை !'' என்று கூச்சலிட்டுக் கொண்டே அவனைப் பின்தொடர்ந்து ஓடி வந்து கொண்டிருந்தது.

இரண்டு நாட்களாகச் சாப்பிடாதவனால் இதற்கு மேலும் தம் பிடித்து ஓட முடியவில்லை. கால்கள் துவண்டன. கண்கள் இருண்டன. அப்படியே தரையில் உட்கார்ந்து விட்டான்.

ஓடிவந்து கொண்டிருந்த கும்பல் 'கப்' பென்று அவனை அள்ளிப் பந்தாடியது. ராமுவின் மேல் சட்டை டார் டாராகக் கிழிந்து போயிற்று. ஐம்பது பைசா நாணயத்தைக் கைப்பற்றிக் கொண்டு கூட்டம் வெற்றி வாகை சூடிய பூரிப்புடன் தியேட்டரை நோக்கிப் பறந்தது.

ராமு தன் நினைவின்றிக் கிடந்தான், சாலை ஓரத்தில்.

தியேட்டரின் அருகிலிருந்தே நடந்து வந்து கொண்டிருந்த எனக்கு இது ஓரளவு வேதனையாகவும் இருந்தது; அதே சமயம் வியப்பாகவும் இருந்தது.

அந்தப் பையனைப் பார்த்தால் படித்த பையனாகத் தோன்றினான். கொஞ்சம் அழுக்காக இருந்தாலும் பாண்டும் ஸ்லாக்கும் அணிந்திருந்தான். அவனா இப்படியொரு கேவலமான செயலில் ஈடுபட்டு விட்டான்? நம்புவது கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனால் இந்தக் காலத்தில்தான் யாரையுமே நம்ப முடியவில்லையே! அதுவும் ஆடை அணிந்திருக்கிற விதத்திலிருந்து மட்டும் ஒருவனைக் கெட்டவன் என்றோ நல்லவன் என்றோ முடிவுக்கு வரக்கூடிய சூழ்நிலையிலா இன்றைய சமூகம் இருக்கிறது? என் கால்கள் என்னை அந்தப் பையனின் அருகில் கொண்டு போய் நிறுத்தி விட்டன. இரக்க உணர்ச்சி மனிதனின் இயற்கை சுபாவமோ?

பக்கத்திலிருந்த வெற்றிலை பாக்குக் கடையிலிருந்து கொஞ்சம் தண்ணீர் கேட்டு வாங்கி அந்தப் பையனின் முகத்தில் தெளித்தேன். பிறகு அவன் மெள்ளத் தன் கண்களைத் திறந்தான். தயாராக வாங்கி வைத்திருந்த கலரை அவன் வாயில் கொஞ்சம் கொஞ்சமாக வார்த்தேன். பாவம்! அவனுக்கு நல்ல பசி போலிருக்கிறது. அவசரம் அவசரமாகக் குடித்துக் கொண்டிருந்தான்

''ரொம்ப நன்றி ஐயா! உங்களுக்கு நான் இதற்குரிய காசை எப்படித் திருப்பிக் கொடுக்கப் போகிறேனோ!''

''பரவாயில்லை, தம்பி. நீ திருப்பிக் கொடுக்க வேண்டாம்.''

''இப்படிச் சொல்லி என்னைப் பிச்சைக்காரனுக்கி விட்டு விடாதீர்கள் சார். உங்களுடைய பெயரையும், விலாசத்தையும் சொல்லுங்கள் சார். என்றைக்கேனும் ஒரு நாள் கொண்டு வந்து கொடுத்து விடுகிறேன்.. சொல்லுங்கள் சார்!'' கெஞ்சினான் அவன் ஈனசுரத்தில்.

சட்டைப் பைக்குள்ளே யிருந்த என் விசிட்டிங் கார்டை எடுத்துக் கொடுக்கிறேன்.

அவன் முகத்தில் கொஞ்சம் நிம்மதி ஏற்பட்டிருப்பது போல எனக்குத் தெரிகிறது. உள்ளத்தின் நமைச்சலைத் தீர்த்துக்கொண்டு விடத் துடிக்கிறேன்.

''தம்பி, உன்னை ஒன்று கேட்கட்டுமா?''

''என்ன சார் கேட்கப் போகிறீர்கள்?''

''உன்னைப் பார்த்தால் படித்த பையன் மாதிரி தெரிகிறது.''

''எஸ். எஸ். எல். ஸி.யிலே எனக்கு நானூற்று எழுபத்தைந்து மார்க் சார்.''

''ரொம்ப சந்தோஷம் தம்பி. நீ பேசுகிறதை யெல்லாம் பார்க்கும்போது நல்லவனாகவும் நினைக்கத் தோன்றுகிறது. ஆனால் சற்று முன்பு சினிமாக் கொட்டகை வாசலில் நீ நடந்து கொண்டதைப் பார்த்தால்...''

''என்னைத் திருடன் என்று நினைத்துவிட்டீர்களா சார்?''

''அப்படித்தானேப்பா நினைக்கத் தோன்றும்?''

''நான் திருடன் இல்லை சார். என்னை நம்புங்க சார்.''

''அப்படி யிருக்க வேண்டும் என்பதுதான் நல்லவர்களின் விருப்பமாக இருக்க முடியும்.''

''எனக்குத் தஞ்சாவூர்ப் பக்கம் சார். அப்பா கிடையாது. அம்மாவும் இரண்டு தங்கைகளும்தான். அவர்களைக் காப்பாற்றியாக வேண்டும். அதற்காக வேலை தேடி இந்த ஊருக்கு வந்து சேர்ந்தேன். கையிலிருந்த காசெல்லாம் அநேகமாகச் செலவழிந்து போய்விட்டன. ஐம்பது பைசாதான் பாக்கி யிருந்தது. ஆனால் வேலை மட்டும் கிடைக்கவே யில்லை....'

''அப்புறம்?''

''நேற்று முழுதும் நான் சாப்பிடவில்லை. என்னிடம் இருந்த அந்தக் கடைசி ஐம்பது பைசாவையும் செலவழித்துவிட எனக்கு மனமில்லை. அதனால் ஒரு சோடாக் கூட வாங்கிச் சாப்பிடாமல் பத்திரமாக வைத்துக் கொண்டிருந்தேன். இன்றையப் பொழுதும் விடிந்தது. என்னுடைய பசியும் அதிகரித்தது. தாங்க முடியாமல் வயிற்றைப் புரட்டியது. தலையைச் சுற்றியது. பஸ் ஸ்டாண்டிலிருந்த அந்த சிமெண்ட் பெஞ்சில் உட்கார்ந்தேன். பசிக்கும் எனக்கும் பெருத்த போராட்டம் என்னுள் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

''அப்போது ஒரு பையன் பஸ்ஸுக்காகக் காத்திருந்தவர்களிடம் பிச்சை கேட்டுக் கொண்டே வந்தான். பலர் கையை விரித்து விட்டார்கள். யாரோ ஒருவர் மூன்று பைசாவைக் கொடுத்தார் அவனிடம். ஒவ்வொருவராகக் கேட்டுக்கொண்டே வந்தவன் கடைசியில் என்னிடமே வந்து விட்டான்.

''எனக்குள் நடந்து கொண்டிருந்த பசிப் போராட்டத்தைப் பற்றி அவனுக்கு என்ன தெரியும்? என்னுடைய உடைகளையும் தோற்றத்தையும் பார்த்தே அவன் என்னை மதிப்பிட்டிருக்க வேண்டும்.

'''சார்! மூணு நாளாக நான் பட்டினி சார். வயித்தை என்னமோ செய்யுது சார். கண்ணை இருட்டிக்கினு வருது சார். ஏதாவது சில்லறை இருந்தால் கொடுங்க சார். உங்களுக்கு ரொம்பப் புண்ணியமாப் போவும் சார். மூணு நாளாப் பட்டினி' என்று கெஞ்சினான்.

''எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. நான் ஒன்றரை நாளாகத்தான் ஒன்றும் சாப்பிடாமலிருக்கிறேன். அதையே என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மூன்று நாட்களாகப் பட்டினியாமே! அவனுடைய வயிறு அவனை என்ன பாடு படுத்தி வைக்கும்? என்னுடைய நிலைமையை விட அவனுடைய நிலைமை மோசமில்லையா சார்? 'தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று சொன்னார் பாரதியார். கேவலம் என்னைக்கூடவா கஷ்டப்படுத்திக் கொள்ளக் கூடாது? ரொம்ப நேரம் யோசிக்கவில்லை, சார். என் கையிலிருந்த எட்டணாவை அவனிடம் கொடுத்து விட்டு, 'போய் ஏதாவது வாங்கிச் சாப்பிடுடா' என்று சொல்லியனுப்பி விட்டேன்.''

''ச்சே!''

''ஐந்து நிமிஷ நேரம் மறந்து போயிருந்த பசிப் போராட்டம் தலைதூக்கிவிட்டது. என்னால் பொறுக்க முடியவில்லை. எழுந்து ஒரு குழாயடிக்குப் போய்த் தண்ணீர் குடிக்க முயன்றேன். ஆனால் அதில் தண்ணீர் வரவில்லை. எதிரே இருந்த கடைக்காரர் 'தம்பி உப்புத் தண்ணீர் இருக்கு. தேவலாமா?' என்று கேட்டார். வேறு வழியில்லாமல் அதை வாங்கிக் குடித்து வயிற்றுப் போராட்டத்துக்குத் தடை விதித்தேன். உடம்பிலும் கொஞ்சம்

விசேஷ அளிப்பு!

ஸ்டாக் உள்ளவரை



ஒவ்வொரு டின்னிலும் உள்ள போர்ன்விடாவின் அளவு
எப்போதும் போல் தான் (450 கிராம் நெட்)

சக்திக்கும் வலிமைக்கும்–மற்றும் தீஞ்சுவைக்கும்

காட்பரீஸ் போர்ன்விடா!

Bensons/5333 TAM

தெம்பு உண்டாயிற்று. எழுந்திருந்து நடந்தேன். சினிமாத் தியேட்டர் பக்கமாக நடந்து வந்து கொண்டிருந்தேன். அப்போதுதான் 'க்யூ' வரிசையில் சற்று முன்பு என்னிடம் மூன்று நாட்களாகப் பட்டினி என்று சொல்லி ஐம்பது பைசாவை வாங்கிக் கொண்டு போன பையனைக் கண்டேன். பிறகு நடந்ததுதான் உங்களுக்கே தெரியும் போலிருக்கிறதே!''

''தெரியும்...'' என்று ஒரு பெருமூச்செறிந்தேன்.

''நான் செய்தது குற்றமா சார்? நான் அவன்மீது — அவனுடைய பசியின் மீது இரக்கப்பட்டு என்னுடைய ஐம்பது பைசாவையே அவனுக்குக் கொடுத்தேன். ஆனால் அவன் என்னுடைய இரக்க உணர்ச்சியை மதிக்காதது மட்டுமல்ல. அதை அலட்சியப்படுத்திவிட்டான் சார். என்னுடைய கருணையுள்ளத்தை அவன் ஏமாற்றிவிட்டதை என்னால் காணப் பொறுக்கவில்லை சார். என்னுடைய வயிற்றுப் பசியை விட அவனுடைய சினிமாப் பசி பெரிதா சார்? சொல்லுங்க சார். நான் குற்றவாளியா? அல்லது என் இரக்க உணர்வு குற்றமுள்ளதா? சொல்லுங்க சார்'' என்னைப் பிடித்து உலுக்கினான் அந்தப் பையன் ராமு.

நான் வாயிருந்தும் ஊமையாக இருந்தேன்.

பொய்கள் ஒன்பது விதம்

(1) மரியாதைப் பொய். (2) இருக்கும் பொய். (3) தற்காப்புப் பொய். (4) டம்பப் பொய். (5) தூர் எண்ணப் பொய். (6) மௌனப் பொய். (7) வம்பளப்புப் பொய். (8) காதல் பொய். (9) மனநோய்ப் பொய்.



பொய்யில் இன்னும் பலவிதம் இருப்பினும் இந்த ஒன்பது விதங்கள் தான் அதிகம் உலவுகின்றன என்று மனநோய் டாக்டர் 'பென் கார்ப்மான்' என்பவர் எழுதியுள்ளார்.

தகவல்: 'ராமணன்'

□ □ □ □ □ □ □ □ □ □ □ □

புரியாப் புதிர்கள்



மாலதி, பொற்கொடி, பேய் மிரட்டி: பெண்களின் பெயரல்ல! மந்திரவாதிகள் தங்களை விளம்பரப்படுத்திக் கொள்ளச் சூட்டிக்கொள்ளும் பட்டமல்ல

குமரி: பெண்ணின் பருவமல்ல

சிவந்தி நாயகன்: ஒருவகைப் பூச்சி அல்ல

ஆதிநாராயணன்: திருமாலைக் குறித்த பெயருமல்ல!

சிதேவி, செங்கழுநீர், யானை வணங்கி: ஊரின் பெயரல்ல!

செவ்வை: பிரபல ஏடுகளின் பெயரல்ல, அவரது ஊருமல்ல!

எலும்புக் கூடு: உடலுக்குள்ளே அமைந்திருக்கும் கூடல்ல!


இந்தப் பெயர்கள் யாவும் புகழ்பெற்ற மூலிகைகள் ஆகும்!

ஆதாரம்: வேலூர் மூலிகை மணி வெளியிட்ட 'புகழ்பெற்ற மூலிகைகள்' புத்தகத்திலிருந்து.

தகவல்: ஏ. சுவாமிநாதன்

பழங்கால கிரேக்க சம்பிரதாயப்படி முதல் மனிதனை ஜூபிடரும், முதல் காளையை நெப்ட்யூனும், முதல் வீட்டை மினர்வாவும் படைத்தார்கள். இந்தப் படைப்புத் தொழில் முடிந்ததும் யாருடைய பணி முழுத் திறமை கொண்டது என்று போட்டி எழுந்தது. அவர்கள் மூவரும் மோமஸ் என்பவரைப் போய்க் கேட்டனர்.

''காளைக்குக் கொம்புகள் கண்ணுக்குக் கீழே இருந்தால்தான் காளை எங்கே தாக்கலாம் என்பதைச் சரியாகப் பார்த்துச் செல்லக் முடியும்!'' என்று நெப்டியூனின் படைப்பில் குறைகூறினார் மோமஸ்.



அடுத்து, ''ஜூபிடர்! நீ மனிதனுக்கு மனத்தை வெளியில் தெரியும்படி வைத்திருந்தால், தீயவனின் குணங்களைக் கண்டறிந்து வரப் போகும் தீமையிலிருந்து தப்புவிக்கலாமே!'' என்று தாக்கினார்.

கடைசியாக மினர்வாவிடம் வந்தார். ''இந்த வீட்டின் அஸ்திவாரத்தில் சக்கரங்களைப் பொருத்தினால், அந்த வீட்டுக்காரரிடம் மனக் கசப்பு ஏற்பட்டால் வேறிடங்களுக்குச் செல்ல வசதியாயிருக்கும் அல்லவா?'' என்றார்.

இப்படித்தான் சிலர் எதையெடுத்தாலும் குற்றம் குறை கண்டு பிடித்துக் கொண்டே இருப்பார்கள்!

ஆதாரம்: ஈஸாப் கதை — குன்றிமணி

கட்டளை!

''ஐந்து நிமிஷங்களுக்கு ஒரு தடவை குழம்பைக் கிளறி விட்டுக்கிட்டு இருங்க— பக்கத்து வீட்டுக்குப் போயிட்டு ஒருநிமிஷத்தில் வந்துடறேன்!''

''ஜெட்டேஸ்ல்'
''பாலி'



''டாக்ஸி!'' — ஆண் குரல்.

''டாக்ஸி!'' — பெண் குரல்.

விரைந்து சென்று கொண்டிருந்த டாக்ஸி 'சரக்'கென்று நின்றது. டாக்ஸியின் பின்புறக் கதவுகள் இரண்டும் திறக்கப்பட்டன. இருவரும் இருபுறமும் நுழைந்து 'பொத்'தென்று பின் ஸீட்டில் உட்கார்ந்தனர்.

''ராயப்பேட்டைக்குப் போ!'' — ஆண் குரல்.

''ஆழ்வார்ப்பேட்டை!'' — பெண் குரல்.

''நான்தானே முதலில் உன்னைக் கூப்பிட்டேன். ராயப்பேட்டைக்குப் போ!'' பக்கத்தில் அமர்ந்திருக்கும் பெண்ணை வெறுப்போடு பார்த்தான் அவன். கையிலிருந்த பெட்டியை மடியில் வைத்துக் கொண்டு சௌகரியமாக உட்கார்ந்தான் அவன்.

''தயவுசெய்து வண்டியை விட்டு இறங்குங்க சார்! கொஞ்சம் கூட நாகரிகம் தெரியல்லையே!'' என்றான் டாக்ஸி டிரைவர் கோபமான குரலில். ஆத்திரத்துடன் பக்கத்திலிருக்கும் பெண்ணைப் பார்த்தவாறு வண்டியை விட்டு இறங்க முயன்றான் அவன். மறுகணம் அந்தப் பெண் சட்டென்று அவன் கையைப் பிடித்தாள்.

''ராயப்பேட்டைக்கே போ!'' என்றாள் அவள். 'டிரிங்' என்று மீட்டர் சுழன்

அட்டைப்படக் கதை



நிழல்தானா?

ஆர்.எஸ்.மணி

றது. 'விர்'ரென்று கார் புறப்பட்டது.

''குட் ஈவினிங் மிஸ்டர் சங்கர்!'' என்றாள் அந்தப் பெண்.

சங்கர் திடுக்கிட்டான். வியப்போடு அவளைப் பார்த்தான்.

''அதே சுபாவம்! அதே நடுக்கம் — அதே தனிப்பு — நீங்க சங்கர்தான்; சந்தேகமே இல்லே'' என்று கூறியவாறு முகத்தைப் பெருமளவு மறைத்திருந்த கூலிங் கிளாஸைக் கழற்றினாள், அந்தப் பெண்!

மாலதி — நல்ல பருமன்; கவர்ச்சி மிகுந்த உடலமைப்பு; உயர்ந்த ஆடை ஆபரணங்கள்; சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்பு ஒல்லியாகச் சாதாரண அணி பணிகளுடன் எளிமைத் தோற்றத்துடன் காட்சி யளித்த அந்த மாலதியா இவள்?

''என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்? உங்களை அழ வைத்து வேடிக்கை பார்த்த அதே மாலதிதான்!'' என்று கூறி அவனுடைய சந்தேகத்தைப் போக்கினாள் அவள்.

கல்லூரியில் படிக்கும்போது அவனிடம் அகப்பட்டுக் கொண்டு அவன் பட்ட பாடு போதாதா?

சங்கரனுக்குச் சொந்த ஊர் புதுக் கோட்டை. சென்னையில் தன் அத்தை வீட்டில் தங்கிப் படித்துக் கொண்டிருந்தான். பரம சாது; பயந்த சுபாவம். தான் உண்டு தன் காரியம் உண்டு என்று இருப்பான். அவன் ஒரு 'ரிஸர்வ்டு டைப்'.

ஆனால் மாலதி நேர் விரோதம். அநேகமாக இருவரும் ஒரே பஸ்ஸில்தான் பிரயாணம் செய்வார்கள். 'கணீர் கணீர்' என்ற பேச்சுக் குரலும், 'கலீர் கலீர்' என்ற சிரிப்பொலியும் மாலதி அந்தப் பஸ்ஸில் பிரயாணம் செய்கிறாள் என்பதை வெளிப்படுத்தி விடும்.

'மாலதிக்காக நாங்கள் தவம் கிடக்கிறோம். எங்களை அவள் லட்சியம் செய்ய மாட்டேன் என்கிறாள். நீ என்னடாவென்றால் உன்னைச் சுற்றிவரும் அவளை அலட்சியம் செய்கிறாய். சுத்த அம்மாஞ்சிடா நீ! காற்றுள்ளபோது தானே தூற்றிக் கொள்ள வேண்டும்!' என்று சங்கரனின் நண்பர்கள் அவனை எவ்வளவு உற்சாகப்படுத்தியும், 'சிவனே' என்றுதான் இருந்தான் அவன். நாளுக்குநாள் நண்பர்களின் கேலியும் குறும்புத்தனமும் அதிகரித்தன. மாலதியிடம் விஷயத்தைச் சொல்லி 'ஓ'வென்று ஒரு நாள் அழுது விட்டான். உடனே அவனுக்கு விடுதலை கிடைத்து விட்டது. சனியன் விட்டது என்று நிம்மதியாக இருந்தான். ஆனால் மீண்டும் தன் வாழ்க்கையில் குறுக்கிடுவாள் என்று அவன் எதிர்பார்த்தானா?

மாலதி கேள்விகளுக்கு மேல் கேள்விகளைக் கேட்டு அவனைத் திணற அடித்துக் கொண்டிருந்தாள். எல்லாவற்றுக்கும் 'ஆமாம்' 'இல்லே' என்று பட்டுக் கத்தரித்தாற்போல் பதில் சொல்லிக் கொண்டு வந்தான்.

''ராயப்பேட்டை வந்துவிட்டது. எங்கே உங்க வீடு?'' என்று கேட்டாள் மாலதி. தான் இருக்கும் இடத்தைக் குறிப்பிட்டான். வண்டி வீட்டு வாசலில் போய் நின்றது. 'நன்றி' என்று கூறிவிட்டு வண்டியின் கதவைத் திறந்து கொண்டு சட்டென்று வெளியேறினான் சங்கரன்.

கதவைத் திறந்தாள் கமலா. தன் மனைவியின் முகத்தையும் பார்வையையும் பார்த்த

வுடன் அவள் கோபமாக இருக்கிறாள் என்பதை உணர்ந்துகொண்டான் சங்கரன்.

'அவள் முகத்தில் ஏன் இவ்வளவு கடுகடுப்பு? எங்கே பார்க்கிறாள்? யாரைப் பார்க்கிறாள்?' திரும்பினான் சங்கரன்.

தான் கொண்டு வந்திருந்த பெட்டியை இரு கைகளிலும் பற்றிய வண்ணம் வழக்கமான புன்னகையுடன் தன் பின்னால் அலட்சியமாக நின்று கொண்டிருக்கும் மாலதியைக் கண்டு திடுக்கிட்டுப் போனான் சங்கரன்.

"இவள்.... இவள்....இவள்...." பேச முடியாமல் திணறினான் சங்கர்.

"என் பெயர் மாலதி! நாங்கள் ரொம்ப நாளைய சிநேகிதர்கள். இவர் எப்பவும் இப்படித்தான். பயந்த சுபாவம். நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். தைரியம் வேணும், தைரியம் வேணும்னு. கேட்கல்லே. நீங்க ஒண்ணும் மனசைப் போட்டு அலட்டிக் காதீங்க...எல்லாம் சரியாகி விடும்" என்று கூறியவாறு சுதந்திரமாக வீட்டினுள் பிரவேசித்தாள் மாலதி.

கமலா 'நருக்'கென்று தலையை மறுபக்கம் திருப்பிக் கொண்டாள். ஏற்கனவே தலை நீட்டிக் கொண்டிருந்த கோபம் இப்பொழுது குபீரெனப் பொங்கி எழுந்தது.

எவ்வளவோ சொல்லிப் பார்த்தான் சங்கர். அவள் அவனுடைய வார்த்தைகளை நம்பவில்லை.

மாலதி குறும்புத்தனமாகக் கமலாவைப் பார்த்தாள். அலட்சியமாக அவனைப் பார்த்துச் சிரித்தவாறு வெளியேறினாள்.

"நீங்க கல்யாணமே செய்துக்க மாட்டேன்னு பிடிவாதமாக இருந்தீங்களாமே! அதுக்குக் காரணம் எனக்கு இப்போதான் புரியறது. மரியாதையாச் சொல்லிடுங்க, நீங்க அவளை ..."

மடக்கி மடக்கிக் கேள்விகளைக் கேட்டு அவனைப் படாத பாடு படுத்தி விட்டாள் கமலா.

"நீ என்ன வேணுமானாலும் நினைத்துக் கொள். அவள் என் சிநேகிதி. அவ்வளவு தான்" என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினான் சங்கர்.

"நீங்கள் சொல்ல வேண்டாம். மறுபடியும் அவள் வரட்டும், அவள் வாயாலேயே உண்மையைக் கண்டுபிடித்து விடுகிறேன்."

"அவள் ரோஷக்காரி. முன்னேகூட 'சுருக்' கென்று ஒரு வார்த்தை சொன்னேன். என்னைப் பார்ப்பதையே விட்டுவிட்டாள். இவ்வளவு தூரம் சொன்ன பிறகு இந்த வீட்டில் மீண்டும் அவள் அடி எடுத்து வைப்பாளா?"



''உங்களுக்குத்தான் யோசனை இல்லை. இதோ பார்த்தீர்களா? இதற்காகக் கண்டிப்பாக அவள் வருவாள். அப்பொழுது சரியான படி மடக்கி விடுகிறேன் அவளை. அவளைக் கண்டு அனல் கிளம்புகிறது. என்னைப் பார்த்துச் சிரித்துவிட்டுப் போகிறாளே. என்ன அகம்பாவம் அவளுக்கு?'' என்று கூறினாள் கமலா ஆவேசமான குரலில்.

மாலதி கையில் கொண்டு வந்திருந்த பெட்டியை வைத்துவிட்டுப் போய் விட்டதை அப்பொழுதான் கவனித்தான் சங்கர்.

''அதைக் கொடு இப்படி. போலீசில் ஒப்படைத்து விட்டு வந்து விடுகிறேன். அப்புறம் அதைக் காணோம், இதைக் காணோம் என்று நம்பேரில் பழி போட்டுவிட்டப் போகிறாள்!'' — எப்படியாவது மாலதி மீண்டும் இங்கு வராத வழி செய்து விட வேண்டும் என்றும் துடித்தான் அவன்.

''உங்க எண்ணம் எனக்குத் தெரியாதா? மறுபடியும் அவளை இங்கே வர வேண்டாம்னு சொல்லத்தானே கிளம்புறேள். அதுதான் நடக்காது'' என்று அந்தப் பெட்டியை எடுத்து பீரோவில் வைத்துப் பூட்டினாள் கமலா.

மாலதி இப்பொழுது வருவாளோ? இன்னும் கொஞ்சம் நேரம் கழித்து வருவாளோ? கமலா அவளை என்ன கேட்கப் போகிறாளோ? — இவ்வித எண்ணங்களிலும் புழுங்கினான் சங்கரன். உணவு இறங்கவில்லை; உறக்கம் வரவில்லை.

கமலாவுக்கும் தூக்கம் வரவில்லை. பலவிதமான சந்தேகங்கள் அவள் உள்ளத்தில் தலை விரித்தாடிக் கொண்டிருந்தன. 'இவருக்கும் அவளுக்கும் ஏதோ இருக்கிறது! இல்லாவிட்டால் இவ்வளவு உரிமையோடு பழகுவாளா? கண்டிப்பாக என்னமோ இருக்கிறது' — எவ்வளவு முயன்றும் அவளுடைய சந்தேகத்துக்கு முடிவு ஏற்படவில்லை.

'மாலதி அந்தப் பெட்டியை வேண்டும் என்றுதான் வைத்து விட்டுப் போயிருக்கிறாள். அதில் ஏதோ ரகசியம் இருக்கிறது. சோதனை போட்டால் கண்டிப்பாக ஏதாவது உண்மை வெளிப்படும். அதனால்தான் அப்படி அலட்சியமாகச் சிரித்துவிட்டுப் போனாளா?'—

அந்தப் பெட்டியைத் திறந்து பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் எழுந்தது. தன் சாவிக் கொத்தின் உதவியினால் அந்தப் பெட்டியைத் திறக்க முயன்றாள். இரண்டாவது சாவியைப் போட்டவுடன் பூட்டு திறந்து கொண்டது.

ஆவலுடன் பெட்டியைத் திறந்த கமலா 'ஆ' வென்று வாய் விட்டுக் கத்திவிட்டாள். படுக்கையில் புரண்டு கொண்டிருந்த சங்கர் அலறிப் புடைத்துக் கொண்டு ஓடி வந்தான்.

நான்கு விழிகளும் ஆவலோடு பெட்டியைப் பார்த்தன. பெட்டியில் பளபளவென்று மின்னிய தங்க நகைகள் அவ்விழிகளில் பிரதிபலித்து அவர்களைக் கதி கலங்கச் செய்தன.

''அம்மா! இந்த அநியாயத்தைக் கேட்டீர்களா? உலகமே கெட்டுப் போச்சு. திருட்டும் புரட்டும் — நினைச்சாப் பயமா இருக்குது. சினிமா நடிகை ரத்னா தேவி இல்லே அம்மா, அவுங்க வீட்டிலேயிருந்த நகைகளையெல்லாம் காணலியாம். பெட்டியிலே பூட்டி வைச்சிருந்தது அப்படியே அபேஸ் ஆயிடுத்தாம். பேப்பரிலே போட்டிருக்காங்க—அந்தக் காலத்திலே அவங்களுக்கு என்ன பேரு! என்னமா ஆக்டு பண்ணுவாங்க? என்னமா பாடுவாங்க'' என்று கமலத்திடம் அங்கலாய்த்துக் கொண்டாள் வீட்டு வேலைக்காரி முனியம்மாள்.

'நகைத் திருட்டு விஷயம் ஊரெல்லாம் பரவி விட்டது. போலீசார் மும்முரமாகப் புலன் விசாரிக்க முனைந்து விடுவார்கள். மாலதிதான் அதைத் திருடியிருக்கிறாள். அந்தப் பெட்டியில் இருக்கிற நகைகள் ரத்னா தேவியுடையதுதான். எப்படியாவது போலீசாருக்கு விஷயம் தெரிந்து விடும். கண்டிப்பாக நம்மைப் பிடித்து விடுவார்கள்.

விம்மி விம்மி அழ வேண்டும் போலிருந்தது அவளுக்கு. 'ஒரு பாவமும் அறியாத தனக்கு இப்படி ஒரு பழி வந்து விட்டதே!' என்று கலங்கினாள் சங்கர்.

''அவள் முழிச்ச முழியையும், பார்த்த பார்வையையும் பார்த்து நான் அப்பவே சந்தேகப்பட்டேன். அது சரியாப் போச்சு. வீண் பழியை நம்மீது சுமத்திவிட்டுப் போயிட்டாளே!'' என்று கூறியபோது கமலாவுக்கு ஆத்திரத்துடன் அழுகையும் வந்துவிட்டது.

''இந்தப் பெட்டியை ஒரு நிமிஷம் கூட இனிமேல் இங்கே வைச்சிருக்கக் கூடாது. போலீசார் நம்மைப் பிடிக்கிறதுக்கு முன்னே நாமே அவர்களிடத்திலே இதைக் கொடுத்து விடவேண்டும்'' என்று துடித்தான் சங்கர்.

''இப்படி யோசனை இல்லாமல் இருக்கிற நிலைதான் நீங்களாகவே போய் ஒவ்வொரு விஷயத்திலேயும் மாட்டிக்கிறேள். மாலதி இருக்கிற இடம் உங்களுக்குத் தெரியாது. அவள்தான் இந்தப் பெட்டியைக் கொண்டு வந்து வச்சாள் என்கிறதுக்கு ஆதாரம் இல்லே. உங்களையே குற்றவாளியாக்கிட்டால் என்ன செய்வேள்?'' என்று தன் கணவரின் வேகத்தை அடக்கினாள் கமலா.

உண்மையில் தான் ஒரு பேராபத்தில் சிக்கிக் கொண்டிருப்பதை அப்பொழுதுதான் உணர்ந்தான் சங்கர். அந்தப் பழிகாரி மீண்டும் தன்னை அழ வைத்து விட்டாளே என்று வெதும்பினான். அந்தப் பெட்டியை வீட்டினுள் வைத்திருக்கப் பிடிக்கவில்லை. போலீசில் ஒப்படைப்பதற்கான துணிவும் வரவில்லை.

''மாலதி எப்படியும் வருவாள். இவ்வளவு நகைகளை விட்டு விட்டுப் போய்விட மாட்டாள். கொஞ்சம் பொறுமையாக இருங்கள். அவளைக் கையும் களவுமாகப் பிடித்துக் கொடுத்து விடலாம்'' என்று அவனைத் தைரியப்படுத்தினாள் கமலா.

ஒன்றிரண்டு நாட்களாயின. மாலதி வரவில்லை. பாக்கியிருந்த எல்லாப் பத்திரிகைகளிலும் மாஜி நடிகை ரத்னா தேவியின் வீட்டில் நடந்த திருட்டைப் பற்றிப் பிரசுரித்துவிட்டன. இது சங்கரனின் அச்சத்தை உச்ச நிலைமைக்கே கொண்டு போய் விட்டது. யாரைப் பார்த்த போதிலும் யாருடன் பேசிய போதிலும் 'என்னிடம் நகைப் பெட்டி இருக்கும் விஷயம் தெரிந்து விட்டதோ அத

துரிதமாக. ஜாக்கிரதையாக. நிச்சயமாக.

எப்படி?

[illegible]

இந்த சிறப்பான பணி ஸதர்ன் ரோட்வேஸினால் எப்படி முடிகிறதென்றால்:

- [illegible]
- [illegible]
- [illegible]
- [illegible]
- 100 [illegible]

[illegible]



ஸதர்ன் ரோட்வேஸ்
பிரைவேட் லிமிடெட்
(இது ஒரு டி.வி.எஸ்
ஸ்தாபனம்)
மதுரை

TVS


இருமலே, போ!



''நம்ம முதலமைச்சர் கள்ளுக் கடையை எப்போ திறப்பாருங்கிற தைப் பத்தித்தானே நீ இப்போ நினைக்கிட்டிருக்கே?''

''அடே, கரெக்டா சொல்லிட் டியே எப்படி?''

''உன் தலைக்குமேல் இருக்கிற குறிகளைப் பார்த்தாலே தெரி யுதே!''

னால்தான் இப்படிப் பேசு கிருளே?'' என்று எண்ணி நடுங்கி ஒடுங்கினுன் சங்கர்.

''குட்மார்னிங் மிஸ்டர் சங்கர்!''—மாலதியின் குரலைக் கேட்டுத் தலையை நிமிர்த்தி ஞன் சங்கர். கவலேயோ கல வரமோ' காணப்படவில்லே. வழக்கம் போல் மிருந்த உற் சாகத்துடன் காணப்பட்டாள் அவள்.

'நெஞ்சழுத்தக்காரி! எப் படி நடிக்கிறுள்? எனக்கு ஒன்றும் தெரியாது என்று நினைத்துக் கொண்டிருக்கிறுள் போலிருக்கிறது' — ஆத்தி ரத்தை வெளிக்காட்டாமல் அசட்டுச் சிரிப்புச் சிரித்தான் சங்கரன்.

'' வாங்கோ ! வாங்கோ உட்காருங்கோ. அன்னிக்கு உங்களையாருன்னு தெரியாது. இப்போ தெரிஞ்சு போச்சு... உட்காருங்கோ, உட்கா ருங்கோ'' — பலவந்தமாக மாலதியின் தோளைப் பற்றி உட்கார வைத்தாள் கமலா.

''மறுபடியும் உங்களுக்குத் தொந்தரவு கொடுக்க நான் விரும்பல்லே... அன்னிக்கு இந்தப் பெட்டியை மறந்துபோய் வைச்சுட் டுப் போயிட்டேன்.''

''அவ்வளவு சீக்கிரம் விட்டு விடுவோமா? அன்னிக்குத்தான் ஏமாந்து போயிட்டோம். இன்னிக்கு விட மாட்டோம்...''

''எனக்கு அவசர வேலே இருக்கு. இன் ஞெரு சமயம் வரேன்'' என்று மூலையில் வைத் திருந்த பெட்டியை எடுத்துக் கொண்டு புறப் பட முயன்ருள் மாலதி.

சங்கர் சட்டென்று எழுந்து அவ்வறையின் கதவை மூடினுன். கமலா மாலதியின் கையைப் பற்றி நிறுத்தினுள்.

''உண்மையைச் சொல்லு. இந்தப் பெட்டி யாருடையது?'' என்று கடுங் கோபத்துடன் கேட்டான் சங்கர்.

''ஏன்?...வந்து...வந்து என்னுடையது தான்'' என்ருள் அவள் மிருந்த தைரியத் துடன்.

''இந்தப் பெட்டியில் என்ன இருக்கு சொல் லட்டுமா? மாஜி சினிமா நடிகை ரத்ன தேவி யின் நகைகள்தானே?''

''ஐயோ! பார்த்துட்டீங்களா?''

''நகைகளைத் திருடிண்டு வந்து எங்க தலையிலே கட்டிட்டுப் போகப் பார்த்தியா? உன்னைக் கையும் களவுமாப் பிடித்து போலீ சிலே ஒப்படைக்கத்தான் காத்துக்கிட்டிருக் கோம். சரியானபடி மாட்டிக்கிட்டே?''

''போலீஸ் வான் என் வீட்டு வாசலிலே வந்து நிக்கணும். போலீஸ் என்னைக் கைது செய்யணும். நான் விலங்கு போட்டுக்கிட்டுப் போகிறதைப் பார்த்து எல்லோரும் சிரிக்க ணும்தானே இப்படிச் செய்தே? உன்னைப் பார்த்து எல்லோரும் சிரிக்கும் படியா செய்யறேன், பாரு'' என்று ஆத்திரத்துடன் கூறிய வாறு போலீசுக்குப் போன் செய்ய ரிஸீவரைக் கையில் எடுத்தான் சங்கரன்.

மாலதி பாய்ந்து சென்று போன் டயலைக் கையினுல் மறைத்தவாறு, '' நான் உண்மையைச் சொல்லிட றேன் — உண்மையைச் சொல் லிடறேன். தயவு செய்து போலீசுக்குப் போன் செய்யா தீங்க. நான் பட்ட கஷ்ட மெல்லாம் வீணுப்போயிடும்'' என்று பதற்றத்துடன் கூறி யவாறு சங்கரனின் கரத்தி லிருந்த ரிஸீவரை வாங்கிப் போனின்மீது வைத்தாள்.

''நீங்க சொன்ன ரத்ன தேவியின் காரியதரிசிதான் நான்!''

''அதனுலேதான் தைரிய மாகத் திருடிண்டு வந்திருக் கையா?''

''இல்லே. உண்மையிலே நகைகள் திருட் டுப் போகல்லே.''

''என்ன?''

''ஆமாம். ஒரு காலத்திலே ரொம்பப் பிரபலமா இருந்த ரத்ன தேவியை இப்போ பலபேருக்குத் தெரியாது. எவ்வளவு முயன் றும் சான்ஸ் கிடைக்கல்லே. சினிமா உலகத் திலே முன்னுக்கு வரத் திறமையோட விளம்பரமும் தேவை. மாஜி சினிமா நடி கைக்கு பப்ளிஸிடி ஏற்பட வைக்கிறதுக்காக நான் செய்த ஏற்பாடுதான் இது. நகைகளைக் காணவில்லே என்று கம்ப்ளேண்டு கொடுத்த வளே நான்தான். நாளைக்கு நகைகள் கிடைத்துவிட்டன என்று போலீசில் சொல் லப்போகிறவளும் நான்தான். இரண்டுமூன்று நாட்களுக்கு நம்பிக்கையான ஒருவரிடம் இத் தப் பெட்டியைக் கொடுத்து வைக்க எண்ணி னேன். உங்கள் சந்திப்பைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டேன். என் திட்டம் நிறைவேறிவிட்டது. இந்த இரண்டு மூன்று நாட்களில் எத்தனை படாதிபதிகள் வந்து விட்டார்கள் தெரியுமா? ரத்ன தேவிக்கு மூன்று படங்களில் நடிக்கச் சான்ஸ் கிடைத்து விட்டது. 'அம்மா வேஷந்தான்! இருந்தாலும் பரவாயில்லே. அம்மா வேஷத்துக்குத்தானே ஒரு விளம்பரத் திருட்டு. அவ்வளவுதான்; தயவுசெய்து இந்த விஷயத்தை ரகசியமாக வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் உதவிக்கு நன்றி'' என்று கூறிவிட்டுக் கையில் நகைப் பெட்டியுடன் ஓட்டமும் நடையுமாக வெளி யேறினுள் மாலதி.

''இப்படியும் ஒரு விளம்பரமா? இவள் சொன்னது நிஜம்தானு?'' என்று வியப்புக் கடலில் மூழ்கினர் இருவரும்.

மறு நாள் பத்திரிகைகளில் வெளியான செய்திகள் மாலதி கூறியது நிஜந்தான் என்பதைப் பறைசாற்றின.

விளையாட்டு ஒரு வியாபாரமல்ல வியாபாரம் ஒரு விளையாட்டல்ல.

இவருக்கு இதுவும் தெரியும்

"நீங்கள் அமெரிக்காவுக்கு வந்து குடியேறுங்கள். டென்னிஸ் ஆடுங்கள். மிகப் பெரிய பதவியும் தருகிறோம்" என்று ஓர் அழைப்புக் கிடைத்தது. தனிப்பட்ட ஓர் அமெரிக்க நிறுவன அதிகாரி மூலமாக.

"உங்கள் அழைப்புக்கு மிக்க நன்றி. ஆதரவு காட்டியமைக்கும் மகிழ்ச்சி. எனது தாயகமான இந்தியாவை விட்டு நான் வர மாட்டேன்!" என்று மறுமொழி கூறிவிட்டார் டென்னிஸ் கிருஷ்ணன்.

டென்னிஸ் விளையாட்டில் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கும் கிருஷ்ணன், சென்னை மாநகரில் 'கால்காஸ்' எரிவாயு விற்பனை ஏஜண்டாகவும் விளங்குகிறார்.

"மிஸ்டர் கிருஷ்ணன்! உங்களுக்குச் சொந்தமாகத் தொழில் அல்லது வியாபாரம் செய்ய வேண்டுமென்று ஏன் தோன்றியது?" எனக் கேட்டேன்.

"அகில இந்திய டென்னிஸ் சங்கத்தின் தலைவராக இருந்து மறைந்த ராஜ்குமாரி அமிர்த கௌரிடம் ஒரு சமயம் நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தேன். 'எனக்கு ஒரு நல்ல வேலையில் சேர விருப்பம். எம். ஏ. பட்டம் பெற்ற நான் விளையாடிக் கொண்டே இருப்பதாவது?' என்றேன்..."

"அம்ருத கௌர் அவர்கள் வேலையில் சேரும்படி சொன்னாரா?"

"ஆம். அவர் சிபாரிசினால் கல்கத்தாவில் உள்ள பிர்லாவுக்குச் சொந்தமான சர்க்கரை ஆலை ஒன்றில் அதிகாரி வேலை கிடைத்தது. எனக்கு எல்லாச் சலுகைகளும் தந்தார்கள். எங்கு வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் விளையாடப் போகலாம். முழுச் சுதந்திரம் இருந்தும், எனக்கு வேலையில் நீடித்திருக்க விருப்பமில்லை!"

"ஏன் அப்படி?"

"விளையாட்டையே நான் ஒரு வியாபாரமாக்கியது போல் எனக்குத் தோன்றியது. பிடிக்கவில்லை. கே. கே. பிர்லாவிடம் ஒரு நாள் இதுபற்றிப் பேசினேன்..."

"அப்புறம் என்ன நடந்தது?"

"இந்தக் கட்டத்தில் ஒரு சமயம் நான் பம்பாய்க்குப் போயிருந்தேன். டென்னிஸ் சங்கத்தின் உதவித் தலைவராக இருக்கும் தரம்சே கட்டாவ் அவர்களுடன் ஒரு விருந்தில் அடுத்தடுத்து அமர்ந்து பேசிக் கொண்டிருந்தேன். அப்போதுதான் என் வாழ்க்கையிலேயே ஒரு திருப்பம் ஏற்பட்டது!"

"மேலும் சொல்லுங்கள்" என்றேன்.

"'சொந்தமாக ஏதேனும் செய்ய ஆர்வமாக இருக்கிறேன்' எனச் சொன்னதுதான் தாமதம், 'என்ன திட்டம் வைத்திருக்கிறாய்?' என்று அவர் கேட்டார். பதில் கூறாமல் யோசித்துக் கொண்டிருந்தேன். உடனே அவரே ஒரு யோசனை சொல்லி; பதினைந்து நாட்கள் அதுபற்றிச் சிந்திக்கச் சொன்னார்... மகிழ்ச்சியுடன் தலையசைத்தேன்.

"பதினைந்தாவது நாள் கட்டாவ் அவர்களிடமிருந்து அழைப்பு வந்தது. தரம்சே கட்டாவும் அவரது மாப்பிள்ளை பி. ஆர். கோகுல்தாஸும் சேர்ந்து அகில இந்தியாவுக்கும் எரிவாயு விற்பனைக்கு உரிமை பெற்றிருந்தார்கள். டென்மார்க்கைச் சேர்ந்த ஒரு நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தார்கள். சென்னை மாநகரைப் பொறுத்தவரை விநியோக உரிமையை எனக்குத் தருவதாகச் சொன்னார்கள். உடனே ஒப்புக்கொண்டேன்! இதுதான் நான் ஏஜென்சி தொடங்கிய கதை."

"காஸ் அடுப்புகள் சென்னையில் உள்ள பெண்மணிகளுக்கு அறிமுகமாகாமலிருந்ததே, எப்படி நீங்கள் பிரபலப்படுத்தினீர்கள்?"

"1963க்குப் பிறகே நான் இந்த வியாபாரத்தில் ஈடுபட்டேன். காஸ் பற்றி எனக்கு எதுவும் தெரியாமல் இருந்தது. மூன்று மாதங்கள் பம்பாயில் இருந்து பயிற்சி பெற்றேன். சிலிண்டர் மெகானிசம், பழுது பார்த்தல், பாதுகாப்புடன் உபயோகித்தல், பராமரித்தல், விற்பனை செய்யும்போது வாடிக்கையாளரை அணுகும் முறைகள் யாவும் எனக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டன. கட்டாவ் அவர்களும் அவரது மாப்பிள்ளை கோகுல்தாஸ் அவர்களும் இதற்கெல்லாம் ஏற்பாடு செய்திருந்தார்கள். குடும்பத்து மனிதன் போல என்னை நடத்தினார்கள்."

"சென்னையில் முதன் முதலில் யாருக்கு விற்பனை செய்தீர்கள்?"

"திரு எம். ஏ. சிதம்பரம் செட்டியார் பங்களாவில் ஏற்றிக் காண்பித்தேன்!"

"பிறகு விற்பனை சுலபமாக நடந்ததா?"

"ஆரம்பத்தில் ரொம்பக் கஷ்டமாகத்தான் இருந்தது. நானும் என் மனைவி லலிதாவும் காஸ் அடுப்புகளை விற்க வீடு வீடாக ஏறி இறங்கினோம்!... பல தோல்விகள்! வியாபாரம் என்பது விளையாட்டல்ல என்று புரிந்தது. நானே சேல்ஸ்மென், மெக்கானிக், டெலிவரி ஆள் எல்லாம்! இம்முயற்சிகளின் பலன் சமீப காலமாகத்தான் ஏற்பட்டிருக்கிறது! இன்று மூப்பதாயிரம் இல்லங்களில் 'கால் காஸ்' அடுப்புகள் இருக்கின்றன!... முதல் அமைச்சர் கருணாநிதி வீடு முதல், மாம்பலத்தில் வசிக்கும் என். ஜீ. ஓ. வீடு வரையில் எனக்கு வாடிக்கையாளர்கள் உள்ளனர்" என்றார் கிருஷ்ணன் சற்றுப் பெருமிதம் நிறைந்த குரலில்.

— ஏ. சுவாமிநாதன்





உங்கள்
எண்ணங்களுக்கு
வண்ணம் கொடுப்பது
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறித் துணிகள்
தீபாவளிக்கு
விசேஷ 10% தள்ளுபடி
(தமிழக அரசு
ஏற்றுக்கொள்கிறது)
அக்டோபர் 1 முதல் 30 தேதி வரையில் தமிழ்நாடு மேலும்
பாண்டிச்சேரியில் 10% தள்ளுபடி அமுலில் இருக்கும்.
தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்,
பாலசுந்தரம் பில்டிங்ஸ், எழும்பூர், சென்னை-8.
Criterion CO 2471 TM



பெட்டி மன்றம்

'மேஜு'

தென்னிந்தியப் பெட்டி தயாரிப்பாளர்கள் ஆண்டு விழா அண்மையில் வெகு சிறப்பாக நடந்தது. அட்டை, தகர, இரும்புப் பெட்டிகள் தயாரிப்போர் இச்சம்மேளனத்தின் அங்கத்தினர்கள். விழாவின் போது பெட்டி மன்றம் ஒரு சிறப்பான நிகழ்ச்சி. காதலர்கள் கைப்பெட்டி, குழந்தைகளுக்கான பள்ளிப் பெட்டி, சமய நூல்களை வைத்துப் பாதுகாக்கும் சமயப் பெட்டி ஆகியவற்றில் எது சிறந்த தயாரிப்பு என்பதே பெட்டி மன்றத்தின் பேச்சுப் பொருளாக எடுத்துக்கொள்ளப் பட்டது. பிரபல பெட்டி தயாரிப்பாளர் கந்தப்பனாரின் தொழிலகத்தில் உருவாகும் இம்மூவகைப் பெட்டிகளும் விவாதத்துக்கு உள்ளாயின.

பெட்டி மன்றத் தலைவர் சிவானந்தம் அரங்கத்தின் ஆரவாரத்தை அடக்கியவாறு எழுந்து பேச ஆரம்பித்தார்.

சிவானந்தம்: அவையோர்களே! அன்பர்களே! இன்றையப் பெட்டி மன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கும் விஷயம் கொஞ்சம் கெட்டியானது. காதலர்கள் கைப்பெட்டியே மற்றவைகளைவிடச் சிறந்தது என்று கலகலப்புடன் பேச நண்பர் அர்ஜுனன் துடித்துக் கொண்டிருக்கிறார்.. அவரை ஒட்டிப் பேச ஒரு குழுவே இருக்கிறது. பள்ளிப் பெட்டியே பல வகைகளிலும் மேன்மையானது என்று பறைசாற்ற நண்பர் குழந்தையப்பன் பரபரப்புடன் அமர்ந்திருக்கிறார். அவருக்குப் பின்னும் ஒரு படை அமர்ந்திருக்கிறது. சமயப் பெட்டியே சாலச் சிறந்தது என்று சந்தேகத்துக்கு இடம் கொடுக்காமல் சாதிக்கச் சாமியப்பன் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருக்கிறார். அவருக்கும் பக்க பலம் உண்டு. மூன்று கட்சியினரும் இப்போது தங்கள் வாதத் திறமையையோ, பிடிவாதத் திறமையையோ உங்களுக்கு நிரூபித்துக் காட்டப் போகிறார்கள். இந்த நிலையில் நான் இப் பெட்டிகளைப் பற்றி ஏதாவது குறிப்பிட்டால் நான் ஏதோ சாதகமாகக் குறிப்புக் கொடுத்து விட்டதாக நினைத்து என்னையே குதறி விடுவார்கள். ஆகவே நான் என் முன்னுரையை முடித்துக் கொண்டு அர்ஜுனன் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

அர்ஜுனன்: நல்ல தீர்ப்பை வழங்கவிருக்கும் நடுவர் அவர்களே! நண்பர்களே! இந்தப் பரந்த உலகத்திலே பலர் உள்ளங்களையும் கிறுகிறுக்க வைக்கும் சக்தி ஒன்றே ஒன்றுக்குத்தான் உண்டு. அதுதான் காதல்!


மகாகவி பாரதி என்ன சொல்லியிருக்கிறார்?

காதல், காதல், காதல்
காதல் போயிற் காதல் போயிற்
சாதல், சாதல், சாதல்

என்றார்! காதல் உணர்ச்சி பெறாத மனிதர் செத்த பிணத்துக்குச் சமானம் என்று நான் வேறு விளக்கம் கொடுக்க வேண்டுமா? துடிப்பு நிறைந்த துன்பம் மறந்த காதலர்கள் தங்கள் உள்ளங்களிலே இன்ப உணர்ச்சிகளுக்கு நிறைய இடம்கொடுத்துக் கைகளிலே கனமில்லாமல் அத்தியாவசியமான குறைந்த பொருள்களை உள்ளடக்கும் வசதிக்குப் புதுமுறை சூட்கேஸ்கள் தயாராகியுள்ளன. அவைதாம் சிறந்தன. பள்ளிப்பெட்டி என்பது கள்ளிப் பெட்டி போல ஒலிக்கிறது. சமயப் பெட்டி சமையல் பெட்டியாக ஐந்தரைப் பெட்டியாகக் காட்சி யளிக்கின்றது. யாருக்கு வேண்டும் அவையெல்லாம்! எனக்கு எதிராக வாதிட வந்திருக்கும் நண்பர்கள், குழந்தைச் செல்வமே கோபுர உயர்வு என்பார்கள்! சமய உபாசனையே சங்கடம் தீர்க்கும் என்பார்கள்! அதையெல்லாம் நீங்கள் நம்ப மாட்டீர்கள்! எனக்குத் தெரியும். இப்போது நடுவராக வீற்றிருக்கும் நம் மதிப்புக்குரிய சிவானந்தம், தம் பேனா, பேப்பர்கள், வெற்றிலை சீவல் எல்லாவற்றையும் எந்தப் பெட்டியில் வைத்து லாகவமாக இங்கு கொண்டு வந்திருக்கிறார்; தெரியுமா? கந்தப்பனார் நிறு

வனத்தின் காதலர் கைப்பெட்டியிலேதான்! வயதுக்கும் அந்தப் பெட்டிக்கும் சம்பந்த மில்லை. வசதிக்கும் அதற்கும்தான் உறவு என்று அவர் ஒப்புக் கொண்டால் அதுவும் என் கட்சிக்கே ஆதரவாக முடியும்!

குழந்தையப்பன்: தலைவர் அவர்களே! பல மழலைச் செல்வங்களுக்குப் பெற்றோர்களாகும் அதிருஷ்டம் பெற்ற பெருங்குடி மக்களே! என் நண்பர் அர்ஜுனன்... ஆம்! அவருடைய நினைவுகளும் உணர்ச்சிகளும் மகாபாரத காலத் திலேயே நிற்கின்றன. — உங்கள் முன் ஏதோ காதல் கனவுகள் கண்டார்! அந்தக் கனவுப் போதையில் தொடர்பில்லாமல் பேசினார்! வாழ்க்கையில் எத்தனையோ உணர்ச்சிகளில் காதல் என்பது எங்கோ ஓர் ஓரத்தில் பதுங்கிக்



கொண்டிருக்கும் ஒரு சிறிய உணர்ச்சி! வாழ்க் கையின் ஆரம்பத்தில் ஒரு மனிதன், அதாவது பள்ளிப் பருவத்தில் தான் கற்பதை யெல்லாம் சீராகக் கற்று நல்லதை மனத்தில் பதித்து மற்றதை ஒதுக்கத் தெரிந்துகொள்ளும்போது அவனுடைய பிற்கால வாழ்க்கைப் பாதை செப்பனிடப்படுகிறது. அந்தப் பருவத்தில் அந்த மாணவனோ, மாணவியோ உபயோகிக் கும் கைப்பெட்டி புத்தகங்களுக்கு மாத்திரம் அடைக்கலம் கொடுக்கவில்லை. புத்திசாலித் தனத்துக்குமே அடைக்கலம் கொடுக்கிறது.

'குழந்தைச் செல்வமே கோபுர உயர்வு என்பார்கள். நம்பாதீர்கள்' என்று ஏதோ தேர் தல் பிரசாரம் மாதிரி நண்பர் அர்ஜுனன் சொன்னார். அவர் குறிப்பிட்ட மகா கவி பாரதி குழந்தைகளைப் பற்றி என்ன சொன் னார் என்பதைக் கூறச் சௌகரியமாக மறந்து போய்விட்டார்!

பாதகம் செய்பவரைக் கண்டால் - நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா!
மோதி மிதித்துவிடு பாப்பா - அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா!


என்றார்! பாவம் அர்ஜுனன்! அவரை ஒன்றும் செய்துவிடாதீர்கள். எனக்குத் தெரிந்த பள் ளிக்கூடத்தில் சமீபத்தில் ஒரு புள்ளி விவரம் வெளியிட்டார்கள். ''கந்தப்பனூர் பள்ளிப் பெட்டிகளை உபயோகித்த மாணவர் கள் நூற்றி எண்பத்து ஆறு பேர்களில் இறுதிப் பரீட்சையில் நூற்றி எண்பத்தி ஐந்து பேர்கள் வெற்றிபெற்றார்களாம்! ஒரு பையன் மாத்திரம்!... பாவம், பெட்டியைக் காணமற் போக்கிவிட்ட கவலையில் பரீட்சைக்கே வரவில்லை! இன்னொரு சமாசாரம்! நேற்று பத்திரி கையில் வந்திருந்தது. நகர பாங்கி ஒன்றில் ரூபாய் நோட்டுக்களை அபேஸ் பண்ணிக்கொண்டு ஓடிய நபரை அம் பத்தூர் வரை துரத்திப் போய்ப் பிடித்தார்கள். அவன் திருடிய நோட்டுக் களை யெல்லாம் ஒரு கைப்பெட்டியில் திணித்து வைத்திருந்தானாம்! அந் தப் பெட்டி கந்தப்பனூர் நிறுவனத்தின் காதலர் கைப்பெட்டி ரகம்!... இப்போது என்ன சொல்கிறீர்கள்?... தலைவர் தம் கைப் பெட்டியைக் கவனிக்கிறார்! பள் ளிப் பெட்டியே பலவிதத்திலும் உயர்ந்தது என்று கூறி விடைபெறுகிறேன்.

சாமியப்பன்: நம: பார்வதி பதயே!.... அப்பா! மெத்த மகிழ்ச்சி! மெத்த நன்றி! இங்கே கூடியிருந்த அனைவரும் தங்களை மறந்து 'ஹர ஹர மகாதேவா!' என்று உள்ளம் நிறைந்த குரலை எழுப்பினீர்கள்! இதுதான் சமய உணர்ச்சியின் அற்புத சக்தி! இது உங்களுக்குத் தெரியும். என் நண்பர் அர் ஜுனனுக்குத் தெரியாது! அவர் மாத்திரம் தம் பேச்சின் தொடக்கத்தில் என்னைப் போல ஆரம்பிக்க வேண்டும் என்று 'காதல் வாழ்க' என்று ஆட்டுத்தனமாகக் குரல் எழுப்பி யிருந்தால் என்ன நடந்திருக்கும்? எத்த னையோ வாழைப்பழத் தோல்களும், குப் பைக் கடுதாசிப் பந்துகளும் அவர்மேல் 'வீழ்க!' தந்திருக்கும்! பாவம்!... இருந்

லிப்டன் ரூபி டஸ்ட்

தூள் தேயிலைகளில் ஒப்புயர்வற்ற மன்னன்

போட்ட கணமே கெட்டியாகக் கிட்டிடும் தேநீர்.
நல்ல நிறத்துடன் நிறைந்த ருசி—இதுவே ரூபி டஸ்ட்,
தூள் தேயிலைகளில் ஒப்புயர்வற்ற மன்னன்.
ரூபி டஸ்ட் சிக்கனமானதும் கூட. மற்றெந்த தூள் தேயிலையையும்
விட அதிக அளவு கோப்பைகளைக் கொடுக்கிறது.
இன்றே ரூபி டஸ்ட் பாக்கெட் ஒன்று வாங்குங்கள்.



லிப்டன் என்றாலே நல்ல டீ

LRDC-2 TAM

இருந்து பாரதியாரின் சர்வ சாதாரணமான குயில் பாட்டுத்தானா அவருக்குத் துணை வந்தது? காதலாம்! சாதலாம்! என்னையா அந்தக் காதல் பெட்டி?... ஒரு நைலான் புடவை வைக்கூட வைக்க முடியாத பெட்டி? பெரிசா பத்து ஸ்பென்ஸர் கருட்டை வேணும்னு போட்டு வைக்கலாம்!... ஆனால் இந்தச் சமயப் பெட்டி இருக்கே! அதில் சாம்ராஜ்யங்களையே அடக்கலாம்! ஆமாம்! ஹஸ்தினாபுரியையே அடக்கலாம்! அயோத்தியாபுரியையும் லங்காபுரியையுமே அமுக்கலாம்! மனித வாழ்க்கை உயர அவனுக்குச் சமய உணர்ச்சி தேவை. அந்தச் சமய உணர்ச்சியைப் பெருக்க ஒரு ராமாயண காவியமோ, மகாபாரதமோ, பெரிய புராணமோ, திருவாசகமோ போதும். கந்தப்பனாரின் சமயப் பெட்டி இருக்கிறதே!.. நண்பர் அர்ஜுனன் சமையல் பெட்டி என்று





கிண்டல் செய்தாரே! பாவம், அவருக்கு எதுவுமே மசாலா வாசனை விஷம்போலிருக்கு. அந்தப் பெட்டியில் இரண்டு புத்தகங்களை எடுத்து வைத்துக் கொண்டு நீங்கள் கிளம்பினால் ஒரு பிரயாணம் செய்து விட்டுத் திரும்பும்போது உங்கள் உள்ளத் தூய்மை பன்மடங்கு அதிகரித்திருக்கும்! இன்று நாட்டில் உணவுத் தேவையை விட உள்ளத் தூய்மைத் தேவையே அதிகம். இதற்கு உதவுவது இறையுணர்ச்சி நிறைந்த புத்தகங்களை ஓரங்கள் மடியாமல் பாதுகாக்கும் கந்தப்பனாரின் சமயப் பெட்டியே! குழந்தைகளைப் பெற்றுப் பள்ளிப் பெட்டிகள் வாங்கிக் கொடுத்துப் பள்ளிக்கு அனுப்புவது ரொம்பச் சுலபம். ஆனால் தன் மனசு குழம்பாமல், தத்தளிக்காமல் குழழமல் பாதுகாப்பது மிகக் கடினம். அதற்கு உதவுவது சமய உணர்ச்சி. அதற்குத் தேவையானது சமய நூல்கள். அதைக் கைக்கு அடக்கமாகப் பாதுகாப்பது கந்தப்பனாரின் சமயப் பெட்டியே!.. தலைவர் மணி அடித்துவிட்டார். அதுவே நல்ல சகுனம்! வணக்கம்.

அழகம்மையார்: காதலர் கைப்பெட்டிக் கட்சியின் சார்பில் பேச வந்திருக்கும் நான் முதலில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நண்பர் குழந்தையப்பன் பாரதியாரைத் துணைக்கு அழைத்து, 'மோதி மிதித்து விடு, பாப்பா — அவர் முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா' என்றார்! டிரில் டிராயிங் மாஸ்டர்கள் போல அவர் ஒரு வேளை சிறுவர்களுக்குப் பள்ளிப் பருவத்திலேயே வன்முறைப் பயிற்சியளிக்கும் நாக்ஸலைட் மாஸ்டரோ என்ற ஐயப்பாடு எழுகிறது.....

சின்னப்பன்: பள்ளிப் பெட்டிக் கட்சியின் சார்பில் பேச வந்திருக்கும் நான், நண்பர் சாமியப்பனைப் பார்த்துப் பரிதாபப்படுகிறேன். ஏதோ பஜனை மடத்துக்குப் போக வேண்டியவர் வழி தவறி இந்தப் பெட்டி மன்றத்துக்கு வந்திருப்பார் போலிருக்கிறது. ஒரு பெரிய கர்சீப் வைத்துக் கொள்ள முடியாத காதலர் கைப்பெட்டியும், அலுத்துப் போன பழம் புராணக் குப்பையைப் பாதுகாக்கும் பஞ்சாங்கத்தனமான சமயப் பெட்டியும் இன்றைய நாட்டின் நிலைமைக்கு உகந்ததா என்று கேட்கிறேன்.....

மங்கையர்க்கரசியார்:

மந்திர வேதங்களாம் -
தர்க்க
வாதங்களாம்;
நவநீதங்களாம்
செந்தமிழ் மறமுண்டாம்-
எனிற்
சேர்ந்திடும் கலிசெயும்
மறமுமுண்டாம்;

என்று பாஞ்சாலி சபத காவியத்தின் தொடக்கத்திலே பாரதி பாடினான். நான் அறத்தின் சார்பிலே பேச நிற்கிறேன். மறத்தின் சார்பிலே, நண்பர்கள் அர்ஜுனனும் குழந்தையப்பனும் பேசினார்கள்... நான் பாண்டவர் பக்கம் நிற்பவன். அவர்கள் கௌரவர் பக்கம் நிற்பவர்கள். அதனால்தான் பேச்சில் கௌரவம் குறைந்திருக்கிறது.......

இந்திரா மணாளன் : கவி பாரதியோட ஒரிஜினல் கற்பனை, குயில் பாட்டிலேதான்! பாஞ்சாலி சபதத்திலே இல்லே! பாப்பா பாட்டிலே இல்லே. குயில் பாட்டு ஒரு காதல் காவியம்! கந்தப்பனாரின் காதலர் கைப்பெட்டி ஒரு காவியத் தயாரிப்பு.

பாலராஜன்: பாரதியின் குயில் பாட்டு ஒரு புலம்பல்! ஒப்பாரி! பாஞ்சாலி சபதம்,

மூர்த்தி சிறிது....



லால்பகதூர் சாஸ்திரியை பொதுக் கூட்டத்தில் பேச்சாளர் ஒருவர் "சமாதானத் தூதுவர்" என்று பாராட்டினாராம். அடுத்துப் பேசிய சாஸ்திரி "என் உடம்பைப் பாருங்கள், நான் சமாதானத் தூதுவனாக இல்லாமல் சண்டைக்காரனாகவா இருப்பேன்" என்றாராம் சிரித்துக் கொண்டே.

ஒரு தடவை லால்பகதூர் சாஸ்திரியைக் குழந்தைகள் கூட்டம் ஒன்றுக்கு அழைத்து வந்தார்களாம். அங்கே அவர் குழந்தைகளைப் பார்த்து, "என்னுடைய சிறிய உருவத்தைக் கண்டுதான் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் தகுதி எனக்கு இருப்பதாகக் கருதி என்னை அழைத்திருக்க வேண்டும்" என்றாராம்.

நைனிதால் சிறையில் சாஸ்திரியும், நேருவும் ஒன்றாக இருந்தனர். அப்போது சிறைக்குள் "பாட் மின்டன்" விளையாட்டு நடைபெறுமாம். பெரும்பாலும் இருவரும் எதிர் எதிர்க் கட்சிகளில் இருந்துதான் விளையாடுவார்களாம். ஒவ்வொரு தடவையும் நேரு மிகவும் எளிதில் தோற்கடிக்கப்படுவாராம்.

லால்பகதூர் சாஸ்திரி அடிக்கடி குருநானக்கின் ஒரு கவிதையை உரக்கப் படித்து மனத் திடம் பெறுவாராம்.

அப்பாடலின் கருத்து: "ஓ நானக்! சிறியவனாகவே இரு: புல்லைப் போலச் சிறியவனாகவே இரு! மற்றத் தாவரங்கள் மறைந்துவிடும். புல் எந்தக் காலத்தும் அழியாமல் பசுமையாகவே விளங்கும்."

தொகுப்பு: மணி

ஒரு பழைய கதையின் காப்பி! பாப்பா பாட்டு துடிதுடிக்கும் உணர்ச்சிப் பிழம்பு. அது போலக் கந்தப்பனாரின் பள்ளிப் பெட்டி, ஒரு பளபளப்பான தயாரிப்பு.

வேதராமன்: ஐயகோ! அநியாயம்! காதல் சிரஞ்சீவத்துவம் பெற்றதில்லை! பள்ளிப் பருவம் சில வருஷம்! மனிதன் வாழ் நாள் முழுதும் நடக்கத் துணை தருவது இதிகாச போதனே. பாஞ்சாலி சபதத்தை.... அதாவது மகாபாரதத்தைத் தழுவிக் கவிதை எழுதியிருக்காவிடில், இன்று பாரதி யார் என்றுதான் கேட்பார்களே தவிர பாரதியார் என்று பண்புடன் சொல்லியிருக்க முடியாது.

(கூட்டத்தில் சலசலப்பு ஒரு வயோதிகர் தடிக் கம்பை ஊன்றிக்கொண்டு முன்னால் வந்தார் அமைதி நிலவியது.)

முதியவர்: இது என்னுங்க, அக்கிரமமாயிருக்கு! நான் அந்தக் காலத்திலே பட்டறை ஆரம்பிச்ச போது எல்லாருக்கும் எல்லா நேரத்திலும் உபயோகப்படணும்னு பலரகப் பெட்டிகள் தயார் பண்ணினேன். என் பையன்கள் அதுகளுக்கு என்னவோ பேர் வைச்சாங்க! நல்லா வியாபாரம் ஆகுது! இப்போ, நான் என்டாப்பா, அந்தப் பெட்டிகளைத் தயார்ப் பண்ணினேம்ங்கற அளவுக்கு, மாறி மாறி என் கம்பெனிப் பெட்டிகளைப் பேச்சாலே உடைக்கிறீங்களே! உங்களுக்கு வேறே வேலே இல்லே? பாவம்! அந்தச் சுப்பிரமணிய பாரதியாரையும் எனக்குத் துணையா நிறுத்தி தாக்கறீங்க! இந்தக் காலத்திலே இது ஃபாஷனு? என் பெட்டிகளெல்லாமே வெவ்வேறே சூழ்நிலைக்குப் பொருத்தமான பெட்டிகள்! அது போலத்தான் பாரதியாரோட கவிதைகளும்! புரிஞ்சுதா?

தலைவர்: நான் முடிவுரையில் கூற நினைத்ததை இப்போது கந்தப்பனாரே தெளிவாகக் கூறி விட்டார்கள்! நன்றி!

(கூட்டம் முடிந்தது)

□ □ □ □ □ □ □ □ □ □ □ □ □ □ □ □ □ □

"நன்றி சொல்கிறீர்களே! எதற்கு நன்றி?"

"நான் ஏதோ குருட்டு யோசனையில் இருந்தேன். என் காலை மிதித்து நான் இறங்க வேண்டிய இடம் வந்துவிட்டதை நினைவு படுத்தினீர்களே, அதற்காக!"



வட்ட மேஜை

★ இக்கடிதம் ரூ. 15-- பரிசு பெறுகிறது.

மாஸ்கோவில் நம் ராஷ்டிரபதி சோவி யத் ஜனாதிபதியுடன் பேசும்போது ருஷ்யா பிர சுரித்துள்ள இந்தியாவின் தேசப் படம் விஷய மாகச் சொன்னார். மேற்படி படத்தின் பிர சுரம் இந்தியாவில் உள்ள எதிர் கட்சிகளுக்குப் பேச இடம் கொடுத்து ஆட்சியினரைச் சங் கடத்துக்கு உள்ளாக்குவதாய் இருக்கிறது என்று கூறியிருப்பது மிகவும் வருந்தத் தக்கது. மேற்படி படத்தை சோவியத் ருஷ்யா பிர சுரித்துள்ளது பற்றி ஆளும் கட்சிக்கோ, அரசுக்கோ நமது ராஷ்டிரபதிக்கோ குறை கூறத் துணிவும் இஷ்டமுமில்லை போலும்!

சென்னை

25—9—70 பா. ராஜகோபாலன்

★ சிறிய அளவில் ஏராளமான தொழிற் சாலைகள் தமிழகத்தில் உருவானால்தான் வேலையற்றிருக்கும் லட்சக் கணக்கானவர் களில் ஒருசிலருக்காவது வேலை கிட்டும். தமிழகத்தில் காகிதம், மருந்து வகைகள் வாசனைப் பொருள்கள், பால் உணவுப் பொருள்கள், கடிகாரச் சாமான்கள், சோப்பு போன்ற பொருள்கள் ஆகியவை தயார் செய்யும் தொழிற்சாலைகள் போதிய அளவு இல்லை. அப்படிப்பட்ட இந்நிலையில் 'சிகரெட் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தப் போவ தாகத் தமிழக அரசு கூறியுள்ளது. இதனால் தான் அதிக லாபம் கிடைக்குமாம். மேலும் மதுபானம் தயார் செய்யும் தொழிற்சாலை யைத் தமிழகத்தில் நிறுவுவதற்காக, தமிழக அரசு மத்திய அரசை அனுமதி கேட்டுள்ளது.

மிகவும் அத்தியாவசியமான பொருள்கள் தயார் செய்யும் தொழிற்சாலைகள் இல்லாத இந்நிலையில் உடல் வளத்தையும் மன வளத் தையும் கெடுக்கக் கூடிய சிகரெட் தொழிற் சாலையும், மதுபானத் தொழிற்சாலையும்தானா அரசு அமைக்க வேண்டும்?

சென்னை—1

26—9—70 எம். ராமமூர்த்தி

பகுத்தறிவாளர் சங்கம் (The Rationalists Forum) என்ற குழுவைத் தொடங்கி வைத்த தமிழகக் கல்வி அமைச்சர் திரு நெடுஞ் செழியன் இந்துக்களின் கடவுள் வழிபாட்டு முறைகளைக் குறை கூறியிருக்கிறார். தேங்காய் உடைப்பதும் கற்பூரம் கொளுத்துவதும் பகுத் தறிவுக்கு ஒவ்வாதவை எனவும், மக்கள் தம் பொன்னான நேரத்தை இத்தகைய செயல் களில் வீணாக்கி வருகின்றனர் என்றும் கூறியுள் ளார். தி.மு.க. அமைச்சர்கள் பலர் பொதுக் கூட்டங்களுக்கும் அதிகாரபூர்வமான கூட்டங் களுக்கும் தாமதித்து வருவது தெரிந்ததே. மக்களும் அதிகாரிகளும் மந்திரிகள் வரவுக்கு நெடு நேரம் காக்க நேரிடுகிறது. கடவுளுக்குத் தேங்காய் உடைக்கும் நேரம் வீண் என்றால், மந்திரிகள் வரவுக்காகப் பல மணி நேரம் காக்க நேருகிறதே அதை என்ன என்பது?

திருநெல்வேலி

14—9—70 ஆர். அனந்தராம கிருஷ்ணன்

"தமிழ்நாடு அரசு, தமிழ் மொழி, கலை, பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சிக்கு இன்று ஆற்றி வரும் தொண்டுகளை எழுதுக."

9—9—70 அன்று நடந்த தமிழ் நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் (பி.ஏ. தரம்) பரீட்சைக் கேள்வித் தாளில் மேற்காணும் கேள்வியும் இடம் பெற்றுள்ளது.

விடைத் தாளைத் திருத்துபவர் இன்றைய தமிழ் நாடு அரசின் போக்கு பிடிக்காதவராக இருந்தால் அரசைப் பாராட்டி விடை எழுது கிறவரின் கதி என்னாகும்? அல்லது தாளைத் திருத்துகிறவர் தீவிர தி. மு. க. அனுதாபி யாக இருந்து, விடை எழுதுகிறவர் பாராட்ட மனமின்றி அரைகுறையாகச் சொல்லி யிருந்தால் அவருடைய கதி அதோ கதிதான்.

நீதித் துறையினரைப் போலவே கட்சிப் பாகுபாடின்றி இயங்க வேண்டிய சர்வீஸ் கமிஷன் இது போன்ற சர்ச்சைக்கு இடமான விஷயங்களைப் பற்றிக் கேள்வி கேட்கும் அள வுக்குத் தாழ்ந்து விட்டது வருந்தத்தக்கது.

சென்னை—1

9—9—70 ஆனார் ஜலால்

இங்குள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளி யில் 21—9—70 அன்று பதினோராம் வகுப்புக் குத் தமிழ் இரண்டாம் தாள் தேர்வு நடை பெற்றது. அந்த வினாத்தாளில் 'தமிழக அரசு பரிசுச் சீட்டுக் குலுக்கலில் உனக்கு ரூபாய் நூறாயிரம் பரிசு கிடைத்தால் என்ன செய்வாய்?' என்பதுபற்றி இரண்டுபக்கம் ஒரு கட்டுரை எழுதும்படி கேட்கப்பட்டிருந்தது.

இப்படிப்பட்ட வினாவினை எழுப்பி வருங் கால மன்னர்களின் நெஞ்சங்களில் நஞ்சு பாய்ச்சலாமா? அரசு பாடப் புத்தகங்களை யும் வினாத் தாள்களையும் பிரசாரக் கருவிக ளாகக் கருத வேண்டாம்.

இராசிபுரம்,

22—9—70 இரா. கிருஷ்ணமூர்த்தி.

நான் கடந்த பத்து வருஷங்களாக சிங் கப்பூரில் இருந்துவிட்டுப் போன மாசம்தான் சென்னைக்கு வந்தேன். சைதாப்பேட்டை, கோடம்பாக்கம், பழைய மாம்பலம், இன் னும் பல இடங்களில் பத்து வருஷங்களுக்கு முன்பு இருந்ததை விட சாக்கடைத் தண்ணீர் தேங்கி மிகவும் துர்நாற்றமடிக்கிறது. சென் னையில் உள்ள அவ்வளவு குப்பைகளும் நுங்கம் பாக்கம் ஆர்க்காடு ரோடு சந்திப்பில் மலை போல் காட்சி! அதைவிட மோசமாகக் காட்சி யளிப்பது பிளாட்பாரத்திலேயே குடிசைகளை யும் போட்டுக்கொண்டு அந்த நாற்றத்தில் எப்படித்தான் குடித்தனம் செய்கிறார்களோ! இதற்கெல்லாம் விமோசனம் என்று?

பெங்களூர்,

19—9—70 ஆர். கோபால ஐயர்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam



இருமலும் ஜலதோஷமும் உங்களைப் பலவீனப்படுத்தும்—இதர நோய்கள் பாதிக்கவும் இடமளிக்கும்

வாடர்பரீஸ் காம்பவுண்ட் அருந்தி ஆரோக்கியமாகவும் சக்தியுடனும் திகழுங்கள்



இருமலும் ஜலதோஷமும் உங்களைப் பலவீனப்படுத்தி நோய்களை எதிர்க்கும் சக்தியைக் குறைப்பதால், உங்களை இதர நோய்கள் பாதிக்கக்கூடும். எனவே சிவப்பு லேபிள் கொண்ட வாடர்பரீஸ் காம்பவுண்ட் ஒழுங்காக சாப்பிட்டு வாருங்கள். பசியைத் தூண்டி, இழந்த சக்தியை மீட்டு, உடலுக்கு நோய்த் தடுப்புச் சக்தியை அளிக்கும் பல ஊட்டப் பொருள்கள் அடங்கியது சிவப்பு லேபிள் வாடர்பரீஸ். அதிலுள்ள 'க்ரியோஸோட்' மற்றும் 'குவாகால்' இருமலிலிருந்தும் ஜலதோஷத்திலிருந்தும் துரிதநிவாரணம் அளிக்கின்றன. இக்காரணங்களாலே, சிவப்பு லேபிள் வாடர்பரீஸ் சக்தியையும் ஆரோக்கியத்தையும் காப்பாற்றுவதில் ஒப்பற்றதாக இருக்கிறது.

வாடர்பரீஸ் காம்பவுண்ட் — மிகவும் நம்பப்படும் டானிக்

வார்னர்-லாம்பெர்ட்டின் சிறந்த தயாரிப்பு

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

